கிரியா பாபாஜி அன்பகம், கனடா
யோக வாழ்வு

பக்கங்கள்: 22

விலை: 30.00

# தீம்புனல்


THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

www.theempunal.lk தீ : 01 புனல்:08 19.06.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052

NEEDO
NORTH EAST ECONOMIC DEVELOPMENT ORGANIZATION
BUILD THE NATION TOGETHER

கடந்த பாராளுமன்றத் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது கிழக்கு மாகாணம் தேசிய அரசியலில் இருந்து விலகிப் போவதனை அறிய முடிகிறது. இவ் விலகலானது கிழக்கின் திருகோணமலை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இரண்டு வகையான அரசியல் போக்குகள் நிலவி வருவதனை வெளிப்படுத்துகிறது. ஒன்று, காலங்காலமாகப் பேணிவந்த தமிழ்த்தேசிய அரசியலைத் தொடர்ந்தும் பேணிவருதல், மற்றையது, அரசாங்கத்துடன் சமரசத்திற்குச் சென்று பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துதல். கிழக்கு



> முஸ்லிம் தரப்பினர் எப்போதும் ஒரு சமூகமாகத் தமிழர்களோடு சேர்ந்து இயங்குவது கிடையாது. தமிழரசுக் காலத்திலும் சரி ஆயுதப் போராட்டம் வலுப் பெற்ற காலத்திலும் சரி தனி நபர்களாகவே தமது பங்களிப்பினைச் செய்து இருந்தார்கள். இதில் மலையகத் தலைவர்கள் தெளிவான பார்வை உடையவர்களாக இருந்தார்கள். வடக்குக் கிழக்குக்கான அரசியல் வேறு, மலையகத்துக்கான அரசியல் வேறு என்பதே அவர்களின் தெரிவாக இருந்தது. இத்தகைய அரசியல் போக்கினைக் கிழக்கு முஸ்லிம்களும் எடுத்திருக்கலாம்.

சி. அ .யோதிலிங்கம்

# வடக்குக் கிழக்கை இணைத்த அரசியல் செயற்பாடே இன்றைய தேவை



மாகாணம் எனும் போது மட்டக்களப்பு மாவட்டமே பிரதானப்படுத்தப்படுகிறது. மட்டக்களப்பில் காணப்படுகின்ற அரசியல் போக்கு, அங்கு எடுக்கப்படுகின்ற தீர்மானங்களே கிழக்கின் அரசியலைத் தீர்மானிக்கின்ற காரணியாக அமைகிறது. தமிழ்த் தேசிய அரசியலினுடைய தேசிய ரீதியான அணுகுமுறைகளில் கிழக்கு மாகாணம் சமநிலைப்படுத்தப்படவில்லை என்பதன் எதிர் விளைவுதான் கிழக்கு மாகாணம் தனித்து இயங்க முனைவதற்குரிய காரணம். யுத்தம் முடிந்து இன்றைய 10 வருட காலத்தில் தமிழ் அரசியல் போக்கில் கிழக்கு மாகாணம் கைவிடப்பட்டுவிட்டது போன்ற தோற்றத்தினைத் தருகிறது. இது கிழக்கு மாகாணம் முஸ்லிம்களின் அதிகாரத்துக்குட்படுவதற்குக் காரணமாகியது. முஸ்லிம்கள் சிங்கள அரசுடன் இணைந்து செயற்படுவதோடு அவர்களின் முகவர்களாகவும் இயங்குகின்றமை வெளிப்படை. இதனால் கிழக்கில் சிங்கள அரசின் அதிகாரமும் மறைமுகமாக இருக்கிறது. இரண்டு அதிகாரச் சக்திகளும் இணைந்து தமிழ் மக்கள் மத்தியில் ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்தி வருகின்றன. இத்தகைய ஆக்கிரமிப்பு யுத்தத்திற்குத் தற்காப்பு நடவடிக்கையை மேற்கொள்ள முடியாத நிலையிலேயே கிழக்கு மக்களின் அரசியல் இருக்கிறது.

கிழக்கைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பு மாவட்டமே பலமானது. அதனை வலுப்படுத்துவதன் மூலமே ஏனைய மாவட்டங்களை வலுப்படுத்த முடியும். சிறிலங்கா அரசும் சரி, சர்வதேச சக்திகளும் சரி இனப்பிரச்சினையினை வடக்கை மையப்படுத்தியே பார்க்க விரும்புகிறது. இலங்கை அரசு கிழக்கினை உள்ளெடுப்பது தனக்கு ஆபத்து எனக் கருதுகிறது. இந்தப் போக்கினை தமிழ் அரசியற் தரப்பும் ஏற்றுக்கொண்டு செயற்படும் நிலைமை காணப்படுவதாகத் தோன்றுகிறது. குறிப்பாக தமிழ் அரசியல் நிலைப்பாடு தொடர்பாக எந்த வகையான தீர்மானங்களையோ

▶20




த.விஜயசங்கர்

# 31 வருடங்கள் மீளாக் குடிகளாக வலி.வடக்கு மக்கள்



யுத்தம் முடிந்து 12 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அரசு, இராணுவத்தரப்பினருக்கு விடுதலைப் புலிகள் தொடர்பிலான அச்சம் விட்டுப்போகவில்லையோ? என்று எண்ணத்தோன்றுகிறது. அவர்களின் ஒவ்வொரு செயற்பாடும் அதனையே வெளிப்படுத்துவதாகவும் அமைகின்றன. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைத் தடுத்தமை, தியாகி பொன் சிவகுமாரனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தவிடாது தடைபோட்டமை போன்ற செயல்கள் அதனைத் தெளிவாகக் காட்டுகிறது. இதனை மேலும் வலுப்படுத்துவதாக அமைவது வலிகாமப் பகுதியில் மக்களின் வாழ்விடங்களை மக்களிடம் ஒப்படைப்பதில் இராணுவம் காட்டுகின்ற தயக்கம். இன்றைக்கு அப்பகுதி மக்கள் தமது மண்ணை விட்டு விரட்டப்பட்டு மூன்று தசாப்தகாலங்கள் கடந்துவிட்டன. 15.06.2021 அன்று 31 ஆவது வருடம் பூர்த்தியாகியிருக்கிறது. யுத்த காலத்தில் இராணுவம் தமது பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு உயர் பாதுகாப்பு வலயம் என்ற கட்டமைப்பினை உருவாக்கி தமது முகாம் இருக்கும் இடத்திலிருந்து பெரும்பகுதியான நிலத்தினை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தன. யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் மக்களின் நீண்ட போராட்டம் காரணமாக ஒவ்வொரு பிரதேசமாக விடுவிக்கப்பட்டு வந்தது. இது தமது பூர்வீக நிலத்திற்குப் போகும் கனவுகளுடன் இருந்தவர்களின் மனதில் மிகப் பெரிய மகிழ்ச்சியை ஏற்படுத்தத்தொடங்கியது. ஆனால் அது எல்லோருக்குமான மகிழ்ச்சியாக அமையவில்லை. குறிப்பிட்ட பகுதிகள் சிலவே விடுவிக்கப்பட்டதோடு சரி, ஏனைய பகுதிகள் விடுவிக்கப்படுவது தொடர்பில் எந்த ஏற்பாடுகளும் இதுவரை இல்லை.

அரசு, ஒவ்வொரு தேர்தல் காலத்து நடவடிக்கையின் போதும் மீளக்குடியமர்த்துவது,

▶07

‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’

# சீனாவின் பட்டி மற்றும் பாதை முன்முயற்சிக்கு எதிரான ஜோ பைடனின் உபாயம் வெற்றி பெறுமா?

பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்







அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனது ஐரோப்பிய பயணம் நிறைவை நோக்கி (16.06.2021) உள்ளது. குறிப்பாக ஜி7, ஐரோப்பிய ஒன்றியம், நேட்டோ, இறுதியாக ரஷ்ய ஜனாதிபதி புடினுடனான சந்திப்பு என நீண்ட பயணம் நிறைவடைகிறது. அதேநேரம் இச்சந்திப்பின் மத்தியில் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் கிடப்பில் போடப்பட்ட Blue Dot Network என்பதைப் பற்றிய உரையாடல்களையும் முதன்மைப்படுத்தி உள்ளார். இக்கட்டுரையும் அமெரிக்க ஜனாதிபதியின் முதன்மைப்படுத்திய Blue Dot Network தொடர்பான அணுகுமுறைகளைத் தேடுவதாக உள்ளது.

2019ஆம் ஆண்டு டொனால்ட் ட்ரம்ப் இனுடைய ஆட்சிக்காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட Blue Dot Network தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்-இல் நடைபெற்ற இந்தோ-பசுபிக் வர்த்தக மாநாட்டில் அமெரிக்கா ஜப்பான் மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளின் கூட்டிணைவு திட்டமாக அறிவிக்கப்பட்டது. டொனால்ட் டரம்ப்-இன் தேசிய பாதுகாப்புத் துணை ஆலோசகராகவும் சீனா தொடர்பான முக்கிய கொள்கை வகுப்பாளராகவும் விளங்கிய மத்யூ பாட்டிங்கர் என்பவர் புவிப்பகுதியில் இருக்கும் Blue Net ஐ மையப்படுத்தி உங்கள் உணவகங்களுக்கு நட்சத்திர மதிப்பீட்டை பெறுவது போலாகும் என இத்திட்டத்தை வர்ணித்தார். குறிப்பாக தனியார் துறையை மையப்படுத்திய உட் கட்டமைப்பு முதலீடுகளை அதிகரிக்கும் வகையிலும் இத்திட்டமிடல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் குவாட் என்று அழைக்கப்படும் நாற்கரை பாதுகாப்பு உரையாடலில் இடம்பெற்றிருந்த இந்தியாவை உள்ளீர்ப்பதற்கான அமெரிக்க ஆர்வத்தையும் முதன்மைப்படுத்தியிருந்ததோடு புதுடில்லி, பட்டி மற்றும் பாதை முன்முயற்சி அச்சுறுத்தலாக அமையுமென பங்கேற்க மறுத்தது.

அதேநேரம் Blue Dot Network ஆனது ஜி-7, ஜி-20 போன்ற அமைப்புக்களுக்கு உட்கட்டமைப்பு மேம்பாடு போன்ற கொள்கைகளையும் அதன் தரங்களையும் அடித்தளமாகப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளதுடன், பொருளாதார ஒத்து ழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான உலகளாவிய மூலோபாயத்தையும் தொழில்நுட்ப செயற்பாட்டுக்கான உள்ளீடுகளையும் வழங்க முன்வந்துள் ளது. குறிப்பாக உள்ளீடுகளின் தர நிலைகளையும் நிதியாளர்களையும் பங்குதாரர் களையும் ஊக்குவிக்கும் நோக்குடன் இக்கட்டமைப்பு அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகளால் உரையாடப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி வோஷிங்டனை தளமாகக் கொண்ட மூலோபாய மற்றும் சர்வதேச ஆய்வுகள் வல்லுனர்களான மத்யூ குட்மன், டானியல் டுன்டே மற்றும் ஜொனதன் ஹில்மார் ஆகியோர் உட்கட்டமைப்பு முதலீட்டின் நீண்டகால வருவாயைத் தேடும் ட்ரில்லியன் கணக்கான டொலர்கள் பெறுமதிக்காக ஓய்வூதியம் மற்றும் காப்பீட்டு நிதிகள் உட்பட அமெரிக்காவிற்கு தனித்துவமான நிதிப்பலன்கள் உள்ளதென குறிப்பிட்டுள்ளனர். இதனை மேலும் பலப்படுத்துவதற்கு உயர்தரமான சான்றுகளை வழங்கும் பொறிமுறையையும் சிபார்சு செய்துள்ளது.

எனவே, Blue Dot Network என்பது 12 ட்ரில்லியன் டொலர்கள் சொத்துக்களைக் கொண்டிருக்கும் உலகிலுள்ள 96 நாடுகளை உள்ளடக்கிய 150இற்கும் மேற்பட்ட முக்கிய நிர்வாகிகள் பாங்கொக் சந்திப்பில் பங்கேற்றனர் என்றும் அமெரிக்க வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது. இந்த ஆரம்பக் கூட்ட அமர்வுகளில் உலகின் வலிமை படைத்த சிட்டி மற்றும் ஜே.பி. மோர்கன் உள்ளிட்ட நிதி நிறுவனங்களும் பொதுத்துறை அமைப்புக்களும் தாய்லாந்தின் அரச ஓய்வூதிய நிறுவனமும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடக்கூடிய விடயமாகும். இதில் பங்கெடுத்த மூத்த பாதுகாப்பு





ஆய்வாளர் கிராஸ் மேன் என்பவர் அவுஸ்ரேலியா ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றின் டொலர்களுக்கு சீனாவின் பட்டி மற்றும் பாதை முன்முயற்சிக்கு பொருந்தாது என்று கூறினார். எனவே அமெரிக்க தலைமையிலான மேற்குலக நாடுகளின் அணுகுமுறைகள் சீனாவிற்கு எதிரானது. அதிலும் குறிப்பாக பட்டி மற்றும் பாதைகள் முன்முயற்சிக்கு எதிரான நகர்வுகளில் அதிகமாக உள்ளதென்பது தெளிவாகிறது. அதனை விளங்கிக்கொள்ளுதல் அவசியமான ஒன்றாகும்.

முதலாவது, ஜோ பைடன் தலைமையிலனா அமெரிக்க நிர்வாகம் தவிர்க்க முடியாது டொனால்ட் ட்ரம்பின் கொள்கையை தொடர வேண்டிய நிலைக்கு அகப்பட்டுள்ளது. அதாவது சீன எதிர்ப்பு நிலை ஒன்றை முன்னெடுக்க வேண்டிய சூழல் கடந்த காலத்தை விட தற்போது அதிகரித்துள்ளது. ஜி7 மாநாட்டில் நிகழ்ந்த உரையாடல்கள் சீனாவின் உலகளாவிய நடவடிக்கைகளுக்குப் பதிலீடான நடவடிக்கைகளே செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறே ஐரோப்பிய யூனியனுடனான உரையாடல் மற்றும் நேட்டோ நாடுகளுடனான சந்திப்புக்களில் ஜோ பைடன் திட்டமிடலாகவும் அமுலாக்க செயன்முறையாகவும் கொண்டிருந்ததை அவதானிக்க முடிகிறது. எனவே அமெரிக்காவின் மிக முக்கிய இலக்காக சீனாவின் பட்டி மற்றும் பாதை முன்முயற்சி மாறியுள்ளது. சீனா என்ற ஒரு நாட்டின் திட்டத்தை ஏகாதிபத்தியங்களின் கூட்டிணைவான ஜி-7 நாடுகள் இணைந்து எதிர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. தனித்த அமெரிக்காவோ அல்லது பிரித்தானியாவோ சீனாவின் உபாயத்தை எதிர்கொள்ள முடியாத உலக சூழல் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இரண்டாவது, Blue Dot Network ஆனது உலகளாவிய உட்கட்டுமான முயற்சியை இலக்கு வைத்ததாகவே தெரிகிறது. இதே கொள்கையை சீனா 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உலகளாவிய ரீதியில் மேற்கொண்டு வருகிறது. 2016 இல் இதற்காக ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) ஒன்றை 2016இல் ஆரம்பித்து அதற்கான அமுலாக்கங்களை மேற்கொண்டு வருகிறது. எனவே Blue Dot Network இன் பிரதான இலக்கை சீனா அவ்வாறு தென் பூகோள நாடுகளை உட்கட்டமைப்பு எனும் பொறிமுறையூடாக இணைத்த வந்துள்ளது. தாய்லாந்துச் சந்திப்பானது அதற்கானதொரு ஆரம்ப முயற்சியாகவே காணப்படுகிறது. சீனாவின் புதிய பட்டுப் பாதையை தகர்ப்பது என்பது மட்டுமன்றி தென்பூகோள நாடுகளது உட்கட்டமைப்பு வளர்ச்சிகளையும் அதில் சீனாவின் பங்குகளையும் இல்லாமல் செய்வதே Blue Dot Network இன் பிரதான இலக்காகும்.

மூன்றாவது, சீனாவின் பொருளாதார வளர்ச்சியை தென்பூகோள நாடுகளை மையப்படுத்தித் திட்டமிட்டிருக்கின்ற பொறிமுறையை தகர்ப்பதும் இதன் இன்னொரு நோக்கமாகும். குறிப்பாக இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளது பொருளாதார வளர்ச்சி தென் பூகோள நாடுகளிலேயே தங்கியிருந்தது. தென்பூகோள நாடுகளின் வளங்களையும் சந்தைகளையும் ஆக்கிரமித்த அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் பாரியளவான சுரண்டல்களை மேற்கொண்டு தமது நாட்டின் பொருளாதாரத்தினை செழிப்பு நிலைக்குக் கொண்டு சென்றன. காலனித்துவத்திற்கு முற்பட்ட காலத்தில் ஐரோப்பிய பேரரசுகள் சுரண்டியது போல் காலனித்துவத்திற்கு பின்னர் அமெரிக்க ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் அத்தகைய சுரண்டலை ஜனநாயகம் மனித உரிமை சுதந்திரம் என்ற எண்ணக்கருவோடு மேற்கொண்டன. அத்தகைய சுரண்டலுக்கான ஐரோப்பிய அமெரிக்க வாய்ப்புக்களை சீனா கைப்பற்றியுள்ளது ஆனால் சீனா அதனை win win உபாயத்தினூடாக கையகப்படுத்தியிருப்பதுடன் சீனாவிற்குள் மூலதன திரட்சியை வலுவாக்குகின்றது. இதுவே மேற்கு நாடுகளின் பிரதான முரண்பாடாகும். இங்கு இருதரப்புமே சுரண்டல் என்ற உபாயத்தை புதிய தளங்களில் பிரவேசித்து வருகின்றனர். மேற்கினது சுரண்டல் முடிவுக்கு வர சீனாவின் சுரண்டல் ஆரம்பிக்கின்றது. மேற்கின் அணி திரள்வு என்பது சீனாவின் சுரண்டலைத் தடுத்து தொடர்ந்தும் தமது ஆதிக்கத்தையும் சுரண்டலையும் நிலை நாட்டுவதாகும்.

ஐந்தாவது, உலகத்தை ஆள்வதற்கான போட்டித்தன்மை சீனா எதிர் மேற்கு என்ற நிலை உருவாகி இருப்பதோடு மேற்கினால் ஒன்றுக்கு மேற்பட்ட உபாயம் வகுக்கப்பட்ட போதும் சீனாவின் பட்டி மற் றும் பாதை முன்முயற்சியை இதுவரை தோற்கடிக்க முடியவில்லை ஜி-7, நேட்டோ, ஐரோப்பிய யூனியன், இந்தோ-பசுபிக் உபயம், குவாட் நாடுகள் என்ற வரிசையில் Blue Dot Net workகும் ஒன்றாக விளங்குகின்றது. இதன் முயற்சிகளும் முன்கூட்டியதைப் போன்றே பலவீனமாக அமையும் என்ற எதிர் பார்ப்பு அதிகமாக உள்ளது. காரணம் சீனா முன்னெடுக்கும் அதே மாதிரியான உபாயங்கள் சீனா அதில் பயணம் செய்த பல ஆண்டுகளுக்குப் பின்னர் மேற்கு தொடங்குவது என்பது அதன் ஆரம்ப பலவீனத்தையே காட்டுகிறது. அதுமட்டுமன்றி மேற்கு நாடுகள் போன்று மேலாதிக்கத் தளத்திலிருந்து சீனா உலகத்தை அணுகவில்லை. மாறாக சமவலுவுடனேயே உலக நாடுகளை அணுக முயலுகிறது.

எனவே, ஜி-7 மாநாட்டு நிறைவுக்கு பின்னர் பிரித்தானிய சீன தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்த கருத்து கவனிக்கத்தக்கது. அதாவது ஜி-7 போன்ற குழுக்களால் உலகை ஆள முடியாது. அத்தகைய யுகம் முடிவுக்கு வந்து விட்டது. சீனா உலகத்தின் எல்லா அரசுகளையும் சமமாக கருதிக்கொண்டு அனைத்து நாடுகளுளின் பங்கேற்புடன் கூடிய தீர்மானகங்களையே முன்னெடுக்க விரும்புகிறது. அதுமட்டுமன்றி ஜி-7 போன்ற குழுக்கள் சீனா கடைபிடிக்கும் அதே கொள்கைகளை காலந்தாழ்த்தி பின்பற்ற முயலுகிறது. சர்வதேச விவகாரங்களில் ஐக்கிய நாடு சபை போன்ற பங்கேற்பு தீர்மானங்களையே சீனா அங்கீகரிக்கும் எனக்குறிப்பிட்டார். ஜோ பைடன் குறிப்பிடுவது போன்று அமெரிக்கா சீனாவிடையேயான பனிப் போர் நிகழ்வதாகவே தெரிகிறது.

■

> **காலனித்துவத்திற்கு முற்பட்ட காலத்தில் ஐரோப்பிய பேரரசுகள் சுரண்டியது போல் காலனித்துவத்திற்குப் பின்னர் அமெரிக்க ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் அத்தகைய சுரண்டலை ஜனநாயம் மனித உரிமை சுதந்திரம் என்ற எண்ணக்கருவோடு மேற்கொண்டன. அத்தகைய சுரண்டலுக்கான ஐரோப்பிய அமெரிக்க வாய்ப்புக்களை சீனா கைப்பற்றியுள்ளது. ஆனால் சீனா அதனை win win உபாயத்தினூடாக கையகப்படுத்தியிருப்பதுடன் சீனாவிற்குள் மூலதன திரட்சியை வலு வாக்குகின்றது.**



"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL
தீம்புனல்

# சட்டத்தை மதிக்கக் கற்றுக் கொண்டால் தட்டிப் பறிப்பவர்களை அச்சத்துக்குள்ளாக்கலாம்

கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீன் வியாபாரி ஒருவரை அச்சுறுத்தி கையூட்டல் பெற்றுள்ளதாக கடந்த இரண்டு நாட்களுக்கு முன் அறியக்கூடியதாக இருந்தது. பொலிஸார் கையூட்டல் பெறுகின்ற சம்பவம் புதிய ஒரு செய்தியல்ல. ஆனால் குறித்த மீன்வியாபாரி சரியான நடவடிக்கை மேற் கொண்டு பொலிஸாரைச் சிக்கலுக்குள்ளாக்கியிருக்கும் விடயம்தான் முக்கியமானது. அவரது துணிச்சல் பாராட்டப்பட வேண்டிய விடயமும் ஆகும். இலங்கையைப் பொறுத்தவரையில் அதிகளவிலான பொலிஸார் இத்தகைய செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பிட்ட சிலர் அடையாளம் காணப் பட்டு கைது செய்யப்பட்டும் இருக்கின்றனர். ஆனாலும் பணம் உழைக்கும் வியாபாரமாக தொடர்ந்தும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. பொதுவாக நாட்டில் உள்ள மக்கள் எல்லோரும் இதனை அறிவார் கள். ஆனால் முறைப்பாடு செய்வதில் அச்சப்படுபவர் களாகவே காணப்படுகிறார்கள். அதிலும் யாழ்ப் பாணத்தில் நிலைமை இன்னும் மோசம் என்றே சொல்லலாம். காரணம் பொலிஸார் எப்போதும் தங் களை அதிகாரம் உள்ள நபர்களாகவே காண்பித்துக் கொள்கிறார்கள். அவர்களின் அச்சுறுத்தும் தோர ணையும் மொழிப்பிரயோகமும் அச்சத்தினை மேன் நிலைப்படுத்துவதாகவே அமைகிறது. அதேவேளை பொலிஸாருடன் பகைத்தால் காலத்துக்கும் துன்பத் தினை அனுபவிக்கவேண்டிவரும் என்ற எண்ணமும் மக்களிடம் உண்டு. அவர்கள் ஏதோவொரு குற்றத்தி னைச் சுமத்தி தமது இயல்பான வாழ்வினைச் சிக்க லாக்கிவிடுவார்கள் என்ற பயம் மக்களிடம் இருப்பது வெளிப்படையானதொன்று.

இத்தகைய கையூட்டல் நிலைமையானது நேர்மையாக உழைக்கும் மக்களைப் பாதிப்புக்குள் ளாக்கவும் தவறான வழியில் உழைப்பவர்களைக் காப்பாற்றும் தன்மையுடைய செயல் முறையாகும். நாட்டில் சமூகவிரோதச் செயல்களில் துணிந்து ஈடு படுவதற்கான தூண்டல்களையும் இது ஏற்படுத்தத் தவறவில்லை என்பது மக்கள் கொண்டுள்ள ஆழமான கருத்தாகும். ஒரு கிராமத்தில் கசிப்பு வியாபாரம், கஞ்சா வியாபரம், விபச்சாரம் போன்றவை நடப்பது பொது வெளியில் சாதாரணமாக அறிந்து கொள்ளக் கூடிய விடயம். ஆனால் அவர்கள் துணிந்து அக்காரியத்தில் ஈடுபடுகின்றார்கள் என்றால் அதன் அடிப்படை என்ன? என்று மக்கள் கேட்கிறார்கள். பல குற்றச்செயல்கள் பொலிஸ் நிலையத்துடனேயே திரும்பிவிடும் நிலைமை இருப்பதாகவும் அதற்கு பணம் நிறையச் செலவழிக் கப்படுவதாகவும் கதைகள் நிலவுவது சாதாரணமா னது. இது கதைகள் மட்டுமல்ல உண்மை என்றும் மக்கள் சொல்கிறார்கள். ஆனால் முறையிடுவதற்கு அவர்களை அச்சம் தடுக்கிறது. இத்தகைய அச்சத்தையே பொலிஸாரும் சமூகவிரோதச் செயல் செய்பவர்களும் பயன்படுத்தி வருகின்றனர். பொலிஸ் நிலையத்திற்கு இரகசியமாக முறைப்பாடு செய்தவர் கள் குறித்த கும்பல்களால் தாக்கப்படுவதும் கொலை அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதும் நிகழ்ந்து வருகின்றமை பொதுவெளியில் அறியக்கூடியதொன்று. இது எதனை வெளிப்படுத்துகிறது? குறித்த குற்றவாளிகள் கொடுத்த காசு அவர்களை விடுவிக்க வும் துப்புக் கொடுத்தவர்கள் யாரென்று அடையா ளப்படுத்தவும் செய்திருக்கிறது. இத்தகைய காரணங் களினால் மக்கள் எது நடந்தாலும் கண்டும் காணா தவர்கள் போலவே இருக்கிறார்கள்.


இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிகவும் சர்வ சாதாரணமாகப் போதைவஸ்து வியாபாரம் நடை பெற்று வருகிறது. இவ்வியாபாரத்தினால் இளம் பராயத்தினர் பாதிப்புக்குள்ளாகுதல், குடும்பங்கள் பல நிம்மதியற்றுச் சீர்குலைதல், குடும்ப வன்முறைகள் அதிகரித்தல் போன்ற விளைவுகளை ஏற்படுத்து கின்றது. இவ்வாறு விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய வியாபாரம் மேலும் பெருக்கமடைந்து செல்வதற்கு பொலிஸாரின் கையூட்டல் பெறும் செயற்பாடும் காரண மாகிறது. சாதாரண மீன் வியாபாரியிடமே கையூட் டல் பெற்றவர்கள் பெருமுதலைகளை விடுவார்களா? மீன்வியாபாரியிடம் மிஞ்சிப்போனால் 500 அல்லது 1000 ரூபாயினை கையூட்டலாகப் பெற்றிருக்க முடியும். இதனையே பெருலாபம் உழைப்பவர்களி டம் கையாண்டால் கிடைக்கும் இலாபம் எவ்வளவு? விடுவார்களா அவர்கள்?

பொலிஸார் கையூட்டல் பெறுவது பாரிய விளை வுக்குரியதாகக் கருதவில்லை. குற்றம் செய்தவர்களி டமே பெறுவதாகவும் அது அவர்களுக்குரிய தண்ட னையாகவும் கருதுகின்றனர். ஆனால் அதுவே மேலும் மேலும் குற்றம் செய்யும் துணிவையும் ஏற்படுத்துகி றது என்பதனைக் கவனத்தில் கொள்கிறார்களோ தெரியாது. இது ஒருவகையில் இருந்தாலும் அவர் களை இத்தகைய செயற்பாட்டுக்குக் கொண்டு சென்று விட்டதன் பொறுப்பு மக்களுக்கும் உரியது என்ப தனை ஒத்துக் கொள்ளவும் வேண்டும். அவர்கள் தாம் அறிந்தோ அறியாமலோ செய்யும் சிறு தவறுகளுக்குக் கூட சிறிய தொகையைக் கையூட்டலாகக் கொடுத்து தப்பித்துச் செல்லவே விரும்புகின்றனர். இது பொலி ஸாருக்கும் வாய்ப்பானதாக அமைந்துவிடுகிறது. கொடுப்பவர்கள் இருக்கும் வரையில் வாங்குபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். இதில் மிகவும் பாதிக்கப் படுபவர்களும் சட்டத்தின் முன் குற்றவாளியாக நிறுத்தப்படுபவர்களும் கொடுப்பதற்கு திராணியற் றவர்களே என்பது கவனத்துக்குரியது.

இத்தகைய நிலைகள் மாற்றியமைக்கப்பட வேண் டும். இது தொடர்ந்தும் நோய்நிலையாக அதிகரித்துச் செல்லும் என்றால் நாட்டில் சட்டத்தினை மதிக்காத வர்களின் எண்ணிக்கையினையும் அதிகரித்துச் செல் லும், நாட்டில் பெரும் நெருக்கடியான நிலையினை ஏற்படுத்தும். பாதிக்கப்படும் அப்பாவிகள் பாதிக் கப்படவும் குற்றவாளிகள் தொடர்ந்தும் தப்பித்துச் செல்லவுமான வழியை ஏற்படுத்தும். நாடு கையூட் டல் வாங்காத அதிகாரிகளைக் கொண்டிருப்பதே நாட்டின் சிறப்பினைப் பறைசாற்றும் ஒன்றாக இருக்கும். கையூட்டல் என்பது நாட்டின் நிர்வாகத் தில் இருக்கும் ஒழுங்கீனம் இருப்பதான தோற் றங்களை வெளிக் தெரியச் செய்யும். நாட்டினை வள மானதாக்க கையூட்டல் இல்லாத கலாசாரத்தினை மேம்படுத்தவேண்டும். இதற்கு மக்களும் பொறுப் புடையவர்கள். மீன்வியாபாரியின் துணிவு எல்லோ ரிடம் வருமாக இருந்தால் மக்களைப் பார்த்து அதிகா ரத்தில் உள்ளவர்கள் அச்சப்படும் நிலை உருவாகும். அவர்கள் அச்சப்பட்டால் சட்டங்களை பாதுகாக்கும் நடவடிக்கையில் தீவிரம் காட்டுவார்கள். அது மக்க ளின் நல்வாழ்வுக்கு உறுதியளிப்பதாக அமையும். இதற்கு மக்கள் ஒவ்வொருவரும் சட்டத்தை மதிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். ■

# நெருக்கடிக்குள்ளாகும் அரசு; மீளுமா?

✒ தந்திரன்



இலங்கை அரசு பலதரப்பட்ட நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய சூழல் எழுந்தி ருப்பது தென்னிலங்கையின் அண்மைய போக்குகளிலி ருந்து ஊகித்துக் கொள்ள முடிகிறது. தற்போதைய அரசாங்கம் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஆட்சிபீடம் ஏறியிருந்ததோடு பங்காளிக் கட்சிகளின் பெருத்த ஆதரவு இனி எந்தக்காலத்திலும் தங்களுடைய இருப்புக்கு அச்சமில்லை என்ற மிதப்பைக் கொண்டிருந் தது. தற்போதைய நெருக்கடி நிலை அவர்களின் எதிர்பார்ப்பினைச் சிதைத்திருக்கிறது.

அரசாங்கம் போர்ட் சிற்றி என்ற நகரத்தை சீனாவின் ஆளுகைக்கு உட்படுத்தியமை, கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் கொரோனா பெருந்தொற்று அதிகரித்து கொண்டு வருகின்றமை, இலங்கையின் கடல் பிராந்தியத்தின் பாதுகாப்பினை அச்சுறுத்தும் கப்பல் தீப்பற்றியெரிந்த விவகாரம், மக்களின் வாழ் வாதாரத்தினை முடக்கும் வகையிலான எரிபொருள் மற்றும் பொருட்களின் விலை யேற்றம் போன்றவையே நெருக்கடி நிலை ஏற்படுவதற்கு காரணமாகிறது.

இப்போக்கு, யாரெல்லாம் தற்போதைய அர சாங்கத்தை ஆட்சிபீடம் ஏற்றினார்களோ அவர்களே அதிருப்தி அடையும் அளவுக்கு நிலைமை மாறியிருக் கிறது. பொதுவெளியில் அரசுக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படையாக முன்வைக்கவும் செய்திருக்கின்றது.

பௌத்த பேரினவாதத்தின் முதுகில் சவாரி செய்த படியே இத்தனை வருடங்களும் அரச இயந்திரம் பயணித் துக் கொண்டிருந்தது. தற்போது பௌத்த பீடம் ஆட் சியாளர்கள் மீது நம்பிக்கை இழந்திருக்கிறது. இத்தகைய நிலைமை இன்றைய அரசுக்கு ஒரு சவால் நிறைந்த நெருக்கடியை ஏற்படுத்தும் என்பது தெளிவான தொன்று. அண்மையில் கூட ஒரு பௌத்த பிக்கு மகிந்த ராஜபக்ஷவை கடுமையான வார்த்தைகளால் திட்டி தீர்த் தமை கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

சிறுபான்மையின மக்கள் தமது உரிமைகளை வென் றெடுப்பதற்காக அரசுடன் போராட வேண்டிய நிலைமை மாற்றம் அடைந்து பெரும்பான்மையின மக்களும் தங்களின் வாழ்வாதாரத்தினையும் தமது அடிப்படை உரிமைகளையும் முன்னிறுத்திப் போராட வேண்டிய சூழ்நிலைகளை ஏற்படுத்தி இருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரையில் பொருட்களின் விலையேற்றம் என்பது வாழ்வாதாரத்தினைப் பெரும் நெருக்கடிக்குள் ளாக்கும் செய்ற்பாடு என்பதாகவே அமைகிறது. அவர்களுடைய அதிருப்தி தமிழ் மக்களின் எதிர்ப்பரசி யிலை விடவும் ஆபத்தானது.

அத்தோடு எந்த எதிர்க்கட்சியும் எந்த ஒரு அரசாங்கத் தையும் விமர்சிக்காத அளவுக்கு இன்றைய அரசாங்கத்தை எதிர்க்கட்சி விமர்சித்துக் கொண்டிருக்கின்றன. அதன் உச்சமாக ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூர்யா பின்வ ருமாறு குறிப்பிட்டிருந்தார் "இலங்கையின் சர்வாதி காரம் மற்றும் கொடுங்கோல் ஆட்சியின் கீழ் அச்சத்து டனும் சந்தேகத்துடனும் வாழ்வதனை விட கொரோனா பெருந்தொற்றால் உயிரிழப்பது ஆறுதலாக இருக்கும்" என்று.

அடுத்து தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்து ஆட்சி அமைத்திருக்கும் பங்காளிக் கட்சிகளின் நிலைப் பாட்டினைப் பார்க்கின்ற போது பரிதாபமாகவே காணப் படுகின்றது. ஆளும் கட்சியின் கூட்டணிக்குள் தாம் இருந்தாலும் பாரபட்சமான முறையிலேயே தாம் வழிநடத்தப்படுவதாக புலம்புகின்றனர். எவ்வித கலந்துரையாடல்களிலும் தீர்மானம் எடுக்கும் சந்தர்ப் பங்களிலும் தம்மிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளப் படுவதில்லை என அதிருப்தி தெரிவித்திருக்கிறது அதன் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.

மேலும் இன்றைய அரசியல் போக்கில் ரணில் விக்கி ரமசிங்கவின் பாராளுமன்ற மீள்வருகை என்பது பரபரப்பானதாகவே காணப்படுகிறது. அரசியல் நகர்வுகளில் இது மிக எதிர்பார்ப்பு நிறைந்ததாகவும் எதிர்நோக்கப்படுகிறது. மிகுந்த ராஜதந்திர நகர்வுகளை மேற்கொள் ளக்கூடிய ரணில் விக் கிரமசிங்க மீண்டும் ஒரு ஐக்கிய கூட் டொன்றை உருவாக்கி தமது இருப்பை ஆட்டம் காண செய்து விடுவாரோ என்ற பயம் அரசுக்கு உள்ளூர காணப்ப டுகிறது.

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை ஜனாதிபதி சந்திப்பதாக சொல்லி காரணங்கள் எதுவும் அறிவிக்கப்படாது குறித்த சந்திப்பானது இரத்து செய்யப்பட்ட நிலையில் தமிழ்த் தரப்பு அதிருப்தி அடைந்துள்ளது. அது மிக விரைவில் இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவோம் என சூளுரைத்த படி உள்ளது.

இவ்வாறான நெருக்கடிகளை நோக்குகின்ற பொழுது எவ்வளவுக்கு எவ்வளவு பொதுஜன பெரமுன கட்சியால் குறுகிய காலத்தில் வளர்ச்சியடைய முடிந்ததோ அதே அளவுக்கு வீழ்ச்சியினை சந்திப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாகத் தென்படுகின்றன. நாட்டின் நெருக்கடிநிலை எல்லை மீறிச் செல்லச் செல்ல அரசின் நெருக்கடிநிலையும் அதிகரித்துக் கொண்டே செல்லப் போகிறது. எப்படியாவது சமாளித்துவிடலாம் என்று கடந்த காலங்களைப்போல நம்பிக் கொண்டு இருப்பதாகவும் தெரிகிறது. ஆனால் தென்னிலங்கையில் பேசிக் கொள்கிறார்கள் சாது மிரண்டால் காடு தாங் காது என்று. ராஜபக்ஷ தரப்புத் தாங்குமா? தாங்காதா? ■

# கந்தபுராணக் கலாசாரம் எங்கே சென்றது...?

அவதானி

முன்பொருதடைவை பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள், “யாழ்ப்பாண கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம்” என்றார். அவர் தற்போது உயிரோடு இருந்திருப்பின், சமகாலத்தில் யாழ்ப்பாணமும் அது தலைநகராக விளங்கும் வடமாகாணமும் எவ்வாறு இருக்கிறது..? என்பதைப் பார்த்துவிட்டு, “ போதைவஸ்துக் கலாசாரம்” என்று சொல்லியிருப்பாரா...?

நாம் எங்கிருந்து எங்கே செல்கின்றோம்..?

தமிழின விடுதலைக்காக ஆயிரம் ஆயிரம் தமிழ் இளைஞர், யுவதிகள் தாங்கள் தொடர்ந்துகொண்டிருந்த கல்வியையும் இடையில் நிறுத்திவிட்டு, களம் புகுந்து போராடி மடிந்தனர். அவ்வாறு மடிந்தவர்களையும் மறைந்தார்கள் எனச்சொல்லாமல் வித்தானார்கள் என்றுதான் வர்ணித்து அகவணக்கம் செய்தது, எமது தமிழ்ச் சமூகம். ஆனால், இன்று அத்தகைய சமூகம், கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், அதற்கு அடிமையானவர்கள், போதைவஸ்து கடத்துபவர்கள், அதன் பாவனையால் சீரழிந்துகொண்டிருப்பவர்கள் பற்றிய செய்திகளைத் தான் பார்த்துக்கொண்டிருக்கிறது.

சில வருடங்களுக்கு முன்னர், ஜனாதிபதி பதவியிலிருந்த மைத்திரிபால சிறிசேன, “அரசாங்கத்திற்கு மதுவரியால் கிடைக்கும் வருமானம் கூடுதலாக வடபகுதியிலிருந்துதான் வருகிறது !” என்று சொன்னதை ஊடகங்களில் பார்த்திருப்பீர்கள்.

தென்னிலங்கையில் பாதாள உலகக்கோஷ்டிகளின் அட்டகாசத்தின் பின்னணியிலும் போதைவஸ்துதான் அடங்கியிருக்கிறது.

அதனால், போதைவஸ்துக் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்கவேண்டும். மரணதண்டனையும் தீர்ப்பாகவேண்டும் என்றும் மைத்திரிபால சிறிசேன சொன்னார்.

அவ்வாறு அன்று சொன்னவருக்கு, புதிய அரசில் குறைந்தபட்சம் அமைச்சர் பதவி கூட கிடைக்கவில்லை.

தென்னிலங்கையில் ஒரு நபர் நான்கு வயதுக்குழந்தைக்கு மது அருந்தக்கொடுத்து, அதனைக் காணொளி வாயிலாகப் பதிவேற்றி வலைத்தளத்தில் பரவ விட்டுள்ளார். இது பேலியகொடை பிரதேசத்தில் நடந்துள்ளது.

வடக்கில் வட்டுக்கோட்டையில் வீதியில் நடந்து வந்த ஒரு மாணவியின் கழுத்திலிருந்த தங்கச்சங்கிலியைப் பறித்துச் சென்றிருக்கிறார்கள் இரண்டு இளைஞர்கள்.

நாவற்குழிப் பகுதியில் போதைக்கு அடிமையான ஒரு தமிழ்க்குடும்பஸ்தர் தனது பத்துவயதுப் பிள்ளையை தலைகீழாகக்கட்டி கிணற்றுக்குள் இறக்கியிருக்கிறார். போதை செய்திருக்கும் காரியம் இது. உடுவில் பிரதேசத்தில் இரண்டுபேர் ஒரு வீட்டினுள் நள்ளிரவு புகுந்து அங்கிருந்த தண்ணீர் இறைக்கும் மோட்டார் பம்பியைத் திருட முயன்று கையும் களவுமாகப் பிடிபட்டுள்ளனர். யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் பகுதியில் ஒரு இளைஞர் வெளிநாட்டு மதுபானப்போத்தல்களை பொலிஸ் புலனாய்வுப்பிரிவினருக்கே விற்க முயன்று பிடிபட்டுள்ளார். போதைப்பொருளுக்கு அடிமையான தனது 22 வயதுள்ள மகனைத் தாயொருவர் அழைத்து வந்து சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

மேலே குறிப்பிடப்பட்ட சம்பவங்கள் அனைத்தும் கடந்த சில நாட்களில் வெளியான செய்திகளின் தொகுப்புத்தான். வடபகுதியில் மேலும் சில இடங்களில் இரகசியமாக கசிப்பு உற்பத்தி நிலையங்கள் இயங்கிவருகின்ற செய்திகளும் வெளிவருகின்றன.

மாதகல், காங்கேசன்துறை, பருத்தித்துறை,





> **நாவற்குழிப் பகுதியில் போதைக்கு அடிமையான ஒரு தமிழ்க்குடும்பஸ்தர் தனது பத்துவயதுப் பிள்ளையை தலை கீழாகக்கட்டி கிணற்றுக்குள் இறக்கியிருக்கிறார். போதை செய்திருக்கும் காரியம் இது. உடுவில் பிரதேசத்தில் இரண்டு பேர் ஒரு வீட்டினுள் நள்ளிரவு புகுந்து அங்கிருந்த தண்ணீர் இறைக்கும் மோட்டார் பம்பியைத் திருட முயன்று கையும் களவுமாகப் பிடிபட்டுள்ளனர். யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் பகுதியில் ஒரு இளைஞர் வெளிநாட்டு மதுபானப் போத்தல்களை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கே விற்க முயன்று பிடிபட்டுள்ளார். போதைப் பொருளுக்கு அடிமையான தனது 22 வயதுள்ள மகனைத் தாயொருவர் அழைத்து வந்து சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.**

முல்லைத்தீவு கடல் மார்க்கத்தில் கேரளாவிலிருந்து வந்துகொண்டிருக்கும் கஞ்சாப்பொதிகள் பற்றிய செய்திகளை ஊடகங்களில் அடிக்கடி பார்க்கின்றோம்.

போர்க்காலத்தில் இந்தக் கடல் மார்க்கத்தில் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்கள் வருகின்றன என்று கண்காணித்துக் கொண்டிருந்த கடற்படையினர், தற்போது எதனைக் கண்காணிக்கின்றனர்...? என்ற கேள்விதான் எழுகின்றது.

அவர்கள், படகுகளில் வந்துகொண்டிருக்கும் கஞ்சாப்பொதிகளைக் கண்டும் காணாமலும் விட்டுவிடுவதனால்தானே, அவை பாதுகாப்பாக கரையொதுங்கி பொலிஸாரினால் பிடிபடுகின்றன.

எமது முன்னோர்கள் ஒரு கதை சொல்வார்கள்.

“ இன்று தப்பிவிட்டாய்.. உனது வீட்டில் எனது தம்பி உன்னைப் பார்த்துக் கொள்வான்” என்று குளத்தில் தன்னிடம் கடிவாங்கித் தப்பிச்சென்றவருக்குச் சொல்லுமாம். முதலை, தனது தம்பி எனக் குறிப்பிட்டது, பல்லியைத்தான். முதலை கடித்தவருக்கு வைத்தியர் சிகிச்சையளிக்கும் போது, வீட்டுக் கூரையிலும் சுவரிலும் ஊர்ந்து திரியும் பல்லியின் எச்சம், முதலை கடித்த காயத்தில் பட்டுவிடக்கூடாது என்றுதான் எச்சரிப்பார். பல்லி எச்சம் பட்ட காயங்கள் எளிதில் குணமடையாது.

அதுபோன்று கடலில் கடற்படையிடமிருந்து தப்பிவிடும் போதைவஸ்துக் கடத்தல்க்காரர்கள், வெளியே வந்து பொலிஸாரிடம் சிக்கிக்கொள்கிறார்கள். பொலிஸாரும் பிடிபட்ட பெருந்தொகையான கஞ்சாப்பொதிகளைக் காட்சிக்கு வைத்து ஊடகங்களுக்குத் தங்கள் வேட்டையைப் பிரபலப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கச்சியப்ப சிவச்சாரியார் எழுதியது கந்தபுராணம். ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களால் பீடிக்கப்பட்ட ஆன்மாக்களாகிய தேவர்களை கந்தபெருமான் மீட்ட கதைதான் கந்தபுராணம். இந்தக் கதையில் சூரபத்மன் ஆணவத்தின் உருவமாகவும் சிங்கமுகாசூரன் கன்மத்தின் உருவமாகவும் தாரகாசூரன் மாயை வடிவமாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளனர். முருகனுக்கு, தாய் சக்தி வழங்கிய ஞானவேல் கொண்டு இந்த மும்மலங்களையும் அழித்து ஆன்மாக்களாகிய தேவர்களை மீட்ட கதைதான் கந்தபுராணம்.

யாழ்ப்பாணத்தில் ஆலயங்களில் கந்தபுராணப்படனம் வாசிக்கும் பழக்கம் தொன்று தொட்டு இருந்து வந்தது. புராணப்படனம் செய்வது என்பது ஒருவர் சந்தி பிரித்து கந்தபுராணப் பாடலைப் பாடுவார். மற்றும் ஒருவர் அருகிலிருந்து அதற்குப் பொருள் விரித்து பயன் கூறுவார். இதனைக் கவனத்தில் கொண்டுதான் “அன்றே யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக்கலாசாரம்” என்றார் பண்டிதமணி கணபதிப்பிள்ளை.

ஆனால், காலம் மாறிவிட்டது. பெரும்பாலானவர்களுக்குத் தொலைக்காட்சியிலும் கைத் தொலைபேசியிலும் தென்னிந்திய தொலைக்காட்சி நாடகங்கள், சூப்பர் சிங்கர் களியாட்டங்கள் பார்ப்பதற்கும் கமலின் பிக்பொஸ் பார்க்கவுமே நேரம் தேடவேண்டியதாகிவிட்டது.

“பெரிசுகள்” என்று சின்னவர்களினால் அழைக்கப்படுபவர்கள் மாத்திரம் புராணப்படனம் கேட்கச்செல்லக் கூடும். இந்நிலையில் கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரஸ் வந்து சமூக இடைவெளியையும், ஊரடங்கு உத்தரவுகளையும், பயணத்தடைகளையும் அறிமுகப்படுத்திவிட்டது. இதனை போதைவஸ்துக் கடத்தல்காரர்களும் கசிப்பு உற்பத்தியாளர்களும் தங்களுக்கு சாதகமாக்கிவிட்டனர் போலும்.

கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசி செலுத்துகிறார்களோ இல்லையோ, போதைவஸ்தை செலுத்திக்கொள்வதில் இளம் சமுதாயம் தீவிரம் காண்பிக்கின்றது என்பதைத்தான் வெளியாகும் செய்திகள் அம்பலப்படுத்துகின்றன. இவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு, தன்னார்வத் தொண்டர் அமைப்புகளையும் மருத்துவர்களையும் சார்ந்தது.

வடக்கினை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் தலைவர்கள் தங்களுக்குள் நடத்தும் குடுமி பிடி சண்டையை சற்று ஒதுக்கிவைத்துவிட்டு, எமது மக்களின் எதிர்காலம் குறித்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்க முன்வரவேண்டும்.

சுமார் அரைநூற்றாண்டுக்கு முன்னர் வடக்கிற்கு வந்த இஸ்ரேல் விஞ்ஞானிகள், வடக்கின் நிலத்தடி நீர் படிப்படியாக உவர்ப்பாகி முழு வடக்குமே காலப்போக்கில் உவர் நீராகிவிடும் என்று முன்னெச்சரிக்கை விடுத்தார்கள். எமது தமிழ் அரசியல் தலைவர்கள் அந்த எச்சரிக்கையைக் கண்டுகொள்ளவேயில்லை. அதுபோன்று வடக்கில் பர விவரும் போதைவஸ்துப் பழக்கத்தை முற்றாக ஒழிக்காது போனால், இனத்திற்காக - மொழிக்காக விதையாகிப் போனவர்களின் மண்ணில் எதிர்காலத்தில் விஷம்தான் விளையும். விழிப்புணர்வுப் பணிகளை மேற்கொள்ளத் தாமதிக்காதீர் ! ■




# கழுத்தறுப்பு வியாபாரம்

வேதநாயகம் தபேந்திரன்

வியாபாரம் என்றால் என்னவென அறிந்திருப்பீர்கள். ஆனால் கழுத்தறுப்பு வியாபாரம் பற்றி அறிந்திருப்பீர்களோ தெரியாது.

வியாபாரப் போட்டியில் அடுத்தவரை வெல்வதற்காகக் கழுத்தறுப்பு வியாபாரத்தில் ஈடுபடும் நிலையில் இன்று 3 வியாபாரங்களைக் காண முடிகிறது.

யாட் (Yard) எனப்பட்ட அரிகற்கள், மணல், சல்லி விற்கும் வியாபாரம் அதில் ஒன்று. Fresh Juice எனப்பட்ட பழங்களைச் சாறாக்கி குளிர்பானம் தயாரித்து விற்கும் வியாபாரம் மற்றொன்று.

அடுத்தது ஒரு சர்வதேச வியாபாரம். கொரியர் சேவை எனப்படும் வெளிநாடுகளுக்குப் பொருள்களை, ஆவணங்களை அனுப்பி வைக்கும் பொதிகள் சேவை.

எம்மவர் ஒருவர் ஒரு தொழிலில் ஈடுபட்டு நல்ல இலாபம் உழைப்பதைக் கண்டால் உடனேயே அத்தொழிலை நோக்கி ஓடுவார்கள். தொழில் தொடர்பான முன்னனுபவம் ஏதுமில்லாமல் இத் தொழில்களில் ஈடுபடுவார்கள்.

தம்மையும் அழித்து ஏற்கனவே தொழிலில் வெற்றிக் கொடி நாட்டியவரையும் அழித்து விடுவார்கள்.

முதலில் யாட் எனப்படும் கட்டிட நிர்மாணத் தொழிலுக்கு பொருள்களை விநியோகிக்கும் வியாபாரப் பக்கம் வருவோம். பெருமளவு வெளிநாட்டுப் பணத்திலும் கணிசமான அளவு உள்நாட்டு உழைப்பில் வந்த பணத்திலும் கட்டுமானங்கள் 2010 ஆம் ஆண்டின் பின்பாக வேகமாக நடைபெற்று வருகின்றன.

இத் தொழிலும் பெரியதொரு மூலதனம் தேவைப்படும் ஒரு தொழிலாகும். 2010 ஆம் ஆண்டில் வேகமெடுத்த கட்டட நிர்மாணத் தொழில் தற்போது ஒரு மந்த நிலையில் இருப்பதையே அவதானிக்க முடிகிறது.

பெரிய கட்டிட நிர்மாணத்தில் ஈடுபடும் ஒப்பந்ததாரர்கள் தமக்கெனத் தனியாக யாட்



அமைப்பை வைத்திருப்பார்கள். அதனால் அவர்கள் மூலமான ஒப்பந்த வேலைகள் குறைவாகவே கிடைக்கும்.

சிறிய கட்டுமானப் பணியில் ஈடுபடும் ஒப்பந்ததாரருக்கு அவர்களுக்குத் தேவைப்படும் அளவில் கட்டுமானப் பொருள்களை வழங்க வேண்டும். அவர்கள் கடனுக்குக் கொள்வனவு செய்து விட்டு பல இலட்சங்களைக் கொடுக்கத் தாமதிக்கும் போது அல்லது ஏமாற்றும் போது தொழிலதிபர் பெரும் நிதி இறுக்கத்திற்குச் சென்று விடுவார்.

மணல் கிடைப்பதில் ஏற்படும் தாமதம் கூட தொழிலைக் கடுமையாகப் பாதித்து விடுகிறது.

Fresh Juice எனப்படும் பழச்சாறு விற்பனை நிலையத் தொழிலும் மிக இலாபகரமான தொழிலாக இருந்தது. ஆனால் இத் தொழிலில் இன்று பலர் பிரவேசித்துத் தொழிலின் இலாப நிலை கேள்விக்குரியதாகி விட்டது. வருடத்தின் 9 மாதங்கள் வெப்பமுள்ள காலநிலை நிலவும் போது நல்ல வியாபாரம் நடைபெறும். ஆனால் மழை பெய்யும் காலத்தில் 3 மாதங்களுக்கு வியாபாரம் மந்தமானதாகவே இருக்கும்.

பழங்களின் கிடைப்பனவு, அவற்றின் விலை வேறுபாடுகள், களஞ்சியப்படுத்தலில் ஏற்படும் பிரச்சினைகள் பழங்களது அழிவுகள் வியாபாரத்தைக் கடுமையாகப் பாதிக்கும்.

கொரியர் சேவை எனப்படும் வெளிநாடுகளுக்குப் பொதிகள், ஆவணங்களை அனுப்பும் வியாபாரத்திலும் பலர் ஈடுபட்டுக் கடும் போட்டி நிலவுகிறது. ஊருக்கு ஊர் சந்திக்குச் சந்தி இந்த வியாபார நிறுவனங்களின் கிளைகள் திறக்கப்படுகின்றன. புலம்பெயர் தேசங்களில் பல இலட்சம் உறவுகள் இருப்பதால் இத் தொழில் இலாபகரமானது.

ஆனால் வாடிக்கையாளரைக் கவர வேண்டும் என்பதற்காக அடிமாட்டுக் கட்டணத்தில் பொருள்களைப் பொறுப்பேற்கின்றனர். ஒரு வாரத்தில் பொருள்களை அனுப்புகின்றோமெனச் சொல்லி எடுப்பார்கள். ஆனால் 3 வாரம் அல்லது ஒரு மாதத்தில் போய்ச் சேரும் சாதாரண சேவையில் பொருள்களை அனுப்புவார்கள்.

இதனால் உணவுப் பொருள்கள் பழுதாகிய நிலையில் அவர்களது உறவுகளைச் சென்றடையும்.

வெளிநாட்டு நாணயத்தில் நடைபெறும் இந்தச் சர்வதேச வியாபாரத்தை நடத்துவதற்கு ஆங்கில மொழி அறிவு, கணனி அறிவு என்பவை மிக முக்கியமானவை. இவை இல்லாமல் சேவையை வழங்கும் நிறுவனங்களால் பாதிக்கப்படுபவர்கள் பலர்.

அடிமாட்டுக் கட்டணத்தில் பொருள்களைப் பொறுப்பேற்பதால் நியாயபூர்வமான கட்டணத்தில் திறம்பட சேவைகளை வழங்குபவர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

எந்த ஒரு வியாபாரமாக இருந்தாலும் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை போன்ற உள்ளூராட்சி அமைப்புகளிடம் அனுமதி பெறல் வேண்டும். இந்த உள்ளூராட்சி அமைப்புகள் பொறுப்புணர்வுடன் தரவுத் தளத்தைப் பராமரித்தால் வியாபாரம் செய்ய வருவோருக்குச் சரியான வழிகாட்டுதலை வழங்கலாம்.

ஏற்கனவே தமது பிரதேசத்தில் எத்தனை பேர் இத் தொழிலில் ஈடுபடுகின்றனர் போன்ற விபரங்களைப் புதிய தொழில் முயற்சியாளருக்குத் தெரியப்படுத்துவதன் மூலமாக வழிகாட்டலாம். பொதுசனத் தொடர்பு அதிகாரி ஒருவரை வைத்திருக்கும் இந்த அமைப்புகள் அவர் மூலமாக வழிகாட்ட முடியும்.

தற்போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதி பெறாமல் எந்த ஒரு தொழில்த்துறையையும் தொடங்க முடியாது. மாவட்டச் செயலகங்களில் உள்ள இந்த அதிகார சபையினர் புதிதாக விண்ணப்பிக்கும் தொழில் முயற்சியாளருக்கு அவர்கள் விண்ணப்பிக்கும் தொழிலில் ஏற்கனவே உள்ளவர்களது எண்ணிக்கை எத்தனை?, எத்தகைய சவால்கள், சந்தை வாய்ப்புகள் உள்ளன? போன்ற தகவல்களை வழங்கி வழிகாட்ட வேண்டும்.

இதன் மூலமாக வியாபாரம் அல்லது கைத்தொழிலைத் தொடங்கும் ஒருவர் ஆரம்ப நிலையிலேயே சரியான விழிப்புணர்வைப் பெற முடியும்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெற வேண்டுமென்ற நடைமுறை அனேகமாக எல்லாப் பிரதேசங்களுக்கும் வந்து விட்டது. இவர்களும் தரவுத் தளம் ஒன்றைப் பேணி முயற்சியாளர்களுக்கு வழிகாட்டுதல் வேண்டும்.

தமக்குரிய கட்டணம் கிடைத்தால் போதுமென்ற மனப்பாங்கைக் கைவிடல் வேண்டும்.

வங்கிக் கடன்களைப் பெற்றே அனேகமான தொழில் முயற்சியாளர்கள் தொழிலை ஆரம்பிக்கின்றனர். ஆகவே வங்கி அதிகாரிகள் தொழில் முயற்சியாளர்களுக்குத் தொழில்கள் தொடர்பான சவால்கள்

> **“தற்போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதி பெறாமல் எந்த ஒரு தொழில்த்துறையையும் தொடங்க முடியாது. மாவட்டச் செயலகங்களில் உள்ள இந்த அதிகார சபையினர் புதிதாக விண்ணப்பிக்கும் தொழில் முயற்சியாளருக்கு அவர்கள் விண்ணப்பிக்கும் தொழிலில் ஏற்கனவே உள்ளவர்களது எண்ணிக்கை எத்தனை?, எத்தகைய சவால்கள், சந்தை வாய்ப்புகள் உள்ளன? போன்ற தகவல்களை வழங்கி வழிகாட்ட வேண்டும்.”**

எவை? கடனை மீளளிப்பதில் எதிர்நோக்கும் சவால்கள் எவை?

என்பன போன்ற விடயங்களைத் தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்குதல் வேண்டும். ஒரு சில வங்கி அதிகாரிகள், முகாமையாளர்களே இந்த விடயத்தில் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்கின்றனர். ஆனால் பலர் கடன்பெறுவதற்குரிய ஆவணங்களைத் தயார் செய்வது தொடர்பாக மட்டுமே கவனம் செலுத்துகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வணிக முகாமைத்துவ பீடம், தொழில் முயற்சியாளர்களுடன் கைகோர்த்துச் செயல்படுவதற்குரிய நிறுவகக் கட்டமைப்பைச் செய்தல் வேண்டும். ஆனால் இவ் விடயத்தில் தொழில் முயற்சியாளர்களுடன் நெருங்கி வரவில்லையென்ற கருத்துக் கூறப்பட்டு வருகிறது.

வர்த்தகர் சங்க அமைப்பு எல்லா நகரங்களிலும் உள்ளது. இந்த அமைப்புத் தங்களது பிரதேசத்திலுள்ள தொழில் முயற்சியாளர்களது வெற்றிகள், தோல்விகள் தொடர்பான மதிப்பீட்டைப் பகுப்பாய்வு செய்து வைத்திருத்தல் வேண்டும்.

எத்தகைய தொழில்களை எப்படிச் செய்தால் இலாபகரமாக இயங்கலாம் போன்ற வழிகாட்டுதல்களைச் செய்தல் வேண்டும். தமது பிரதேசத்தில் ஒரே தன்மையினதான தொழில்களைப் பலர் செய்து நட்டப்படாமல் இருப்பதற்கான வழிகாட்டுதல்களைச் செய்தல் வேண்டும்.

நவீன தொழில்கள் தொடர்பான தேடல் அறிவைப் பெற்றுக் கொள்தல் வேண்டும். நவீன உலகின் வியாபாரப் போக்கைப் பற்றிய விழிப்புணர்வைத் தமது அங்கத்தவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

போர்க்காலத்தில் கப்பல் மூலமாக எடுத்து வரப்பட்ட பொருள்களை டம்பிங் ஸ்ரொக் வைத்திருந்து விற்ற பழக்கத்திலிருந்து விடுபடாத பழக்கம் இன்றும் சிலரிடம் உள்ளது.

வேறு வேறு வகையான தொழில்களில் ஈடுபட்டு இலாபம் உழைக்க வழிகாட்டுவதன் மூலமாகவே இந்தக் கழுத்தறுப்பு வியாபாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்பதே பேருண்மை. ■





# ஊருக்கை ஒரு கதை! – 08

## செத்தவனை உயிர்ப்பித்த செந்தில்நாதன் சாத்திரியார்

இராகன்

**முந்திக் கொஞ்சக்காலம் குறவப் பெண்டுகள் நாடோடியளாய் வருவினம். அவை குறி சொல்லுறது மாதிரி கைரேகை பார்த்துச் சாத்திரம் சொல்லுவினம். கணுக்கால் தெரிய உயர்த்தி “சாறி”கட்டி, கழுத்திலை மாலை மணியளைத் தொங்கவிட்டு, சீலைத் துண்டொண்டை உறிபோலை கட்டி தோளிலை “காண்ட் பாக்” போலை தொங்கவிட்டு, கங்காரு குட்டியைக் காவிறதைப்போலை பிள்ளையளை வயித்தோடை அல்லாட்டில் முதுகோடை அணைச்சபடி சீலையாலை சுத்தி வரிஞ்சு கட்டி, வாய் நிறைய வெத்திலை குதப்பிக்கொண்டு வந்துபோன சாத்திரக் காறியளெட்டை, கையை நீட்டிக்கொண்டு வாயைப்பிளந்து கேக்கிறதிலை சிலபேருக்கு நல்ல விருப்பம்.**

இண்டைக்கு ஊருக்குள்ளை எத்தினை சாத்திரிமார் இருக்கினம். சும்மா ஊரொண்டுக்குள்ளை நுழைஞ்சால் குறைஞ்சது ஐஞ்சுபேரெண்டாலும் இருப்பினம்! அதிலையும் ரகம் ரகமா சாத்திரம் சொல்லுறவை இருக்கினம். பேர்பெற்ற வைத்தியர்மாரிலை இதயத்துக்கு ஒருத்தர், “கிட்னிக்கு” ஒருத்தர், கண்ணுக்கு ஒருத்தர், முறிவுநெரிவுக்கு ஒருத்தர் எண்டு இருக்கிறதைப்போல, சாத்திரிமாரிலையும் பலன் கேட்க ஒருத்தர், கலியாணப் பொருத்தம் பார்க்க இன்னொருத்தர், மனையடிச் சாத்திரத்துக்கு மற்றொருத்தர் எண்டு வகை வகையா இருக்கினம். இப்ப சாத்திரிமாரின்ரை வீடுகளுக்குப் போனியளேயெண்டால் ஏங்கிப் போவியள்! மேசை போட்டு, வாறவைக்குக் குசன் கதிரையள் போட்டு, தங்களுக்குச் சுழல் கதிரை போட்டு ஒரு “மனேஜிங் டிறக்டர்” கணக்கிலைதான் சாத்திரிமார் இருப்பினம். வாடிக்கையாளரின்ரை தொகையைப் பொறுத்து “ஏ.சீ.” போட்ட இடங்களும் இருக்கு.

இவ்வளவுக்குச் சாத்திரிமார் மழைக்கு முளைச்ச காளான் மாதிரி வந்ததுக்கு காரணம் என்னெண்டு நினைக்கிறியள்? எங்கடையாக்களுக்கு ஒண்டிலையும் நம்பிக்கையில்லை! ஒரு வைத்தியரை நம்பிறதில்லை. ஒரு சாத்திரியை நம்பிறதில்லை. ஒரு கடவுளைத்தானும் நம்பிறதில்லை. கடைசியா ஒண்டையும் நம்பிறதில்லை. ஒண்டிலையும் நம்பிக்கையில்லாமல் எப்பிடி மனிசர் வாழுறது? சொல்லுங்கோவன் பாப்பம். சனத்தின்ரை இந்த நாடித்துடிப்பைப் பிடிச்சுத்தான் எக்கச்சக்கமான யாவாரங்கள் நடக்குது! அந்த யாவாரத்திலை ஒண்டாத்தான் சாத்திரமும் மாறிப்போச்சு!

பரம்பரை பரம்பரையாச் சாத்திரம் பார்த்துவந்த எத்தினைபேர் இருந்திருக்கினம். அவையளின்ரை ஆசாரத்துக்கு கிட்டை ஆரும் நிக்கேலாது. சாதகம் பார்த்து ஒண்டைக் கணிச்சுச் சொன்னால் சொன்னமாதிரி நிச்சயம் நடந்து முடியும். இப்ப அப்பிடியே? உள்ளூருக்கை இருக்கிற கலியாணப் “புறோக்கரே” சாத்திரியாகிவிட்டார். எந்த நட்சத்திரக்காரனுக்கு எந்த நட்சத்திரக்காரியைப் பொருத்தலாம் எண்டு எழுதி வைச்சது மாதிரிச் சொல்லுவினம். ஒரு பஞ்சாங்கம் இருந்தால் அவர் சாத்திரியாகிவிடலாம். இது தான் இண்டைக்கு, தடக்குப்படுகிற இடத்திலையெல்லாம் சாத்திரிமார் முளைக்கிறதுக்குக் காரணம்.

முந்திக் கொஞ்சக்காலம் குறவப் பெண்டுகள் நாடோடியளாய் வருவினம். அவை குறிசொல்லுறது மாதிரி கைரேகை பார்த்துச் சாத்திரம் சொல்லுவினம். கணுக்கால் தெரிய உயர்த்தி “சாறி”கட்டி, கழுத்திலை மாலை மணியளைத் தொங்கவிட்டு, சீலைத் துண்டொண்டை உறிபோலை கட்டி தோளிலை “காண்ட் பாக்” போலை தொங்கவிட்டு, கங்காரு குட்டியைக் காவிறதைப்போலை பிள்ளையளை வயித்தோடை அல்லாட்டில் முதுகோடை அணைச்சபடி சீலையாலை சுத்தி வரிஞ்சு கட்டி, வாய் நிறைய வெத்திலை குதப்பிக்கொண்டு வந்துபோன சாத்திரக்காறியளெட்டை, கையை நீட்டிக் கொண்டு வாயைப்பிளந்து கேக்கிறதிலை சிலபேருக்கு நல்ல விருப்பம். அவையள் சொல்லுற பலனைக் கேட்டு ஆனையிலை ஏறின புழுகம் சிலபேருக்கு. இன்டைக்கு அப்பிடிச் சாத்திரம் சொல்லுற ஆக்களைக் காணுறது சரியான குறைவு. “குசன்” கதிரை குண்டியிலை சூடேத்த சாத்திரம் பார்க்கிறதுதான் பெருமையாப் போட்டுது பாருங்கோ!

செந்தில்நாதன் சாத்திரியார் சுழல்கதிரை போட்ட சாத்திரியில்லை. அவர் கொஞ்சம் பழசு. வீட்டுக்குப் புறம்பாக ஒரு மண்விறாந்தை போட்டு, உயரமான மண் திண்ணை நிலத்தை சாணியாலை மெழுகி, திண்ணையிலை இருக்கிறதுக்கு தடுக்குப்பாய் இழைச்சுப் போட்டு, சாதகக் கொப்பியையும் பஞ்சாங்கத்தையும் வைச்சு படிக்கவும், எழுதவும், தடுக்குப் பாய்க்கு முன்னுக்கு ஒரு கல்லாப்பெட்டி வைச்சு, கல்லாப்பெட்டிக்குப் பக்கத்திலை “எவர்சில்வர்” வெத்திலைப் பெட்டியுக்குள்ளை வெத்திலை, பாக்கு, சுண்ணாம்பு, கராம்பு, கறுவாப் பட்டை கிடக்கும். சாத்திரியாருக்குப் பின்னாலை மண் சுவரிலை உலகத்துக் கடவுள்மார் எல்லாரின்ரை படமும் “பிறேமுக்குள்ளை” சிரிப்பும், கடுங்கோபமும், கருணையும் மிஞ்சியபடியிருக்கும். அந்தச் சுவாமிப் படங்களை பின்னணியா வைச்சு இருந்துகொண்டு சாத்திரியார் சாத்திரம் சொல்லுற “ஸ்டைலை” பார்த்து, தகப்பன் சண்முகசுந்தரம் சாத்திரியை உரிச்சுப்படைச்சு வைச்சிருக்கிறார் எண்டு ஊருக்கை எல்லாரும் சொல்லுவினம்.

செந்தில்நாதன் சாத்திரியார் செவ்வாய், வெள்ளி, ஞாயிறு நாட்களிலைதான் சாத்திரம் பார்ப்பார். மற்ற நாளிலை மனிசன் தன்ரை தோட்டம் துரவுக்கைதான் முழுநேரமும் மினைக்கடுவார். ரண்டாயிரம் மூவாயிரங் கண்டு பொயிலை செய்யிற தோட்டக்காரன் சாத்திரியார். காலையிலை கட்டின செம்மண் பழுப்பேறிப் போய்க் கிடக்கிற சாரத்தை இரவுதான் கழட்டுவார். சாத்திரம் பார்க்கிற நாளுகளிலை மனிசனை ஆரும் பார்த்தால் தோட்டக்காரனெண்டு சொல்லாயினம். பிறவிப் பிராமணன் எண்டுதான் நினைப்பினம்! அத்தினை பாவனை!

வெள்ளையும் சொள்ளையுமா வேட்டி. தண்ணிவிட்டு களியாகக் கரைச்ச திருநீத்தாலை நெத்தி நிறைய மூண்டு குறி. ஆழ்வார்கோயில் நாமத்திலை ஒரு பெரிய பொட்டு. அதுக்கு நடுவிலை குங்குமத்திலை இன்னுமொரு பொட்டு. ரோமம் நிறைஞ்ச நெஞ்சின்ரை ரண்டு பக்கமும் சந்தனம் குழைச்சு இழுத்த அணில் கோடுகள். கழுத்தைச் சுத்தி ரண்டு கையளோடும் தொங்கிற சரிகைச் சால்வை. வெத்திலையால சிவந்த வாயிலையிருந்து கறுவா வாசத்தோடை வெளியிலை வாற வார்த்தையள். இதெல்லாத்தோடையும் அவர் ஒரு பூணூல் போடாத புரோகிதர் போலை தெரிவார். கரகரத்த குரலிலை அவர் சொல்லிற பலனைக் கேக்கிறதுக்கு கிழமையிலை அந்த மூண்டு நாளிலையும் ஒராளுக்குப் பின்னாலை இன்னொரு ஆளா ஆக்கள் வந்தபடியிருப்பினம். மனிசன் சாப்பாடு தண்ணியில்லாமலும் தொடர்ந்து சாத்திரம் பார்க்குமாம். சாத்திரம் பார்க்கிறதுக்கு இவ்வளவுதான் காசெண்டு இல்லை. குடுக்கிறதை வாங்கி எவ்வளவு காசெண்டு பாராமல் முன்னுக்கிருக்கிற கல்லாப்பெட்டியைத்திறந்து போடுவாராம். அவரெட்டை வரேக்குள்ளை காசை சின்னத் தாளுகளாக மாத்திக்கொண்டு வாறவைதானாம் கூட!

செந்தில்நாதன் சாத்திரியார் பொதுவைத்தியர் மாதிரி. பலதுக்கும் பரிகாரம் சொல்லுவார். இருந்தாலும் கலியாணப் பொருத்தத்துக்கும், மனையடிச் சாத்திரத்துக்கும் கெட்டிக்காரனெண்டு பேர் வாங்கினவர். மனிசனைக்கொண்டு கிணத்துக்கு நிலையமெடுத்தால் பாறையிலையிருந்து தண்ணிக்குப் பதிலா தேன்தானாம் ஊறுமெண்டு சொல்லுவினம். என்னதான் பொதுவைத்தியர் எண்டாலும் ஏதோ ஒண்டிலை “எக்ஸ்பேர்ட்”டாக இருப்பினம். சாத்திரியார் பொருத்தம் பார்த்து கலியாணம் முடிச்சவை ஒரு குறையுமில்லாமல் ஓகோவெண்டு வாழுதுகளாம்.

உப்பிடித்தான் ஒருநாள், ஒரு வெள்ளிக்கிழமை, ஆரோ ஒருத்தன் பலன் பார்க்க வந்திருக்கிறான். சாத்திரியாரும் பலன் பார்த்து முடிய வழமையைப்போலை காசை வாங்கி எவ்வளவெண்டு பாராமல் கல்லாவுக்குள்ளை காசைப் போட்டிருக்கிறார். போட்டகாசு ஆயிரம் ரூபாத் தாள்க் காசாம். வந்தவன் மிச்சக் காசு தருவாரெண்டு காத்துக்கொண்டு இருந்திருக்கிறான். அது சரிவராது எண்டு தெரிஞ்சுபோக, சாத்திரியாருக்கு ஒரு பாடம் படிப்பிச்சுக் காட்டவேணும் எண்டு நினைச்சு, இன்னும் ரண்டு சாதக கொப்பியளை எடுத்து கலியாணப் பொருத்தம் பார்க்கச் சொல்லி குடுத்திருக்கிறான். சாத்திரியாரும் ஆயிரம் ரூபாவுக்கு விசுவாசமாக அந்தக் கலியாணப் பொருத்தத்தையும் பார்த்திருக்கிறார். மாப்பிளை பொம்பிளை சோக்காக வாழுற பலனுள்ள சாதகம் எண்டு சொல்லி பொச்சடிச்சுச் சொல்லியிருக்கிறார். வந்தவன் ஏதோவொரு உள்நோக்கத்தோடை இந்தக் கலியாணத்தாலை மாப்பிள்ளையின்ரை ஆயுள் பலம் எப்பிடியிருக்கும் எண்டு கேட்டிருக்கிறான். சாத்திரியார் வரப்போற பொம்பிளையின்ரை தாலிப்பலமும் திறம், அதைவிடத் திறம் மாப்பிள்ளையின்ரை ஆயுள்ப் பலம் எண்டு சொல்லி, உடனடியாச் சம்மந்தத்தைச் செய்து முடியுங்கோ எண்டு விளாசியிருக்கிறார். வந்தவனுக்கு சாத்திரியார் எவ்வளவெண்டு பார்க்காமலே கல்லாவில் போட்ட ஆயிரம் ரூபாவை மொத்தமாக் குடுத்த வெப்பியாரம். எழும்பி நிண்டு நாலு தூசணத்தை சகட்டுமேனிக்கு விட்டிருக்கிறான். “செத்தவனுக்கு ஆயுள்ப் பலம் சொல்லிற சாத்திரி. செத்தவனுக்குச் சாத்திரம் பார்க்கிறவனுக்கு ஆயிரம் ரூபா” எண்டு சொல்லிக் கத்தியிருக்கிறான். சாத்திரியார் கலங்கிப்போனாராம். தூசணத்தை தாங்க மாட்டாமல் கல்லாவிலை இருந்து அவன் தந்த ஆயிரத்தை எடுத்து திருப்பிக்குடுத்து கெஞ்சி மண்டாடி அனுப்பிவைச்சாராம். சாத்திரியாருக்கு மரியாதை கேடா போச்சுதாம். தான் பார்த்த மாப்பிளையின்ரை சாதகம் செத்துப்போன ஒருதன்ரை சாதகம் எண்டு கண்டுபிடிக்க வழியில்லாததை நினைச்சு நினைச்சு சாத்திரியார் சாகும்வரைக்கும் செத்துக்கொண்டிருந்தாராம். அந்த சம்பவம் நடந்த நாளிலையிருந்து ஒரு சாதகம் பார்க்கிறதுக்கு நூறு ரூபா எண்டு வாசலிலை அறிவித்தல் போட்டுவிட்டாராம். ■

# 31 வருடங்களில் மீளாக் குடிகளாக வலிவடக்கு மக்கள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிக்கப்படாத பிரதேசங்கள் விடுவிக்கப்படுவது தொடர்பில் சம்மந்தப்பட்ட மக்களுக்கு ஆசை காட்டி வாக்குகளைப் பெற முனைகின்றனர். உண்மையில் அந்த வாக்கு நேரடியாக அரசுக்குரியதல்ல. அது அவர்களுடன் ஒட்டிக் கொண்டு அரசியல் நடத்தும் தமிழ் பிரதிநிதிகளுக்குரியது. அவர்களை வெல்ல வைப்பதன் மூலம் தனது அரசியல் பலத்தினை வடக்கில் வலுப்படுத்துவதே சிங்களத் தலைமைகளின் நோக்கமாக இருக்கிறது. அத்தகைய நோக்கத்திற்குத் தமிழ் அரசியல் தரப்பு துணை போகின்றதே தவிர மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கம் அவர்களிடம் இல்லை. வலிகாமப்பகுதியில் இன்னமும் விடுவிக்கப்படாத பகுதியாக தையிட்டியின் ஒருபகுதி. மயிலிட்டி வடக்குப்பகுதி, பலாலி வடக்கு, பலாலி கிழக்குப் பகுதி, கீரிமலை, ஒட்டகப்புலம் அடங்கலாக ஏறத்தாழ 3500 ஏக்கர் நிலங்கள் காணப்படுவதாக அறியக் கிடைக்கின்றது. அரசுக்கும், இராணுவத்தினருக்கும் ஏன் தமிழ் அரசியல் கட்சியினருக்கும் கூட அப்பகுதி ஒரு செம்மண் கலந்த பூமியாகத்தான் தெரியும். ஆனால் அது வெறும் பூமி மட்டுமல்ல, நெடுங்காலம் வாழ்ந்துவந்த இனத்தின் வாழ்க்கை, பண்பாடு, ஆத்மார்த்த உணர்வு, கனவு என்பன கலந்தே இருக்கிறது. எப்போதுமே அந்த நிலத்துடன் பிரிக்க முடியாத பந்தம் ஒட்டிக் கொண்டே இருக்கிறது. இது அதிகார வர்க்கத்திற்கு எப்போதும் புரிவதே இல்லை, அடக்கப்படும் மக்களின் உணர்வுகள் தொடர்பில் அவர்கள் சிந்திப்பதில்லை, தமது பூர்வீக மண்ணிற்கு மீண்டும் சென்று ஒருநாளாவது வாழவேண்டும் என்று கனவு கண்ட எத்தனையோ ஆன்மாக்களின் ஆசை நிறைவேறாமலே போயிருக்கின்றன. இன்னும் எஞ்சியிருக்கும் ஆன்மாக்களின் கனவுகளாவது நிறைவு செய்யப்படவேண்டும் என்று அப்பகுதி மக்கள் விரும்புகின்றனர்.

பொருத்தமற்ற காரணங்களைச் சொல்லிக்கொண்டே இத்தனை காலமாக அரசதரப்பினர் அப்பகுதியில் மக்களை மீளக் குடியமர்த்தத் தாமதித்து வருகின்றனர். ஆரம்பகாலத்தில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்ததனால் அப்பகுதியினை விடுவிப்பதில் சிக்கல் இருப்பதாகத் தெரிவித்தவர்கள், விமான நிலைய விஸ்தரிப்பின்போது அதனைக் காரணம் காட்டி நிலவிடுவிப்பினைத் தடுத்து வைத்துள்ளனர். உண்மையில் இவை எதுவும் பொருத்தமான காரணங்கள் அல்ல இராணுவத்துக்கு அச்சுறுத்தல் தரக்கூடிய எந்த ஆயுதக் குழுவும் இலங்கையில் இல்லை. விடுதலைப் புலிகளின் அத்தியாயம் முடிக்கப்பட்டதோடு அவ்அச்சுறுத்தலும் இல்லாமல் போய்விட்டது. விமான நிலையத்தை விஸ்தரிப்பதில் ஈடுபட்டிருந்த இந்தியத் தரப்பினர் மேலதிகமான காணி தேவையில்லை என்று கூறியிருக்கின்றனர். எனவே அரசால் குறிப்பிடப்பட்ட இரண்டு காரணங்களும் அர்த்தமற்றவை என்பது தெளிவு. அப்படியாயின் ஏன் மக்களுடைய நிலத்தினை இராணுவத் தரப்பு விடுவதற்குச் சம்மதிப்பதாக இல்லை? என்ற கேள்வி எழுகிறது. இந்தக்கேள்வியை எமது தமிழ் அரசியல் கட்சிகள் வலுவாக கேட்டிருக்க வேண்டும். அரசியல் தரப்பு எனும்போது எதிர்ப்பரசியல் செய்பவர்களும், இணக்கரசியல் செய்பவர்களும் உள்ளடங்குகின்றனர். இரண்டு தரப்புமே இது தொடர்பில் கரிசனை கொண்டதாகத் தெரியவில்லை. கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் பலாலி மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்ட மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தா தனக்கு அதிகப்படியான வாக்குகளை மக்கள் தராததன் காரணத்தினால் அரசிடம் தன்னால் எந்த அழுத்தத்தினையும் கொடுக்க முடியாமல் இருப்பதாகத் தெரிவித்திருந்தார். இதே போல 2015 ஆம் ஆண்டு வலிவடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வு அமைப்பின் தலைவர் அ.குணபாலசிங்கம் ஒழுங்குபடுத்தியிருந்த சந்திப்பில், தான் மீளக்குடியமர்வதற்கு எந்த ஒழுங்கும் செய்யமாட்டேன், உங்களுக்கு நான் அந்த உதவியைச் செய்தாலும் நீங்கள் வீட்டுச் சின்னத்துக்கே வாக்களிப்பீர்கள் என்று தெரிவித்திருந்ததாகக் குறித்த ஒழுங்கமைப்பாளருடன் உரையாடியபோது தெரியவந்துள்ளது. இது எதனைப் புலப்படுத்துகின்றது? வாக்குகளை எனக்கு வழங்கினால்தான் நான் மக்களுக்குரிய நலத்திட்டங்களைச் செய்வேன் என்பதாக அமைகின்றது. மக்களுக்குரிய வேலைத்திட்டங்களை எந்த எதிர்பாப்பும் இல்லாமல் செய்ய வேண்டும். அப்போது அதன் பலன் வந்து சேரும் என்பது அமைச்சருக்குப் புரியாமல் இருப்பது ஏன்? என்ற கேள்வி மக்களிடம் எழுகிறது. மக்கள் கொடுத்த வாக்குகளின் நிமிர்த்தமே இன்று அமைச்சுப்பதவி கிடைத்துள்ளது. வடக்கில் உள்ள எல்லாத் தமிழரும் வாக்களித்தால், தான் நான் மக்கள் நலனைப்பார்ப்பேன் என்பது சிறுபிள்ளைத்தனமான பதில் என்பதனை பொதுவாக எல்லா அரசியல்வாதிகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

அரசியல் கட்சிகள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் எந்தவகையான கருத்துபேதங்களுக்கும் அப்பால் நின்று சிந்தித்து அப்பகுதி மக்களின் காணிகளை விடுவிப்பதற்குரிய போராட்டத்தினை வலுப்படுத்த வேண்டும். பல போராட்டங்களின் பின்புதான் வலி வடக்குப் பகுதிகளின் ஏனைய நிலங்கள் விடுவிக்கப்பட்டதாக சமூக செயற்பாட்டாளர் அ.குணபாலசிங்கம் தெரிவித்திருந்தார். அவரது அனுபவத்தினைக் கருத்தில் கொண்டு செயற்படலாம். உண்மையில் அரசுக்கு அல்லது இராணுவத்தினருக்கு அப்பகுதிகள் தேவையற்றவை. அவர்கள் சொல்லும் காரணங்களும் போலியானவை. மக்களின் கருத்துப்படி இராணுவத்தினர் அவர்களுடைய நிலங்களினைப் பயன்படுத்திப் பணம் பார்ப்பதாக அறிய முடிகிறது. உண்மையில் ஒரு தனிமனிதனுடைய சொத்து அவனுக்குரியது. அவனது சொத்தை அடாத்தாக வைத்திருப்பது, அதிலிருந்து இலாபத்தினைச் சம்பாதிப்பது சட்டத்துக்கு முரணானது. இவ்வாறான சட்டத்தினை வைத்துத்தான் வடக்கில் இராணுவம் இருந்த தனியார் வீடுகள், நிலங்கள் மீண்டும் அவர்களுக்கு மீட்டுக்கொடுக்கப்பட்டது. இது பலாலி வடக்குக் காணிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு குடியானவர்களும் தங்களது நிலங்களுக்குரிய உறுதியினை வைத்திருக்கிறார்கள். உலகநாடுகளுக்கு இராணுவத்தினர் அப்பகுதியில் மக்கள் வாழவில்லை என்று சாதித்து வந்ததாகவும் அதற்கான உரு மறைப்புக்களை அவர்கள் மேற்கொண்டதாகவும் அப்பகுதிகளை விடுவிப்பதற்காகச் செயற்பட்டுவந்த செயற்பாட்டாளர்களின் மூலம் அறியக் கிடைக்கின்றது. இது முழுப் பூசணிக்காயைச் சோற்றுள் புதைக்கும் விளையாட்டு. இத்தகைய விளையாட் டுக்களை விடுத்து மக்களின் நிலங்களை மக்களுக்கு வழங்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும். ■

## விளைச்சல் நிலம் சிறைப்பட்டுக் கிடக்கிறது



வலி.வடக்குப் பகுதி முற்றுமுழுதாக விடுபடுவதற்கு அக்கறையுடன் செயற்பட வேண்டும். 1990 ஆம் ஆண்டு 6,500 ஏக்கர் காணி இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அதில் 3,000 ஏக்கர் காணி இதுவரையில் விடுவிக்கப்பட்டுள்ளது. இன்னும் 3,500 ஏக்கர் காணி விடுவிக்கப்பட வேண்டியுள்ளது. இந்த 3,000 ஏக்கர் என்பது மிகமுக்கிமானது. ஏறத்தாழ 2,000 ஏக்கர் விளைச்சல் நிலம் இதனுள் அடங்குகின்றது. இடப்பெயர்வுக்கு முன் இந்த நிலப்பரப்பில் விளைவிக்கப்பட்ட விளைச்சல் பொருட்கள் யாழ்ப்பாணக் குடாநாடெங்கும் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது. இது விவசாயிகளின் வாழ்வாதாரம் மட்டுமல்ல சுற்றியிருந்த மக்களின் வாழ்வாதாரத்தின் மேம்பாட்டுக்கும் பங்காற்றியிருந்ததோடு. வேறு பிரதேசங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மரக்கறிப் பொருட்களை கொண்டுவரவேண்டிய அவசியம் அற்ற சூழலையும் ஏற்படுத்தும் மிக முக்கியமான பங்கினை வகித்திருந்தமை அறியக்கூடிய உண்மையாகும். அத்தகைய பெறுமதிமிக்க நிலங்கள் மக்களிடம் கொண்டுசேர்க்கப்பட வேண்டும். அதற்கான முயற்சிகள் காலம்காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஆனால் ஏதோ ஒரு வகையில் தடைப்படுத் தப்பட்டும் வந்துள்ளது. அவ்வாறான தடைகளை இனம் கண்டு தமிழ் அர சியல்வாதிகள் சம்பந்தப்பட்டவர்க ளோடு பேசி மக்களின் நிலங்களை மீட்டெடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

**அ.குணபாலசிங்கம்**
**தலைவர்**
**வலிவடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கம்**

## உறவுகளோடு கூடி வாழ்ந்த மண் சிதைந்து கிடக்கிறது



1990 ஆம் ஆண்டு பலாலியில் இருந்து இடம் பெயர்ந்த நாங்கள் இதுவரையில் சொந்த மண்ணுக்குத் திரும்பவில்லை. இடம் பெயரும் போது நான்கு ஐந்து நாட்களில் திரும்பி வந்து விடலாம் என்று உடுத்த உடுப்போடு வெளிக்கிட்டு வந்தோம். யுத்தம் முடிவடைந்த பின்னர். எங்களுடைய பூர்வீகக் மண்ணுக்குப் போகலாம் என்ற நம்பிக்கை இருந்தது. அதற்கான பல முயற்சிகள் நடைபெற்றபோதும் அங்குள்ள ஆலயங்களுக்கு மட்டுமே போய்வருதற்கான அனுமதி கிடைத்தது. அதன் படி எங்கள் பூர்வீகக் கோயிலான சக்திவேல் முருகன் ஆலயத்திற்கு 2018 ஆம் ஆண்டு மக்களையும் அழைத்துக் கொண்டு சென்றோம். அங்கு வீடுகள் எதுவும் இல்லை. வெட்டவெளியாக இருந்தது அப்பிரதேசம். நாங்கள் மகிழ்வோடு வாழ்ந்த உறவுகளோடு கூடி மகிழ்ந்த மண் தரிசாகிக் கிடந்ததானது எல்லோரிடமும் ஏமாற்றத்தையும் பெருந்துயரையும் ஏற்படுத்தியிருந்தது. மீண்டும் எங்கள் மண்ணில் வந்து வாழமாட்டோமா என்ற ஏக்கம் இன்று வரை எம் மக்களிடம் துயரமாகவே இருக்கின்றது. சம்பந்தப்பட்டவர்கள் அக்கறை எடுத்து எங்கள் மண்ணை மீட்டுத்தர வேண்டும் என்று எங்களுடைய மக்கள்சார்பாக வேண்டிக் கொள்கின்றேன்.

**கு.அமிர்தலிங்கம்**
**தலைவர்**
**பலாலி சக்திவேல் ஆலயம்.**

## எங்கள் நிலம் பாதுகாப்பு வலயம் அல்ல பணம் உழைக்கும் வலயம்



பலாலியில் இருந்து நாங்கள் துரத்தப்பட்டு 31 ஆண்டுகள் முடிவுற்றுள்ளன. மக்கள் வெளியேற்றப்பட்ட பல பகுதிகள் விடுவிக்கப்பட்டு அங்கு அவர்கள் மீண்டும் குடியேறும் போது நாங்கள் எப்போது ஊருக்குப்போவோம் என்ற ஏக்கம் அதிகரிக்கிறது. எங்களுடைய நிலத்தினை விடுகிறார்கள் இல்லை. அவர்கள் பாதுகாப்பு வலயத்தினைக் காரணம் காட்டுகிறார்கள். உண்மையில் அவர்களுக்கு எங்கள் நிலம் பாதுகாப்புத் தேவைகளுக்காக பயன்படவில்லை. இராணுவத்தினர் 3500 ஏக்கர் நிலப்பரப்பில் ஏறத்தாழ 500 ஏக்கர் நிலப்பரப்பிலேயே அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிறிய பாதுகாப்பு அரணை அமைத்து இருக்கிறார்கள். எங்கள் பகுதியில் விவசாயம் செய்து இலாபம் உழைக்கிறார்கள் என்று அறிகிறோம். எங்களுடைய மக்கள் பலதிசையிலும் சிதறியிருந்து வாழ்வாதாரத்திற்கு கஸ்டப்படுகிறார்கள். 2000 ஏக்கர் விளைச்சல் நிலம் எங்களுக்கானதாய் இருக்கிறது. இராணுவத்தினர் விடுவித்தால் எங்கள் மக்களின் வாழ்வாதாரம் மட்டுல்ல யாழ்குடாநாட்டின் உணவுத் தேவைகளும் பூர்த்தியாகும். எங்களின் 31 வருடகால துயரினைத் துடைப்பதற்கு எமது அரசியல் தரப்பினர் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று இந்நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மா.குணசேகரன்**
**தலைவர்**
**பலாலி மக்கள் ஒன்றியம்.**

## என் அப்பாவின் கனவு என்னுடைய கனவாகவும் இருக்கிறது



என்னுடைய அப்பாவின் பூர்வீக நிலம் தான் பலாலி. நான் அங்கு பிறக்கவில்லை. எனக்குப் பலாலி தெரியாது. ஆனால் அப்பா தன்னுடைய மண்ணின் பெருமை, அவரோடு கூடி வாழ்ந்த உறவுகள், அம் மண்ணின் பண்பாடு, அவருடைய நண்பர்கள், நண்பர்களின் குறும்புத்தனங்கள் என்பவற்றினைச் சொல்லும்போது நான் அங்கு வாழவில்லையே என்ற ஏக்கம் ஆட்கொள்கிறது. இன்றைக்கு 31 வருடம் கடந்தும் நாங்கள் எங்களுடைய ஊருக்குப் போக முடியவில்லை என்ற கவலை வெகுவாக ஆக்கிரமிக்கிறது. ஒரு ஊர் என்பது வெறும் வார்த்தை மட்டுமல்ல அது ஒரு வாழ்க்கையின் வடிவம். பண்பாடு, கலாசாரம் விழுமியங்கள் போன்றவற்றைக் கற்றுத்தரும் கலைத் தாய், ஒவ்வொரு மனிதனதும் ஆத்மார்த்தமான உணர்வு. அதனை நான் எனது அப்பாவின் எண்ணங்களிலிருந்து புரிந்து கொள்கிறேன். இப்படித்தான் எல்லோரும் இருப்பார்கள் என்றும் எண்ணிக் கொள்கிறேன். அப்பாவின் கனவு தன்னுடைய ஊருக்குப்போக வேண்டும் என்பதாக இருக்கிறது. இப்போது என்னுடைய கனவும் அதுவாகவே இருக்கின்றது. அது போலவே என்னைப் போன்ற பிள்ளைகளின் கனவாகவும் இருக்கும்.

**க.சாய்ராம்**
**தொழில்நுட்ப உத்தியோகத்தர்.**

# ஒவ்வொரு நாளும் சர்வதேச யோகா தினமானால்...

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21 ஆம் திகதியில் வரும் சர்வதேச யோகா தினமானது ஒரு நாளில் முடிந்து போகும் நிகழ்வு தானா? பெருந்தொற்று காரணமாக மனித குலம் இழப்புகளைச் சந்தித்து வருவது மட்டுமல்லாமல், பலரும் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டு பயம், வேதனை மற்றும் பொருளாதார இழப்பு போன்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள். அன்றாடம் உழைத்து சீவனம் செய்பவர்கள் பாடு சொல்லத் தேவையில்லை.


மகிழ்ந்திருந்த காலத்தில் கடவுளைப் பற்றிய சிந்தனை, தேடல் இல்லாமல் இருந்த பலர், துன்பம் என்று வந்த காலத்தில் கடவுளே இல்லை என்று சமூக வலைத்தளங்களில் எழுதுவதைக் காணக் கூடியதாக உள்ளது. இன்பம், துன்பம் என்ற இருமைகளில் பாதிக்கப்படாத ஒரு பாதையைக் கண்டு கொண்ட, ஆனந்தமயமாக இருக்கக் கற்றுக் கொண்ட கூட்டம் கொரோனா காலத்தை இயல்பாகக் கடந்து வருகிறது. இவர்களை இல்லற யோகிகள், தன்னை உணர்ந்தவர்கள், என்று பலவாறாக அழைத்துக் கொள்ளலாம். 'நடுவு நின்றாரோடு நானும் நின்றேனே' என்ற திருமூலர் பாடல் ஞாபகம் வருகிறது. இடர் காலத்தில் எமது உடல், உள வளத்தைக் காக்க, ஆன்மீக வழியைத் தேடி, பிராண சக்தியோட்டம் நிகழும் நாடிகளில் ஏற்பட்டுள்ள தடைகளை நீங்கி ஆத்ம பலத்துடன் வாழ வேண்டிய காலமிது. சித்தர்கள், முத்தர்கள் காட்டிய யோக வழி நிற்பதன் மூலம் புலன்கள் எம்மை ஆள விடாமல், யோக, தியான முறைகளைக் கைக்கொள்வதன் மூலம் ஆன்ம உணர்வு பெறலாம். கடவுள் என்பது உள்ளத்தைக் கடந்து சென்று உணர வேண்டிய உண்மை. இதனை சித்தர்கள் கண்டுணர்ந்து எமக்கு உரைத்தனர். திருமூலரின் பாடலோன்று.......

படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஆங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே

நடமாடும் கோயிலான பசித்திருக்கும் மனிதர்களுக்குப் படைக்கும் உணவு, படமாக காட்சி தரும் கடவுளுக்கு படைத்ததாகவே கருதப்படும் என்பதே இத்திருமந்திரப் பாடலின் கருத்து. இப்பாடலின் முக்கியத்துவம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

நவீன உலகின் வாழ்க்கை முறைகளினால் மனித குலம் மீட்சி அடைய வேண்டும் என்று தமது ஞானத்தால் அறிந்தே சித்தர்கள் தம் யோக அனுபவங்களை எழுதி வைத்துவிட்டுப் போனார்கள். கி.பி 203 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் பரங்கிப்பேட்டையில் பிறந்த நாகராஜ் என்ற இயற்பெயரும், இன்று கிரியா யோக மூலகுருவுமாகிய மகாஅவதார் பாபாஜி நாகராஜ் என்றும் அழைக்கப்படும், உலகறிந்த சித்தரும் ஆவார். இதில் ஒருவர் பார்க்க வேண்டும். இவர் கதிர்காமத்தில் போக நாத சித்தரிடம் யோக, தியானங்களைக் கற்று, பொதிகையில் அகத்தியரிடம் கிரியா குண்டலினி பிராணாயாம தீட்சையும் பெற்று, பத்திரிநாத்தில் சொரூப சமாதியடைந்தவர். ஆதிசங் கரர், கபீர்தாஸ் போன்ற பலரின் ஆன்மீக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்.

**மகாஅவதார் பாபாஜி நாகராஜ் லாகிரி மகாசாயர்**



நவீன உலகுக்கு இல்லறத்தில் இருந்து கொண்டே யோகியாக வாழ்ந்து காட்டியவர் லாகிரி மகாசாயர். ஆங்கில இராணுவத்தில் கணக்காளராகப் பணியாற்றிய போது, இமயமலையின் அடிவாரத்தில் உள்ள ராணிகேட் என்ற இடத்தில் பாபாஜியால் ஆட்கொள்ளப்பட்டு கிரியா யோகத்தில் தீட்சை வழங்கப்பட்டது. பாபாஜியுடன் தங்கி விட விரும்பினார் லாகிரி மகாசாயர். ஆனால் பாபாஜியின் விருப்பத்திற்கிணங்க தன் வாழ்நாள் முழுதும் ஒரு இல்லற யோகியாக வாழ்ந்து இன்று கிரியா யோகிகள் உலகெங்கும் உருவாகுவதற்கு அடித்தளம் அமைத்தார்.

'மனிதன் தாம் விரும்பும் அனைத்துமாக முடியும், ஏனெனில் தெய்வீகம் அவனுள் உள்ளது' என்கிறார் அரவிந்தர். தெய்வீகத்தைக் கண்டு கொள்ளத் தடையாக இருப்பது நான் மனம், நான் உடல் என்ற தவறான எண்ணம் தான். இதையும் தாண்டிய அந்த உணர்வு நிலை எம்மை அடையாளம் காணும் போது விடுதலை கிடைக்கிறது. இந்த விடுதலை நோக்கிய பாதையில் நம்மை அழைத்துச் செல்கிறது யோகம்.

மனிதப்பிறவி எவ்வளவு புனிதமானது என்று தெரிந்து கொள்வதற்குள் வாழ்வின் பெரும் பகுதி கடந்து விடுகிறது. இது எமது கர்மவினையினால் நிகழ்வது. எனினும் வாழ்வில் படிப்பினைகள் நிகழும் வரை மாற்றத்திற்காக காத்திருக்க வேண்டியதில்லை. வாழ்வின் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும் யோகக் கணங்களாக மாற்றுவதன் மூலம் நித்திய ஆனந்தத்தை அனுபவிக்க முடியும்.

விழிப்புணர்வுடன் எமது செயல்களைச் செய்தல், எமக்கு ஏற்படும் உணர்வுகளை சாட்சிபூர்வமாக நின்று அவதானித்தல், ஒருவர் பேசும் போது முழுக்கவனத்துடன் செவிமடுத்தல் எனும் பயிற்சிகள் எமது உள்ளகத் தேடலுக்கு துணை நிற்கும். ஒருவர் பேசும் போது அவரைப் பற்றி எம் ஆழ்மனதில் போட்டு வைத்த அபிப்பிராயங்கள், அவர் ஒரு நல்ல திட்டத்தை, உண்மையைக் கூறினாலும் கூட, எம்மால் முழுமையாக கேட்க விடாமல் செய்து விடுகிறது.

தொலைக்காட்சியில் அரசு கூறும் இடர்கால விதிகளைக் கேட்டு அதன்படி நடப்பது முக்கியமானது. எனினும் நீண்ட நேரம் எதிர்மறையான செய்திகள், நாடகங்கள் என்றுதான் மாய்ந்து போய்விடக் கூடாது. வாழ்வில் உண்மையைப் பேசுதல், தேடுதல் என்ற சிறிதாகத் தொடங்கும் பயிற்சிகள், மிகப்பெரிய உண்மையான இறைசக்தியுடன் எம்மைப் பிணைக்க உதவும். மனதை, நான் உடல் என்ற உணர்விலிருந்து நான் தெய்வீக ஆத்மா என்ற உணர்வு நிலைக்கு அழைத்துச் செல்ல மந்திரங்கள் துணை நிற்கின்றன. ஓய்வு நேரத்தில் உருத்திராட்ச மாலை உதவியுடன் மந்திர செபம் செய்வதன் மூலம் மன அமைதியைப் பெறலாம்.

'ஓம் கிரியா பாபாஜி நம ஓம்' எனும் மந்திரத்தை உச்சரிப்பதன் மூலம் கிரியா பாபாஜியின் அருளைப் பெறலாம்.

'இறப்பதற்கு முன் இறந்துவிடு' என்றொரு தத்துவம் உண்டு. ஆசைகள், பற்று, பட்டம், பதவி மோகம், அபிப்பிராயங்கள், இனமத அடையாளங்கள் என இடையில் வந்து சேர்ந்தவற்றைத் துறந்து வாழ்தல், இறந்து வாழ்வதற்கு சமனானது. உண்மையான விடுதலையும், யோக வாழ்வும் இதுதான். நேரம் என்பது ஒரு மாயை. இறந்த காலங்களை நினைத்து துயருறுவதை நிறுத்தி, நிகழ்காலத்தில் விழிப்புணர்வுடன் கடமைகளைச் செய்வதன் மூலம், நம்மை அறியாமலே எதிர்காலத்தை வளமாக்கலாம். கணங்களில் வாழ்வதன் மூலம் உள்ளக சோதியைப் பிரகாசமாக எரிய விட்டு என்றும் ஆனந்தத்தை அனுபவிப்போம்.

**முரளீதரன் நவரத்தினம்**
MSc in Yoga (அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம்)

---

**தரிசனன்**

# நிலைக்கண்ணாடி
## விம்பம் - 02



நீங்கள் யார்? உங்கள் பெயர், அங்க அடையாளங்கள் இவற்றோடு குறிப்பிட்ட பெற்றோரின் பிள்ளையாகப் பிறந்து குறிப்பிட்ட முகவரியில் வசித்து வருகின்ற 'இன்னார்' என்று கூறுவீர்களா? மேற்சொன்ன விபரங்களுக்கு உரித்தான இவர் என்று குறிப்பிட்டு விடுவதோடு உங்களை நீங்கள் விபரித்ததாகி விடுமா?

கொஞ்சம் அகலித்த பரப்பில் உங்கள் சிந்தனையை நகர்த்தி வளர்த்தெடுத்தால் உங்களை அடையாளப் படுத்த மேலும் விபரங்களைக் கண்டறிய முடியுமா? உங்களை இந்தக் கேள்விகள் குழப்புவது போல படுகிறதா? குழம்பாதீர்கள் - நான் யாரென்று உங்களை நோக்கி நீங்களே ஒரு விசாரணையை ஆரம்பித்தால் - நான் என்பது அந்தப் பெயருக்கும் அடையாளங்களுக்கும் சொந்த விபரங்கள் என்று குறிப்பிடும் விபரங்களுக்குட்பட்ட நபர் மாத்திரம் தானா?

குறிப்பிட்ட ஒருவராய் குறிப்பிட்ட விபரத்தரவுகளுக்குட்பட்ட நீங்கள் இங்கே இந்த இடத்தில் இவர்களின் மகனாய்ப் பிறப்பீர்கள் என அறிந்திருந்தீர்களா? இல்லை இனி உங்கள் வாழ்வில் இன்னென்ன விதமாய் வாழ்ந்து இதையிதைச் சாதிப்பீர்கள் என்பதேதும் அறிவீர்களா? இல்லை, ஆனால் இன்னும் ஏதேதோ எல்லாம் இப்படி யெப்படியோ நிகழ்ந்தேறத்தான் போகின்றன.

இந்த இயற்கையும் - காலமும் உங்களுக்கென அமைந்த சில வரன்முறைகளின் கீழ் சிலவற்றை நடத்தி முடிக்கத்தான் போகின்றன. அவையெல்லாம் என்னவென்று எங்கே என்று எவருமே அறியோம். ஆனாலும் ஒன்று மட்டும் சர்வ நிச்சயம் உங்களை வைத்து இந்த இயற்கையும் காலமும் எமது புறப்புலன்களாலறிய முடியாத பிரபஞ்ச சக்தியும் ஏதோ நிகழ்த்தி முடிக்கத் தான் போகின்றது.

இதெல்லாம் நிகழ்வதற்கும் இதற்கு மேலேயும் அற்புதமாய் அதிசயமாய் நிகழ்வதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன என்பது இந்த உலகில் வாழ்ந்து போயுள்ள எண்ணற்ற மானுட சாதனையாளர்களின் வரலாறுகள் சொல்லுகின்றன. நாளை உங்களுடைய வரலாறு கூட ஏதேனும் புதுமைகளைத் தன்னுள் பொதிந்து வைத்துக் காத்திருக்ககூடும்.

ஏனெனில் நீங்கள் ஒரு மனிதப்பிறவி உங்கள் அறிவும் இனி நீங்கள் தொடரவிருக்கும் கல்வியும் ஞானமும் இந்தச் சமூகத்ததுக்கு ஒரு மகா மனிதனை உங்கள் பெயரில் வழங்க முடியதா? சரியான நெறி-முறைகளின் கீழ் நேரியவழியில் வடிவமைக்கப்படும் ஒருவனது திறன்களும் செயலாற்றல்களும் உங்கள் பெயரில் ஒரு மிகுந்த பயன்தரத்தக்க மனிதனை உருவாக்கமுடியாதா?

அறிந்து கொள்ளுங்கள் ஒரு மனிதனாகப் பிறக்க அதிஷ்டம் செய்த நீங்கள் நாளை பல பல அற்புதங்களைப் புரியவல்ல அதிசயங்களாய்ப் பல ஆற்றலின் வெளிப்பாடுகளாய் இந்த உலகுக்குத் தர மாட்டீர்களா? யோசியுங்கள் அன்பர்களே அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்றாளே அந்த ஞான மூதாட்டி அந்த அரிய வாய்ப்பினை விணாகிப் போகவிடப் போகிறீர்களா? உங்கள் திறன் உள்ளூறங்கும் ஆற்றல் ஓயாது உழைக்க உந்தும் உங்களின் உள்ளூறங்கும் ஆற்றல் இவையெல்லாம் காலத்தின் வழிகாட்டல் ஊடாக உங்களை அடையாளப்படுத்தி முன் நிறுத்தும் என நம்புங்கள்

நீங்கள் செய்யவேண்டிய எல்லாம் உங்களின் ஆளுமையை நீங்களே உணர்ந்து துணிந்து உங்களின் ஆற்றல்களை அடையாளம் கண்டு அவற்றிற்கான செயல் வடிவம் தரவல்ல திறமைசாலிகளாய் உங்களை வளர்த்தெடுங்கள், உங்களை நேசியுங்கள் - உங்கள் வாழ்க்கையை ஆவலுடன் ஏற்று அதை நேசித்து உங்கள் இருப்பை அர்த்தப்படுத்துங்கள். இதற்கு முன் எண்ணற்ற பலரும் நிறுவிப்போன மானுட ஆற்றிலின் நிலைத்த அடையாளங்களாய் உங்கள் தரப்பின் பங்களிப்புகளும் ஒளிரட்டும். காலம் கடந்து உங்கள் ஆற்றல்கள் நிலைத்து மிளிரட்டும் - நிமிர்ந்து நடப்போம் ஒளிமிக்கதோர் எதிர்காலம் நோக்கி.

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

# மாவட்ட மருத்துவமனைகள் கைமாற்றப்படுவதன் அரசியல் என்ன?












**“அரசாங்கத்தின் அதிகாரப் பறிப்பு என்ற உள் நோக்கத்துக்கு மாகாண நிர்வாகம் தாராளமான வாய்ப்புகளை வழங்கியுள்ளது. அந்தளவுக்கு மாகாண நிர்வாகம் மிகக் கேவலமான முறையில் பலவீனப்பட்டுள்ளது. திட்டமிடற் குறைபாடுகள், ஆளணிமுகாமைத்துவக் குறைபாடுகள், அதன் விளைவாகத் தொடரும் பிரச்சினைகள், பாரபட்சமான நடவடிக்கைகள், ஒரே ஆட்களே 20 ஆண்டுகள் வரையில் ஒரு சுழற்சிக்குள் நின்று பொறுப்பான பதவிகளில் (செயலாளர்களாகவும் பணிப்பாளர்களாகவும்) அதிகாரம் செய்வது என்று ஏராளம் தவறான நிலைமைகள் மத்திய அரசுக்குப் பெரிய வாய்ப்புகளை அளித்துள்ளன.”**

“புத்திமான் பலவான்” என்று சொல்வார்கள். அதைத் தொடர்ந்தும் சிங்களத்தரப்பு நிரூபித்துக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய இந்தப் புத்தி பூர்வமான நடவடிக்கையில் இப்பொழுது வட மாகாண சபையின் கீழுள்ள முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய நான்கு மாவட்ட மருத்துவமனைகளும் மத்திய அரசின் கீழ் கொண்டு செல்லப்படவுள்ளன. இதற்கான அமைச்சரவைத் தீர்மானத்தை அவர்கள் எடுத்துள்ளனர். இதற்கான ஆதரவை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவும் வழங்கியிருக்கிறார். அதாவது “மத்தியில் கூட்டாட்சி. மாநிலத்தில் சுயாட்சி” என்று சொல்லிக்கொண்டிருக்கும் ஈழமக்கள் ஜனநாயக் கட்சி (EPDP) எந்த அடிப்படையில் மாகாணத்தில் சுயாட்சியைக் கோருகிறது?

இது ஒரு புறமிருக்க, கடந்த 14.06.2021 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த மருத்துவமனைகளோடு தென்பகுதிகளில் உள்ள சில மருத்துவமனைகளும் உள்ளெடுக்கப்பட்டிருக்கிறது. தனியே வடமாகாணத்திலுள்ள மருத்துவமனைகளை மத்தியின் கீழ் உள்ளீர்த்தால் அது சர்ச்சைக்குரியதாகி விடும். குறிப்பாக மாகாணசபையின் தாயாகிய இந்தியா இதையிட்டு முகம் சுழிக்கலாம் என்பதால் இது நாடு தழுவிய திட்டம் என்று காட்டுவதற்காக அவற்றையும் சேர்த்து உள்ளெடுக்கப்பட்டுள்ளது.

இதற்குச் சொல்லப்பட்ட காரணம், சிரிப்புக்குரியது. மாவட்டத்துக்கு ஒரு மருத்துவமனையை அனைத்து வசதிகளோடும் இயங்க வைப்பதற்கான திட்டம் இது என்று இதற்கு விளக்கம் கூறப்படுகிறது. இந்தக் காரணத்தை எப்படி ஏற்றுக் கொள்வது? எப்படிப் புரிந்து கொள்வது?

வேண்டுமென்றால், இதேவிதமாக இந்த மாவட்ட மருத்துவமனைகளை மாகாணசபைகளுக்கூடாகப் பலப்படுத்தி வளமாக்கியிருக்கலாம் அல்லவா! அதுவே சரி. ஏனென்றால் மாகாண சபைக்குரிய நிதியை வழங்குவதே மத்திய அரசுதானே. ஆகவே அது அதற்கான நிதியை அளித்து நடைமுறைப்படுத்தியிருக்கலாம். ஆனால் அரசாங்கம் அதைச் செய்யவில்லை. அப்படிச் செய்யப் போவதுமில்லை. இதற்கு மத்திய அரசாங்கம் மட்டும் பொறுப்பில்லை. மாகாணசபையின் சீரழிவும் மாகாண நிர்வாகத்தின் பலவீனமும் ஒரு காரணமாகும்.

அதாவது அரசாங்கத்தின் அதிகாரப் பறிப்பு என்ற உள் நோக்கத்துக்கு மாகாண நிர்வாகம் தாராளமான வாய்ப்புகளை வழங்கியுள்ளது.  அந்தளவுக்கு மாகாண நிர்வாகம் மிகக் கேவலமான முறையில் பலவீனப்பட்டுள்ளது. திட்டமிடற் குறைபாடுகள், ஆளணி முகாமைத்துவக் குறைபாடுகள், அதன் விளைவாகத் தொடரும் பிரச்சினைகள், பாரபட்சமான நடவடிக்கைகள், ஒரே ஆட்களே 20 ஆண்டுகள் வரையில் ஒரு சுழற்சிக்குள் நின்று பொறுப்பான பதவிகளில் (செயலாளர்களாகவும் பணிப்பாளர்களாகவும்) அதிகாரம் செய்வது என்று ஏராளம் தவறான நிலைமைகள் மத்திய அரசுக்குப் பெரிய வாய்ப்புகளை அளித்துள்ளன.

இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தியே கடந்த மாதங்களில் மாகாணசபையின் கீழுள்ள பல பாடசாலைகளும் மத்திய அரசின் கீழ்க் கொண்டு செல்லப்பட்டுள்ளன. வடக்கில் மட்டும் இவ்வாறு 34 பாடசாலைகள் மத்தியின் கீழ் சென்றுள்ளன. இதற்கு ஆரம்பத்தில் சொல்லப்பட்ட காரணம், பிரதேசத்துக்கு ஒரு பாடசாலையை வளப்படுத்துவதற்குத் தெரிவு செய்யுங்கள் என்று. இந்த வாக்குறுதியை நம்பி (புத்திசாலித்தனமான தந்திரோபாயத்தைப் புரிந்து கொள்ளாமல்) பாடசாலைகளைத் தெரிவு செய்து மாகாண நிர்வாகம் அனுப்பி வைத்தது. இதைக் குறித்து தமிழ் அரசியற் கட்சிகளோ அரசியல்வாதிகளோ சிந்திக்கவே இல்லை. இறுதியில் அடையாளப்படுத்தப்பட்ட பாடசாலைகள் தேசிய பாடசாலைகள் என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வந்த போதே நிலைமை என்ன என்று தெரியவந்தது. அதைக்கூட அரசாங்கம் மிகத் தந்திரோபாயமாக - மிக நுட்பமாகச் செயற்படுத்தி வருகிறது.

எப்படியென்றால் இந்தப் பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகவே அடையாளப்படுத்தப்படும். ஆனால் முந்திய, தேசிய பாடசாலைகளைப் போலன்றி, இவற்றின் ஆளணி இடமாற்றங்கள் மாகாணக் கல்வி அமைச்சின் கீழிருக்கும். ஏனைய வளங்கள், நடவடிக்கைகள் அனைத்தும் மத்தியின் கீழ் அதாவது நாடு முழுவதிலுமுள்ள மகிந்தோதய ஆய்வு கூடங்களுக்கு ஒரே மாதிரித்தன்மை (comon model) எப்படி உள்ளதோ அதை ஒத்த தன்மை இந்தப்பாடசாலைகளுக்கிடையிலும் பேணப்படும் என. இதற்குச் சொல்லப்பட்ட விளக்கம் என்னவென்று தெரியுமா? நீங்கள் இப்பொழுது ஏதாவதொரு கார்கில் ஃபூட் சிற்றிக்குள் போனாலும் அவை எல்லாவற்றினதும் உள் அமைப்பு மற்றும் தொழிற்பாடுகள் ஒரே மாதிரி இருக்கும் அல்லவா. அதைப் போன்றதொரு ஒத்த நிலையினை (Generality) இந்தப் பாடசாலைகள் கொண்டிருக்கும் என்று கூறப்படுகிறது. இந்தத் திட்டத்தைக் குறித்து பலரும் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிகிறது. இதில் ஒன்றை நாம் கவனித்துக்கொள்ள வேண்டும். இந்த ஆளணியை நிரப்புதல் என்பதை மட்டும் நம்பிக்  கொண்டு - “நமக்குப் பாதி அதிகாரம் மீதியாக உள்ளது. அது போதும்” என்று மாகாணத்தினர் இப்போதிருப்பர். காலப்போக்கில் அதையும் ஏனைய தேசிய பாடசாலைகளின் நடைமுறையைப்போல இசுருபாயவே (தெற்கே) நடைமுறைப்படுத்தும். அது நடந்தே தீரும். என்பதால்தான் இதை ஒரு புத்தி பூர்வமான நடவடிக்கையாகச் சிங்களத்தரப்பு - அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது என்கிறேன்.

இப்போது எப்படியோ வடக்கிலும் கிழக்கிலுமாக ஐம்பதுக்கு மேற்பட்டசாலைகள்  மத்திய நிர்வாகத்தின் கீழ் கொண்டு செல்லப்பட்டாயிற்று. இது தோலிருக்கச் சுளையைப் பிடுங்கும் செயலாகும்.

ஏற்கனவே மாகாணத்திற்குரிய அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதில் ஏராளம் முட்டுப்பாடுகள். தவிர, காணி, பொலிஸ் அதிகாரம் வேண்டும் என்ற கோரிக்கைகள் இன்னொரு புறமான கோரிக்கை. இந்த நிலையில் இருக்கின்ற அரை குறை அதிகாரங்களும் பறிபோகின்றன என்றால்-

இதற்கெல்லாம் அப்பால் தொல்பொருள் மையங்கள் என்ற அடையாளப்படுத்தல்களின் வழியாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல ஏக்கர் காணிகளை - சில பிரதேசங்களை - மத்தி தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருகிறது. பலத்த எதிர்ப்புகளின் மத்தியிலேயே இதை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. நாட்டிலே செய்ய வேண்டிய விடயங்கள் ஏராளமாக உண்டு. அவசரப்பணிகள் நிறைய உள்ளன. அவற்றையெல்லாம் விட்டுவிட்டு இதற்கு நிதி ஒதுக்கி, ஆளணியைப் பிரயோகித்து, அரசியல் சிக்கலுக்குரிய விடயமாக்கி இதைச் செய்ய வேண்டிய அவசியம் என்ன? இதைக்குறித்து அரசாங்கத்தோடு இணைந்து நிற்கும் வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம் தலைவர்கள், கட்சிகளின் நிலைப்பாடென்ன?

இதெல்லாம் அதிகாரங்களைப் பகிர்வதற்குப் பதிலாக அதிகாரங்களைக் குறைத்து மத்தியில் குவிக்கும் முயற்சிகள் அல்லவா? அதாவது அதிகாரங்களைப் பரவலாக்குவதே உலக நடைமுறை. இலங்கையின் இன முரண்பாடே அதிகாரப் பரவலாக்கம் இல்லை என்பதிலிருந்தே உருவாகியது. இந்த அதிகாரப் பரவலாக்கல் இழுபறியே பிணக்கு முற்றுவதற்கான காரணமாகத் தொடர்கிறது. இதனால்தான் 1987 இல் இந்தியா தலையீட்டைச் செய்து மாகாணசபை முறைமை என்ற அதிகாரப் பரவலாக்கல் முறை வந்தது. இப்பொழுது அதை இல்லாமல் செய்வதென்பது அல்லது அதைப் பலவீனப்படுத்துவதென்பது வரலாற்றில் பின்னோக்கிச் செல்லல் என்றல்லவா அமையும்? இது இலங்கையை எங்கே கொண்டு போய் விடப் போகிறது?

இந்த மாதிரியான ஒரு தந்திரோபாயத்தை முந்திய நல்லாட்சி (ரணில் - மைத்திரி) அரசாங்கமும் செய்தது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை மட்டுப்படுத்தி அவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டையும் வேலைத்திட்டங்களையும் விசேட செயற்றிட்டம் ஒன்றாக மாற்றி மாவட்டச் செயலகங்களுக்கூடாக மத்திய அரசாங்கம் செய்தது. கிராமிய அபிவிருத்தி என்ற போர்வையில் இது செயற்படுத்தப்பட்டது. இதைப்போல மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீட்டையும் வேலைத் திட்டங்களையும் கூட மாவட்டச் செயலகங்களின் வழியாக ரணில் - மைத்திரி அரசாங்கம் செய்தது. குறிப்பாக அந்தத் திட்டத்தில் பல பாடசாலைக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டன என்பதை இங்கே சுட்டிக் காட்ட முடியும். அதை அப்போது அரசாங்கத்துடன் பங்காளி நிலையிலிருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி, முஸ்லிம் கொங்கிரஸ் போன்றவை கண்டும் காணாதிருந்தன. ஏனென்றால் அது அவர்கள் விரும்புகின்ற அரசாங்கம் அல்லவா.

ஆகவே இவர்கள் எல்லோருமே ஏதோ ஒரு வகையில் அதிகாரப் பரவலாக்கத்துக்கும் மாகாணசபை முறைமைக்கும் எதிரானவர்களே. தேர்தல் அரசியலுக்காக அப்படி இப்படிக் கதைப்பார்களே தவிர, அடிப்படையில் அதிகாரப் பகிர்வு, பரவலாக்கம், மக்கள் நலன், ஒடுக்கப்பட்டோர் உரிமை போன்றவற்றில் கரிசனையற்றோரே. இல்லை என்றால் இந்த மருத்துவமனைகளை மத்திய அரசின் கீழ் கொண்டு வரும் திட்டத்தையே இவர்களால் முறியடிக்க முடியும். மாகாணசபையின் சம்மதமின்றி இவற்றை மத்தி உள்ளெடுக்க முடியாது. இப்பொழுது மாகாணசபை இயங்கவில்லை என்றால் அந்த அதிகாரம் - சம்மதம் தெரிவிக்கும் பொறுப்பு ஆளுநருக்கே உண்டு. ஆளுநரின் ஒப்புதலின்றி ஒன்றும் செய்ய முடியாது. ஆளுநரை இவர்கள் சரியான முறையில் நாடலாம். அப்படிச் செய்வார்களா? ஆளுநர் அதற்கு என்ன பதில் சொல்வார்?

இலங்கையில் இப்போதுள்ள அரசாங்கம் மூடுண்ட ஒரு அமைப்பு. அது பலமாக வேறுள்ளது. இது எதிர்காலத்தில் உண்டாக்கப்போகும் தீய விளைவுகள் பாரதூரமானவையாகவே இருக்கப்போகின்றன.

அது சரி, ஒரு நாடு இரு தேசம். தனிநாட்டுக் கோரிக்கை. சமஸ்டி என்பவற்றின் கதி என்ன?

■

# விடுதலைக்கு முதல் தகுதி நம்மை தளைகளிலிருந்து விடுவித்துக் கொள்வதே

கருணாகரன்



தமிழ்த் தேசியத்தினுள் பெருகிக் கிடக்கும் ஜனநாயகப் பற்றாக்குறை, சமத்துவமின்மை, அரசியற் போலி, செயற்பாட்டுத்திறனின்மை போன்றவை குறித்த உரையாடல்களை அந்தக் கருத்தியலை - நிலைப்பாட்டை - ஆதரிப்போரிடத்திலே அமைதியான பேசு பொருளாகியுள்ளது. இதை வரவேற்போம். ஆனால் இந்த உரையாடல்களும் நிலைப்பாடும் விசுவாசமானதாக - நேர்மையானதாக இருக்க வேண்டும். இல்லையென்றால் இவர்கள் தங்களையும் ஏமாற்றி வரலாற்றையும் ஏமாற்றுவதாகவே போய் முடியும்.

ஏன் இப்படிச் சொல்ல வேண்டியிருக்கிறது என்றால், இந்தக் குறைபாடுகளைப் பற்றி சிலரே தொடர்ந்தும் பேசி வருகிறோம். சிலரே இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காகச் செயற்பட்டும் வருகிறோம். அப்பொழுதெல்லாம் இவர்கள் இதைக் குறித்துப் பேச முன்வந்ததோ இணைந்து செயற்பட்டதோ இல்லை. மாறாக இதைக் காணாதிருக்கும் போக்கையே கொண்டிருந்தனர் மட்டுமல்ல இந்த அகமுரண்பாடுகளாலும் ஜனநாயக நெருக்கடிகளாலும் தமிழ்த்தேசியத் திரட்சி நெருக்கடிக்குள்ளாக்கிச் சிதைந்து கொண்டிருக்கிறது என்று நாம் சுட்டிக்காட்டியவற்றைக் கூட வேறு (தவறான) கண்ணோட்டத்திலேயே நோக்கினர்.

விடுதலைக்கு முதல் தகுதி நம்மை தளைகளிலிருந்து விடுவித்துக் கொள்வதாகும். ஜனநாயகமற்ற எந்த அரசியற் போராட்டங்களும் விடுதலையைப் பெற்றுத் தராது என்று கூறிய போது கூட இவர்கள் அதைக் குறித்து அக்கறைப்பட்டிருக்கவில்லை.

இதனாலேயே இவர்களுடைய இப்போதைய இந்த அக்கறையை -திடீர்க்கவனத்தைக் குறித்து நாம் சிந்திக்கவும் ஐயமுறவும் வேண்டியுள்ளது.

இப்பொழுது கூட இவர்களுடைய இந்த அகமுரண்பாடுகளைக் குறித்த திடீர்க்கரிசனை என்பது கடந்த தேர்தல்களில் வெளிப்பட்ட மக்கள் ஆதரவுத்தளத்தினால் உருவான விளைவின் விளைவு என்றே நோக்க வேண்டியுள்ளது. எதிர்பார்த்ததையும் விட அரச ஆதரவுத் தரப்புகள் அதிகரித்த வாக்குகளைப் பெற்று முன்னிலை அடைந்து வருவதும் தமிழ்த்தேசிய அரசியற் தரப்புகள் பிளவுண்டு பிளவுண்டு உதிரிகளாகச் சிதைந்து செல்வதும் கிழக்கிலே எழுச்சியடைந்து வருகின்ற தனி அடையாள முனைப்புகளும் இவர்களுடைய பதற்றத்துக்குக் காரணம் எனலாம்.

அப்படியில்லை என்றால் இவர்கள் இவற்றைக் குறித்து நேரத்தோடு பேச முற்பட்டிருக்க வேண்டும். அப்படிப் பேசியிருந்தால், அதற்கான ஒரு செயற்பாட்டு வரைபை உருவாக்கியிருந்தால் தமிழர்களின் அரசியல் இன்று பெறுமதியுடையதாகி இருக்கும். முற்போக்காளர்களும் ஜனநாயகவாதிகளும் கூட இணைந்து நின்றிருப்பர். ஆனால் இதை இவர்கள் செய்யத் துணியவில்லை.

காரணம், வேறொன்றுமில்லை. எப்போதும் பெருந்திரள் மனநிலையைக் கடக்க முடியாதிருக்கும் அச்சமும் வர்க்க நிலைப்பட்ட நலன் நோக்குமே. இருக்கின்ற சமூகச் சூழலை அப்படியே பேணிக் கொண்டு சிங்களத் தரப்பிடமிருந்து அதிகாரத்தைப் பெற்று -அல்லது பகிர்ந்து தாம் ஆட்சி செய்வதாகும். அதாவது ஒடுக்கப்பட்ட மக்களை அதே நிலையில் வைத்துக் கொண்டு, அதே வேளை அவர்களுடைய ஆதரவையும் பெற்று சிங்களத் தரப்பிடமிருந்து தமக்கான அதிகாரத்தைக் கட்டமைத்துக் கொள்வதாகும். இது ஒரு கல்லில் இரண்டு மாங்காய்க்கு நிகரானது. ஒன்று சிங்களத் தரப்பிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வது. அதற்கு ஒடுக்கப்பட்ட மக்களையும் பயன்படுத்திக் கொள்வது. இரண்டாவது ஒடுக்குதலுக்குள்ளாகிக் கொண்டிருக்கும் தமிழ்ச்சமூகத்தின் மீது தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்துவது.

எப்படியிருக்கிறது ராமசாமி இந்த ஐடியா?

ஆனால் இந்த நோக்கம் எளிதில் நிறைவேற்ற முடியாதது என்பதை வரலாறு சொல்லி நிற்கிறது. இதனால்தான் வேறு வழியின்றி, கீழிறங்கி ஒரு அட்ஜெஸ்ட்மென்ற்றைச் செய்யத் துணிந்துள்ளனர். இதுவே நம்முடைய ஐயத்துக்கு நியாயமான காரணமாகும்.

> இவர்களுடைய இந்த அகமுரண்பாடுகளைக் குறித்த திடீர்க்கரிசனை என்பது கடந்த தேர்தல்களில் வெளிப்பட்ட மக்கள் ஆதரவுத்தளத்தினால் உருவான விளைவின் விளைவு என்றே நோக்க வேண்டியுள்ளது. எதிர்பார்த்ததையும் விட அரச ஆதரவுத் தரப்புகள் அதிகரித்த வாக்குகளைப் பெற்று முன்னிலை அடைந்து வருவதும் தமிழ்த்தேசிய அரசியற் தரப்புகள் பிளவுண்டு பிளவுண்டு உதிரிகளாகச் சிதைந்து செல்வதும் கிழக்கிலே எழுச்சியடைந்து வருகின்ற தனி அடையாள முனைப்புகளும் இவர்களுடைய பதற்றத்துக்குக் காரணம் எனலாம்.

ஏனென்றால் இந்த அகமுரண்பாடுகளும் ஒடுக்குமுறையும் இடையிலே இருந்தாற்போல உருவாகியவை என்றோ அல்லது இப்பொழுதுதான் கண்டறியப்பட்டவை என்றோ இல்லை. அல்லது இவற்றையெல்லாம் எளிதிற் கடந்து சென்று விடலாம் என்றுமில்லை. அல்லது இவற்றை எதிர்த்தரப்புகளே உற்பத்தி செய்து திணிக்கின்றன என்று கூறவும் முடியாது. இவை அனைத்துமே நம்மிடம் நெடுங்காலமாகவே தொடர்ந்து கொண்டிருப்பவை. அப்படிக் கொண்டிருக்கும் பெருங் குறைபாடுகளை நிவர்த்தி செய்யாமல் - கவனிக்காமல் விடுதலை அரசியலைப் பற்றிப் பேச முடியாது. அதை மேற்கொள்வதும் பொருத்தமில்லை. அதனால் பயனுமில்லை.

ஆகவே இவற்றைப் பேசியே ஆக வேண்டும். பேசுவதோடு நின்று விடாமல் இவற்றை நடைமுறைப்படுத்தவும் வேண்டும். அதாவது தமிழ்ச் சமூகம் தனக்குள் கொண்டிருக்கும் சாதிய ஒடுக்குமுறைக்கு தீர்வு கண்டே தீர வேண்டும். அதைப்போல பிரதேச வேறுபாடுகளையும் அது இல்லாதொழிக்க வேண்டும். தனக்குள் ஜனநாயகச் செழுமையைப் பண்பாடாக்க வேண்டும். ஆனால் இதெல்லாம் எளிதிலே நடந்து விடக் கூடியவை அல்ல.

ஏனென்றால் இந்தக் குறைபாடுகளைப்பற்றி 1960 களிலிருந்தே இடதுசாரிகள் மிகத் தீவிரமாகப் பேசி வந்திருக்கிறார்கள். போராடியிருக்கிறார்கள். அவர்களால்தான் ஓரளவுக்கேனும் இன்றுள்ள நிலை தமிழ்ச்சமூகத்தில் எட்டப்பட்டது. இல்லையென்றால் சாதிய ஒடுக்குமுறை இப்போதுள்ளதையும் விட மிக உச்சத்தில் தாண்டவமாடியிருக்கும். பிரதேச வேறுபாடும் ஒடுக்குமுறைகளும் மிகக் கொடூரமாகியிருந்திருக்கும். பின்னர், 1980 களிலிருந்து விடுதலை இயக்கங்கள் இந்தப் பணியை தமது அரசியற் செயற்பாட்டில் முன்னெடுத்தன. அதனால் இது மேலும் வலுவிழந்தது. மற்றும்படி தமிழ் மிதவாதத் தரப்புகளான தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ் போன்றவற்றிடம் ஜனநாயக மரபோ, சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான சிந்தனையோ செயற்பாடுகளோ கிடையாது. அதைப்போலவே பிரதேசவாதத்தை மறுதலிக்கும் நடைமுறைகளும் இல்லை. இவற்றின் புதிய முகங்களான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ் மக்கள் பேரவை போன்றவற்றிடமும் இவற்றை மாற்றியமைப்பதற்கு விசுவாசமான நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவும் இல்லை.

இதனால் 2009 புலிகளின் வீழ்ச்சிக்குப் பின் மண்ணில் புதையுண்டிருந்து மழைக்கு முளைக்கும் விதைகளைப் போல சாதியமும் பிரதேசவாதமும் பால் ஒடுக்குமுறையும் புத்தெழுச்சியடையத் தொடங்கியுள்ளன. ஜனநாயக நெருக்கடி மிக மோசமாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. விடுதலைக்காக ஒரு பக்கத்தில் தமிழ் மக்கள் ஒருமுகப்பட்டுத் திரள வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, மறுவளமாக உள்ளே அதற்கு எதிரான முறையில் பிளவுகளைப் பேண முற்படுவது எவ்வளவு முரண்? இது ஒருமுகப்படுதலுக்கு எவ்வளவு பலனுள்ள சாத்தியங்களைக் கொடுக்கும்? அதுவும் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்திடம் விடுதலைப் பண்புகளில்லை என்றால் அதனால் எப்படி விடுதலையைப் பெற முடியும்?

எளிய உதாரணம், 1980 களில் மிக வினைத்திறனாகவும் நம்பிக்கை நட்சத்திரங்களாகவும் இருந்த விடுதலை இயக்கங்கள் மரணக்குழியில் தாமும் புதையுண்டு, மக்களையும் புதைத்து, போராட்டத்தையும் புதையுண்டு போக வைத்ததற்குப் பிரதான காரணம், அவற்றிடையே இருந்த ஜனநாயகமின்மையாகும். இதை இன்னும் தமிழ்ச்சமூகம் புரிந்து கொள்ள முற்படவில்லை என்றால் அதனால் விடுதலை நோக்கிய பயணத்தில் ஓரடியைக் கூட முன்னே வைக்க முடியாது.

எனவேதான் மேற்குறித்த அகமுரண்பாடுகளைப் பேசுவதோடு நிற்காமல் அவற்றை ஒழிப்பதற்கான வேலைத்திட்டத்தையும் ஆரம்பிக்க வேண்டும் என்கிறோம். அதைப்போல தமிழ்ச் சமூகத்தில் நீடித்து நிலவுகின்ற ஜனநாயகப் பற்றாக்குறையையும் ஜனநாயக நெருக்கடியையும் அது தீர்க்க வேண்டும். ஜனநாயக நெருக்கடியினால்தான் இந்தக் கட்சிகள் ஆண்டு தோறும் புதுப்புதுக் குட்டிகளைப் போட்டுக் கொண்டேயிருக்கின்றன. இறுதியாகப் போடப்பட்டுள்ள குட்டியாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மணிவண்ணன் அணி காணப்படுகிறது.

எனவே மேற்படி தமிழ்த்தேசியத்தின் அகநெருக்கடிகளைப் பற்றிப் பேசுவோர் வெளியே வந்து செயற்பாட்டுக்களத்தில் நிற்க வேண்டும். இடதுசாரிகள் பேச்சுடன் நிற்காமல் பிரச்சினைக்குரிய - நெருக்கடியிடங்களில் இன்றும் நிற்கிறார்கள். அதாவது ஒடுக்குமுறைக்கு எதிராக - நீதியின் பக்கமாக நிற்கிறார்கள். சமத்துவத்தை விரும்புவோர் அப்படித்தான் செய்வார்கள். அவர்களிடம் வெளிப்படைத்தன்மை இருக்கும். நேர்மையும் விசுவாசமும் அதை அவர்களுக்குக் கொடுக்கிறது. அப்படியில்லை என்றால் இது ஒரு கபடமாகி, ஏட்டுச் சுரைக்காய் கறிக்கில்லை என்பதாகவே முடியும். இதனால் பயனடைவது அரசும் சிங்கள மேலாதிக்க சக்திகளாகவுமே இருக்கும். பதிலாக தமிழ்ச்சமூகம் மேலும் மேலும் பிளவுண்டு பிளவுண்டு உதிர்ந்து உதிர்ந்து உதிரிகளாகி விடும்.

ஆகவே மாற்றம் வேண்டும் என்றால் அதற்காக நாம் மாற வேண்டும் என்று புரிந்து செயற்பட வேண்டும்.

■

# மியான்மர் மனித அவலத்தை விளைவிக்கப் போகும் பூமி



எல்றோய் அமலதாஸ்

**“இதுவரை 860 க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட 6,000க்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்தது இராணுவம். ஆங்சான் சூகியின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திடமிருந்து இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியதிலிருந்து சித்திர வதை மற்றும் கட்டாயமாக காணாமல் போவதும் தொடர்கின்றது.”**

தொடரும் வன்முறைகள், இறப்புகள் மற்றும் இடப்பெயர்ச்சி அதிகரிக்கும் போது, மியான்மர் உலகின் கவனத்திலிருந்து மங்காது என்று இராணுவ எதிர்ப்புப் போராளிகளும் நம்புகிறார்கள்.

ஆனால் இந்த ஆயுதம் தரித்த போராளிகள் 2017 ஆம் ஆண்டில் ரோஹிங்கியாக்கள் மீதான மிருகத்தனமான தாக்குதல்களில் ‘மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்’ என்று குற்றம் சாட்டப்பட்ட ஒரு ஆயுதமேந்திய இராணுவத்தை எதிர்கொள்கின்றனர், எதிர்கொள்ளப் போகின்றனர்.

தேர்தலில் முறைகேடுகள் நடந்து இருக்கின்றது. நியாயமான ஒரு தேர்தலை நடத்தி அதில் வெற்றி பெறும் கட்சியிடம் ஆட்சியை ஒப்படைப்போம். ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய ராணுவத் தலைவர் ஜெனரல் மிங் ஆங்லெய்ங் கூறிய விடயம் இது.

ஆனால் 2015-ம் ஆண்டு தேர்தலில் பெற்ற வெற்றியைக் காட்டிலும், 2020-ம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் பெரிதான ஒரு வெற்றியை சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி பெற்றது. இந்தத் தேர்தலில் அவர்கள் 83 சதவீதம் வாக்குகளைப் பெற்றிருக்கின்றார்கள். இருப்பினும், ஆட்சிக் கவிழ்ப்புச் செய்திருக்கும் ராணுவம், அதிகாரத்தை ராணுவத் தலைவர் ஜெனரல் மிங் ஆங் லெய்ங்கிடம் ஒப்படைத்திருக்கிறது.

மியான்மரில் ராணுவத்தினரால் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தப்பட்டு அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆங் சாங் சூகி உட்பட முக்கிய அரசு அதிகாரிகள் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மியான்மரில் ஆங் சாங் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சியினர் ஆட்சியில் இருந்த நிலையில்தான், அந்த ஆட்சியைக்





கவிழ்த்து ராணுவத்தினர் அதிகாரத்தைக் கையில் எடுத்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகளுக்குப் பிறகு நாட்டில் இணையத்தள சேவைகள், அரசுத் தொலைக்காட்சி சேவைகள், வங்கிச் சேவைகள் போன்றவை முடக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஊடகவியலாளர்களும் வீட்டுக்காவலில் சிறை வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. இந்த ஆட்சிக்கவிழ்ப்பை எதிர்த்து தனது ஆதரவாளர்கள் போராட வேண்டும் எனவும் ஆங் சாங் சூகி தெரிவித்திருத்திருக்கின்ற நிலையில்...

**இராணுவ நகர்வு..**

2015ஆம் ஆண்டு சூகி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கட்சி தேர்தலில் பெரும் வெற்றி பெற்று ஆட்சி நடத்திவந்தது. அதன் பிறகு தற்போது 2020ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அந்தக் கட்சி வெற்றி பெற்று நாடாளுமன்றம் கூடவிருந்த வேளையில்தான் இந்த ஆட்சிக் கவிழ்ப்பு நடந்திருக்கிறது. இந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கு ராணுவம் சொல்லும் காரணம், தேர்தலில் முறைகேடுகள் நடந்தது என்பதுதான்.

2015ஆம் ஆண்டு பெற்ற வெற்றியைக் காட்டிலும், 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் பெரிதான ஒரு வெற்றியை, சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி பெற்றது. இந்தத் தேர்தலில் 83 சதவீத வாக்குகளை அந்தக் கட்சி பெற்றிருந்தது. இருப்பினும், ஆட்சிக் கவிழ்ப்புச் செய்திருக்கும் ராணுவம், இப்போது அதிகாரத்தை ராணுவத் தலைவர் ஜெனரல் மிங் ஆங் லெய்ங்கிடம் ஒப்படைத்திருக்கிறது.

ஓய்வுபெறும் தறுவாயை நெருங்கும் ஜெனரல் மிங் ஆங் லெய், நியாயமான ஒரு தேர்தலை நடத்தி அதில் வெற்றி பெறும் கட்சியிடம் ஆட்சியை ஒப்படைப்பதாகத் தெரிவித்திருக்கிறார். ஆனால் உடனடியாக, சர்வதேச நாடுகளான இந்தியா, ஜப்பான், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டன் எனப் பல்வேறு நாடுகள் ராணுவத்தினரின் செயலுக்குக் கண்டனம் தெரிவித்திருக்கின்றன. ஐ.நா இந்த ஆட்சிக் கவிழ்ப்புக்குக் கண்டனம் தெரிவித்ததோடு கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும், வன்முறைகளை நிறுத்த வேண்டும் என்றும் கோரியிருக்கிறது.

**மியான்மர்**

ஆசியாவில் தென்கிழக்குப் பகுதியில் அமைந்த நாடாகும். 1989ஆம் ஆண்டு பர்மா என்ற நாட்டின் பெயரை மியான்மர் என்று மாற்றினர். 2014ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை 51 மில்லியன். தலைநகர் நைப்பியித்தெள. அதிகமானோர் தேரவாத பௌத்த சமயத்தை பின்பற்றுபவர்கள்.

**ஆட்சிக் கவிழ்ப்பும் இராணுவமும்.**

மியான்மரில் ஆட்சிக் கவிழ்ப்புச் செய்யப்பட்டு ராணுவம் அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டது என்ற செய்தி நமக்குப் புதிதாக இருந்தாலும், அந்த நாட்டுக்கு ஆட்சிக் கவிழ்ப்பு என்பதும், இராணுவ ஆட்சி என்பதும் புதிதல்ல. மியான்மருக்கு 1948ஆம் ஆண்டு பிரிட்டிஷ் காலனி ஆட்சியிலிருந்து விடுதலை கிட்டியது. இருப்பினும், நாட்டில் அமைதி நிலவவில்லை. அதன் பிறகு 1962ஆம் ஆண்டு அப்போதைய இராணுவத் தலைவர் நிவின் தலைமையில் ஆட்சிக் கவிழ்ப்பு நடந்து அதிகாரம் ராணுவத்திடம் சென்றது.

அதன் பிறகு 1988ஆம் ஆண்டு ஜனநாயகத்துக்கு ஆதரவாகப் பல போராட்டங்கள் நடைபெற்றன. அவற்றில், கலந்துகொண்டார் ஆங் சாங் சூகி.

**ஆங் சாங் சூகி**

கிட்டத்தட்ட 15 வருடங்கள் வீட்டுக் காவலில் இருந்தவர். இவருக்கு 1991ஆம் ஆண்டு நோபல் பரிசும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், மியான்மரில் ரோஹிங்கியா முஸ்லிம்கள் நடத்தப்பட்டவிதம் குறித்து இவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என இவர் மீது விமர்சனங்களும் வைக்கப்பட்டன.

இவரின் தந்தை ஆங் சாங் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் கொல்லப்பட்டவர். 1988ஆம் ஆண்டு மியான்மரில் நடைபெற்ற போராட்டத்தில் பாதுகாப்புப் படை தனது அடக்குமுறையைக் காட்டியது, பலர் கொல் லப்பட்டனர். 1989ஆம் ஆண்டு ஆங் சாங் சூகி வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டார். அடுத்த ஆண்டு அவர் தேர்தலில் வெற்றி பெற்றாலும், ஆட்சியை அவரிடம் கொடுக்க மறுத்துவிட்டது ராணுவம்.

2010ஆம் ஆண்டு வீட்டுக் காவலிலிருந்து விடுவிக்கப்பட்டார் சூகி. அதன் பிறகு 2012ஆம் ஆண்டு இடைத்தேர்தல் ஒன்றில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்தில் உறுப்பினர் ஆனார்.

2015ஆம் ஆண்டு சூகியின் தலைமையில் அவரின் தேசிய ஜனநாயக லீக் கட்சி வெற்றி பெற்றது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்கு அந்தத் தேர்தல் வித்திட்டது. தேர்தலில் வெற்றி பெற்றாலும் சூகியால் நாட்டின் அதிபராகப் பதவியேற்க முடியவில்லை. அதற்குக் காரணம், அவரின் மகன்கள் வெளிநாட்டுக் குடியுரிமை பெற்றிருந்தது. எனவே, மியான்மர் நாட்டின் தலைமை ஆலோசகரானார். அவர் அரசமைப்புப்படி அதிபராகச் செயல்படவில்லை என்றாலும், மியான்மரின் தலைவராகவே செயல்பட்டுவந்தார்.

சூகியின் கட்சி ஆட்சியில் இருந்தாலும், ராணுவம் தனது அதிகாரத்தைச் செலுத்திவந்ததாகவே கூறப்படுகிறது. மியான்மர் அரசமைப்புப்படி, நாடாளுமன்றத்தில் கால் பங்கு எண்ணிக்கை ராணுவத்தினருக்கானது. அதேபோல முக்கிய அமைச்சரவையின் பொறுப்புகளும் இராணுவத்தினரிடமே இருக்கும்.

2017ஆம் ஆண்டு ரகைன் நகரில் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை என்று கூறப்பட்டு, இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் ரோஹிங்கியா இனக்குழு மக்கள், நாட்டிலிருந்து தப்பிச் செல்ல நேர்ந்தது. அதிகமானோர் வங்கதேசத்திலும் இந்தியா போன்ற பிறநாடுகளிலும் தஞ்சம் புகுந்தனர்.

மியான்மரில் ரோஹிங்கியா இனத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக ஐ.நா-வும் கண்டனம் தெரிவித்திருந்தது. பல உலக நாடுகளும் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்திருந்தன.

இந்தநிலையில், தற்போது நாட்டில் மியான்மரில் ஆட்சிக் கவிழ்ப்பைச் செய்த இராணுவம் ஒரு வருடத்துக்கு பொறுப்பிலிருக்கும் என்று கூறியிருக்கிறது. நீடிக்கும் இந்த நிலையில்தான் பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் வன்முறைகளும் நாளுக்கு நாள் அதிகரித்திருக்கின்றது.

இவ்வேளை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் திருமதி சூகி மீதான குற்றச்சாட்டுக்களும் அதிகரித்திருக்கின்றது. இவ்வாரம் திங்களன்று மூன்று வழக்குகளை எதிர்கொண்டார். தனது மெய்க்காப்பாளர்களின் பயன்பாட்டிற்காக சட்டவிரோதமாக வாக்கி-டாக்கீஸை இறக்குமதி செய்தமை, ரேடியோக்களின் உரிமம் பெறாத பயன்பாடு, பொது எச்சரிக்கை அல்லது அமைதியின்மையை ஏற்படுத்தக்கூடிய தகவல்களைப் பரப்பியமை, இயற்கைப் பேரழிவு மேலாண்மைச் சட்டத்தை மீறியதாக இரண்டு குற்றச்சாட்டுகள், 2020 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது தொற்று நோய்க்கட்டுப்பாடுகளை மீறியமை தொடர்பானவை என அவரது வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

அவர் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் “போலியானவை மற்றும் அரசியல் நோக்கம் கொண்டவை” என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியது.

**கொல்லப்படுதலும் போராட்ட ஊக்கலும்**

ஆட்சிக் கவிழ்ப்பு தொடங்கியதிலிருந்து கிட்டத்தட்ட 230,000 மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறிவிட்டனர் பலர் காட்டில் மறைந்திருக்கிறார்கள்.

இராணுவம் ஜனநாயக உரிமைக்காகப் போராடிய மக்களையும், எதிர்ப்பாளர்களை சுட்டுக் கொல்லத் தொடங்கிய நாட்களிலிருந்து மக்களுடைய வலுவடைந்த கோபமும் இப்போது ஆயுதங்கள் மீதான நம்பிக்கைகளுக்கும் வழிசமைத்திருக்கின்றது.

மனிதாபிமான தன்னார்வலர்கள், இடம்பெயரும் மக்கள் எனப் பலரும் கொல்லப்பட்டார்கள். மே 24 அன்று, 300 க்கும் மேற்பட்டோர் தஞ்சம் புகுந்த ஒரு கத்தோலிக்க தேவாலயத்தின் மீது ஆட்சிப் படைகள் பீரங்கிக் குண்டுகளை வீசி, அவர்களில் 4 பேரைக் கொன்றன.

சில போராளிகள் நாட்டின் எல்லைப்பகுதிகளில் உள்ள இன ஆயுத அமைப்புகளில் சேர்ந்துள்ளனர், அங்கு வாழும் சிறுபான்மையினர் பல தசாப்தங்களாக மியான்மரின் இராணுவத்திற்கு எதிராக சுயநிர்ணய உரிமை மற்றும் உரிமைகளுக்காகப் போராடி வருகின்றனர். புதிய எதிர்ப்புப் போராளிகள் தன்னிச்சையாக ஆயுதங்களையும் சேகரிக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். 23 வயதான போராளி சர்வதேச ஊடகமொன்றில் தெரிவித்த கருத்துக்கள் இவை.

“நான் ஒரு ஆயுதத்தை வைத்திருப்பேன் என்று என் வாழ்க்கையில் ஒருபோதும் நினைத்ததில்லை ... ஆனால் நாடு முழுவதும் நிராயுதபாணியான அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டதை அறிந்த பிறகு விரைவில் என் மனதை மாற்றிக்கொண்டேன். என்னால் அமைதியாக இருக்க முடியவில்லை. வீழ்ந்த நாயகர்களுக்காக பழிவாங்கவும், எனது ஒற்றுமையைக் காட்டவும், நான் ஆயுதங்களை எடுக்க முடிவு செய்தேன். ” - போராளியான சலாய் வகோக் மேற்கண்டவாறு கூறினார்.

இன்றைய மியன்மாரில் மாற்றமடையும் அடக்குமுறை எதிர்ப்புப் போராட்டங்கள், 2 பில்லியனுக்கும் அதிகமான பெறுமதி கொண்ட ஆயுதங்களைக் குவித்த ஒரு இராணுவத்தை எதிர்கொண்டு, எவ்வாறான மாற்றங்களை நிகழ்த்தப் போகின்றது என்பது கேள்விக்குறியே. ‘மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்’ என்று குற்றம் சாட்டப்பட்ட ஒரு ஆளும் ஆயுதமேந்திய இராணுவத்தை மக்கள் எதிர்ப்பதும், ஆசியாவில் மற்றுமொரு மனித அவலத்தையும் விதைக்கக்கூடும். ■

■ **“மியான்மர் , இப்போது ஒரு இறைச்சிக் கூடம் போன்றது. விலங்குகளைப் போல மக்கள் தினமும் கொல்லப்படுகிறார்கள், ”**


**-கியூ.**

■ **‘எங்களுக்கான ஒரே வழி’: ஜனநாயகத்திற்காக ஆயுதங்களை எடுத்துக்கொள்வதுதான்! -**

**-மியான்மர் பொதுமக்கள்.**


# திருவள்ளுவரும் அறிவியலும்

இ.சு. முரளிதரன்



குறித்த பொருளில் இருந்து விழிக்குள் நுழையும் கதிர்கள் விழிவில்லையில் முறிவினைச் சந்திக்கின்றன. விழிவில்லையானது குவிவுவில்லையாகக் காணப்படுகின்றது. முறிகதிர்களால் விழித் திரையில் தலைகீழ்ப்படிமமே கட்டமைக்கப்படுகின்றது. விழித் திரையிலுள்ள கோல்கலமும் கூம்புக்கலமும் படிமத்தினைப் பார்வை நரம்பு ஊடாக மூளைக்கு அனுப்புகின்றன. மூளையால் நிமிர்ந்த படிமமாக உணரப்படுகின்றது. கோல்கலம் குறையொளியில் பார்வையினையும் கூம்புக்கலம் நிறையொழியின் பார்வையினையும் நிகழ்த்த உதவுகின்றன. இரு புள்ளியினை வித்தியாசப் படுத்துகின்ற ஆகக் குறைந்த தூரத்தினைப் பிரிவலு எனலாம். ஒரு பொருள் அதீத அண்மையாக விழித்தி ரையை நெருங்கும் போது படிமம் மங்கலாகி மறைகின்றது. விழித்திரைக்கும் பொருளுக்குமான நுண்தூரத் தால் இவ்வாறான தோற்றம் நிகழ்கின் றது திருக்குறளின் 1285 ஆவது குறட்பாவில்,

“எழுதுங்கால் கோல் காணாக் கண்ணே போல்
கொண்கண் பழிகாணேன் கண்ட விடத்து”



எனப் பார்வைப்புல அறிவியலை வெளிப்படுத்துகின்றார். மை தீற்றிக் கண்ணை அழகு படுத்தும் தருணத்திலே, மை தீற்றுக் கருவியைக் காண முடியாமல் இருப்பது போலக் கணவன் அதீத அண்மையில் நெருங்கும் போது அவன் மீதான குற்றங்களையும் காண முடிவதில்லை எனத் தலைவி குறிப்பிடு கின்றாள். ஒளி குறைந்த நேரத்திலேயே (அல்லது இடத்தியே) தலைவியானவள் கணவனோடு அதீத அண்மையில் நெருங்குவாள். குறையொளியில் கோல்கலமே செயலாற்றுகிறது. அதீத அண்மையினையும் கணவன் நெருங்கும் காலத்தினையும் அறிவியலோடு பிணைக்கும் வகையிலே உவமையும் அற்புதமாகவே உள்ளது.

தோல், முடி, நகம் போன்றவற்றின் பண்புகள் பெற்றோரிடமிருந்து நமக்குக் கடத்தப்படுகின்றன. இவற்றைப் போலவே சிலவகையான நோய்களும் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படுகின்றன.

ஒவ்வொரு உயிரியும் உயிரணுக்களாலானது. உயிரணுக்களில் காணப்படும் தலைமுடியின் அமைப்பு, கைகளின் செயன்முறை போன்ற பன்முக விடயங்கள் நிறமூர்த்தங்களில் தங்கியுள்ளன. பெற்றோரின் நிறமூர்த்தங்களின் வழியே உருவாகும் பண்பால் எம்மிடமும் அவர்களின் நுண்ணியல்புகள் காணப்படுகின்றன. பெற்றோரிடம் ஏதேனும் மரபணுக்குறைபாடு இடம்பெறின், இனங்கண்டு குழந்தையிடம் வராமல் தடுக்கக் கூடிய மருத்துவ முறைகள் தற்காலத்திலே தோன்றியுள்ளன. 2018 இல் சீன மருத்துவர்கள் HIV Positive உள்ள பெற்றோரின் விந்திலும், கருவிலும் மரபணுமாற்றம் செய்து எயிட்ஸ் இல்லாத இரட்டைக் குழந்தையினை உருவாக்கியுள்ளனர். எனினும் அரசின் அனுமதியின்றி இச் செயற்திட்டத்தினை முன்னெடுத்ததால் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

தண்டு வடத்தசைச் சிதைவு (Spinal muscular atrophy) நோயைக் குணப்படுத்தும் மரபணுச் சிகிச்சைக்கான ஜோல் ஜென்ஸ்மா (Zolgen sma) மருந்தும் கண்டறியப்பட்டுள்ளது. நம் நாட்டு விலையில் 40 கோடி ரூபா என்பதால் இம் மருந்து எட்டாக் கனியாகும். எனினும் இதனை உற்பத்தி செய்யும் சுவிஸ்லாந்து நிறுவனம் வருடந்தோறும் நூறு குழந்தைகளுக்கு குலுக்கல் மூலம் இலவசமாகவும் வழங்குகின்றது. இவ்வருடம் இந்தியாவின் பெங்களூரைச் சேர்ந்த குழந்தையொன்று பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது. “நோய் சார்ந்த மரபணுவினை உணர்ந்து அச் சார்பு நீங்குமாறு மருத்துவ அறிவியலை முன்னெடுத்துச் சாரக் கூடிய நோயின் மரபணுவினை அழித்தால் எதிர்காலத்தில் அந்நோயின் சார்பற்று வாழலாம்” என்ற புத்துரையோடு அணுகினால் 359 ஆவது குறட்பாவிலே மரபணு மருத்துவத் தினை இனங்காண முடியும்.




“சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்து
சார்தரா சார்தரு நோய்”

மேகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுகை நிகழ்த்தும் தருணத்திலே இடியும் மின்னலும் உற்பத்தியாகிறது. எனினும் மின்னலைக் கண்ணுற்ற பின்னரே இடியோசையைக் கேட்கிறோம். எனவே ஒலியினை விட ஒளியானது வேகமாய்ப் பயணிக்கின்றது என்பது தெளிவாகின்றது.



இவற்றுக்கிடையில் மேலும் பல்வேறு வேற்றுமைகளும் இனங் காணப்பட்டுள்ளன. ஒலி பரவுவதற்குத் திண்மம், திரவம், வாயு போன்ற ஊடகங்கள் அவசியமாகின்றன. ஆனால் ஒளியின் பரவுகைக்கு எத்தகைய ஊடகமும் அவசியமில்லை. அதாவது ஒளியால் வெற்றிடத்திலும் பயணிக்க இயலும், ஒளி பயணிக்க எல்லையும் கிடையாது. பிரபஞ்சம் எங்கும் பரவும். ஒலியானது அலைகளாக வெளிப்படுகின்றது. ஒலி அலைகள் நெட்டலைகளாகவும் ஒளி அலைகள் குறுக்கலைகளாகவும் அமைந்துள்ளன. ஒலியின் வேகத்தினை அறிவியலாளர்களால் கடக்க முடிந் துள்ளது. ஆனால் ஒளியின் வேகத்தினைக் கடக்க முடியவில்லை.

ஒலியின் வேகத்தினை ஒளியின் வேகம் வென்றுவிடும் என்ற நுட்பமான செய்தியை 1100 ஆவது குறட்பாவிலே இனங்காண முடிகின்றது, ஒளிப்பரிமாற்றத்தின் முன்னே ஒலிப்பரிமாற்றம் தோற்றி எதுவிதமான பயனையும் தராது போய்விடுவதனை,

“கண்ணோடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்
சொற்கள் என்ன பயனும் இல”

எனத் திருவள்ளுவர் தெளிவுபடுத்துகின்றார். ■

# வொயேஜர் (முடிவில்லாத பயணம்)

சபா.விஜயகுமார்



பிரபஞ்சத்தின் எல்லைகளைத் தேடிய எமது பயணம் இன்று பூமியில் இருந்து புறப்பட்டு முடிவற்ற பயணத்தை மேற்கொள்கின்ற வொயேஜரின் பக்கம் நம் பார்வையைத் திருப்புவோம். 1977 ஆம் ஆண்டின் தொடக்கப்பகுதியில் சில மாத இடைவெளிவிட்டு வொயேஜர் 1, மற்றும் வொயேஜர் 2 ஆகிய இரு விண்கலங்கள் நாசாவினால் விண்ணுக்கு அனுப்பப்பட்டன. இவற்றின் இலக்குகளாக வியாழன், சனி மற்றும் சனியின் வளையங்களை மிக அருகில் சென்று ஆராய்வதே ஆகும். ஆனாலும் அவை இரண்டும் தமது இலக்குகளை நிறைவேற்றிவிட்டு மிகவும் வெற்றிகரமாக அதற்கு அப்பால் இருக்கும் யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய கோள்களுக்கும் அருகில் சென்று நோட்டம் விட்டுப் பூமியில் இருக்கும் மனித மூளைகளுக்குப் பல புதிய விருந்துகளை அனுப்பிவைத்தன. ஆனாலும் தமது இலக்குகளை நிறைவேற்றிய இவ் இரண்டும் தற்போது 44 வருடங்களையும் தாண்டி விண்மீனிடைத் தொகுதியை நோக்கி (interstellar) பயணித்துக் கொண்டிருக்கின்றன.

1970 களின் கடைசியில் அமைத்த அபூர்வமான கோள்களின் சுற்றுப்பாதை அமைப்பினால் வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்ரியூன் ஆகிய கோள்களைக் குறைந்தளவு எரிபொருள் கொண்டு, குறைந்த காலப் பகுதியில் சென்றடையக் கூடிய சாத்தியக் கூறு உருவானது. இவ்வாறான சுற்றுப்பாதை அமைப்பு 175 வருடங்களுக்கு ஒரு முறை வரும். இவ்வமைப்பினால் ஒரு கோளைச் சுற்றி விட்டு அடுத்த கோள் என கோள்களிள் ஈர்ப்பு ஒரு கவண் போல் பாவித்து குறைந்த எரிபொருளில் பயணித்து விடமுடியும். இப்படியான ஈர்ப்பு விசையைப் பாவித்து வேகத்தை அதிகரித்து பயணிப்பது ஈர்ப்பு உதவி என அழைக்கப்படும். இந்த ஈர்ப்பு உதவி முறையைப் பயன்படுத்தினால் நெப்டியூனைச் சென்றடைய 30 வருடங்களுக்குப் பதிலாக வெறும் 12 வருடங்களே போதுமானது. 10,000 க்கும் அதிகமான பயணப் பாதைகள் கருத்தில் எடுக்கப்பட்டும் இறுதியாக இரண்டு பயணப்பாதைகளே தேர்வு செய்யப்பட்டன. இந்தப் பாதைகள் வியாழன் மற்றும் அதன் துணைக் கோள் அயோ (IO), சனி மற்றும் அதன் துணைக்கோள் டைட்டன் ஆகியவற்றைச் அருகில் சென்று ஆய்வு செய்யவும் பின்னர் வொயேஜர் 2 முடியுமானால் யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகியவற்றை சென்றடையுமாறும் தெரிவு செய்யப்பட்டன. வேகமாகப் பயணித்த வொயேஜர் 1 வியாழனை மார்ச் 5, 1979 இல் அடைந்தது. அதன் பின்னர் நவம்பர் 12, 1980 இல் சனியை அடைந்தது. ஆனாலும் வொயேஜர் 2 விண்கலம் 1979 இல் வியாழனையும் 1981 இல் சனியையும் அடைந்தது. வொயேஜர் 2 ஜனவரி 1986 இல் யுரேனசைச் சென்றடைந்தது. முதன்முதலாக பூமிக்கு யுரேனஸ் மற்றும் அதன் துணைக்கோள்கள் தொடர்பாகவும், மற்றும் அதன் காந்தப்புலம், யுரேனசைச் சுற்றியுள்ள கறுப்பு வளையம் ஆகியவற்றின் படங்கள் மற்றும் தரவுகளை அனுப்பி வைத்தது. இதே காலப்பகுதியில் வொயேஜர் 1 சூரியத் தொகுதியை விட்டு வடக்கு நோக்கி வெளியே செல்லும் பாதையில் பயணத்தைத் தொடர்ந்தது. மனிதன் உருவாக்கிய கருவிகளில் இதனது கருவிகள் தான் முதன்முதலாக (Heliopause) கெலியோபேஸ் பிரதேசத்திற்குள் புகும். கெலியோபேஸ் எனப்படுவது சூரியனது காந்தப் புலத்தின் எல்லை முடிவடைந்து விண்மீனிடைவெளி (Interstellar space) தொடங்கும் பிரதேசமாகும். ஆகஸ்ட் 1989 இல், நெப்ரியூனை நெருங்கிய வொயேஜர் 2 அதனை ஆராய்ந்து விட்டு தெற்கு நோக்கி விண்மீனிடைவெளிப் பிரதேசத்திற்குத் தன் பயணத்தைத் தொடர்ந்தது. இன்று வரை வொயேஜர் 1 பூமியில் இருந்து 22 பில்லியன் கிலோ மீற்றரைக் கடந்தும் வொயேஜர் 2 பூமியை விட்டு 19 பில்லியன் கிலோ மீற்றரைக் கடந்தும் சென்று கொண்டிருக்கின்றன. வொயேஜர் விண்கலங்கள் அதனது சக்தி முதலில் இருந்து சக்தி கிடைக்கும் வரை தொடர்ந்து எமக்கு தரவுகளை அனுப்பிக் கொண்டே இருக்கும். 2025 இற்கு பின்னர் எமக்கு இவை இரண்டும் தகவல்களை அனுப்பாவிடினும் தொடர்ந்து அதனது வேகத்தில் பயணித்துக் கொண்டே இருக்கும். இன்னும் 300 வருடங்களில் வொயேஜர் 1 ஊர்ட்மேகம் எனப்படும் பிரதேசத்தை அடையும். இப்பிரதேசம் சூரியனைச் சுற்றிக் காணப்படும் ட்ரில்லியன் கணக்கான சிறிய பனிப்பாறைகளால் ஆன பிரதேசமாகும்.

அண்ணளவாக 50,000 AU தொடக்கம் 200,000 AU வரை இந்தப் பிரதேசம் அகண்டு விரிந்து காணப்படுகின்றது. AU என்பது Astronomical Unit என்பதன் சுருக்கமாகும். அதாவது சூரியனுக்கும் பூமிக்கும் இடையேயான தூரமே ஒரு AU ஆகும். இப்பிரதேசத்தைக் கடக்க வொயேஜர் 1 இற்கு அண்ணளவாக 30,000 வருடங்கள் எடுக்கும். இது ஊர்ட் மேகத்தைக் கடந்தவுடன் ஏதாவது விண்பொருட்களுடன் மோதாவிடின் பால்வீதியில் தன்னந்தனியே பயணித்துக் கொண்டே இருக்கும். மேலும் இரண்டு விண்கலங்களும் தங்கத்திலான தரவுத்தட்டுகளைச் சுமந்து செல்கின்றன. வேறு ஏதாவது அறிவுள்ள ஏலியன்ஸ் உயிரினம் வொயேஜர் விண்கலங்களைக் கண்டறிந்தால் அவற்றில் உள்ள தரவுத் தகட்டில் இருந்து பூமியைப் பற்றியும் அதன் அமைவிடம் பற்றியும் அறிந்து கொள்ளமுடியும். பூமியின் படங்களும் பூமியின் உயிரினங்களின் படங்களும் உலகில் 55 மொழிகளில் வணக்கம் தெரிவித்து செய்திகளும் (எமது ஆதிமொழி தமிழ் இல்லாதது பெரும் குறையே ) பூமியின் இயற்கை ஒலிகள், குழந்தை அழும் சத்தம், மேலும் மொஸார்ட் இசை போன்ற மேதைகளின் இசை அமைப்புக்கள் என்று பல விடயங்களை இந்த தங்கத் தகடு கொண்டுள்ளது. மனித இனமே அழிந்தாலும் மனிதன் என்ற அறிவுள்ள உயிரினம் வாழ்ந்ததற்குச் சாட்சியாக வொயேஜர் விண்கலங்கள் பால்வீதியைச் சுற்றி வலம் வந்து கொண்டே இருக்கும். ■

# தூரிகை நிழற்றிச் சென்ற ஓவியம்

சி.ரமேஷ்

மனித உணர்வின் தோற்றங்களை, இயற்கையின் ரகசியங்களை, ஒளியின் இயக்கங்களை தூரிகையின் தீற்றல்களால் உயிரும் உணர்வுமுள்ள ஓவியங்களாகப் படைத்தவர் இளையராஜா. காட்சிக்கான உரு, காட்சியமைப்பு, வர்ணச்சேர்க்கை, வர்ணத்திணிவு என்பனவற்றை நுட்பமாகத் தம் ஓவியங்களில் கையாண்டவர். இவரின் பெரும்பாலான உருவத்திரிபற்ற ஓவியங்கள் இயற்பண்புவாத நிலையில் கட்டுண்டவை. இவ்வோவியங்களின் கருப்பொருள் கும்பகோணத்தருகில் செம்பியவரம்புக் கிராமத்து வாழ்க்கையில் இருந்து பெறப்பட்டவை. இயற்கையின் ரகசியப்பக்கங்களை அதன் ஒளிக் கீற்றுக்களை மண்வாசனையோடு காட்சிப்படுத்திய வினைத்திறனும் கலையாளுமையும் கொண்ட நித்திய கலைஞன் தம்வாழ்வின் மீதிப் பக்கங்களை வரையாமல் கடந்து சென்று விட்டான். அவனின் வாழ்வின் கணங்கள் முடிந்து விட்டன. அவன் விட்டுச் சென்ற ஓவியங்கள் இன்று தனிமையின் சோபையில் தம் நித்திய பக்கங்களின் சிறகை அகல விரிக்கின்றன.



உருவத்தின் வெளிப்பாட்டுக்கப்பால் அதன் பின்னணிகள் கூட இயல்பாய் இருக்கவேண்டும் என்பதில் சிரத்தையும் அக்கறையும் கொண்ட மகாகலைஞன் அவன். ஓவிய உலகில் இளையராஜா என்பது சாதாரண மனிதனல்ல. அது அற்புத சிருஷ்டி. தமிழ்த் திராவிடக் கலையின் தனித்துவமிக்க அடையாளம். மாதவன், நட்ராஜ், கோபு, மணியம் செல்வம், மாருதி, ஷ்யாம், ஹிந்துவின் கேசவ் எனப் பல்வேறு நபர்களின் ஓவியங்களை உள்வாங்கிக் கொண்டு இந்தியர்களின் வாழ்க்கை குறித்த சித்திரங்களை அதன் நிழற்படங்களை அதன் இயல்புநிலை குறையாது வர்ணங்களால் காட்சிப்படுத்தியவர் இளையராஜா.

ரவிவர்மாவின் ஓவியங்களில் அதிகக் காதல் கொண்டு அதன் சாயல்களிலும் சில ஓவியங்களை வரைந்தவர். அது போல கல்கத்தாவின் சஞ்சய் பட்டாச்சார்யா, பிகாஸ் பட்டாசார்ஜி, மும்பையின் வசுதேவ்காமத் எனப் பலரின் ஓவியங்களை அதிகம் ரசித்தவர். அதன் வாயிலாகத் தமிழ்நாட்டில் அசல் ஓவியங்களை வரைந்தவர். சுயாதீனமான ஆக்கத் திறன் கொண்ட இளையராஜாவின் ஓவியங்கள் வடிவமைப்பாலும் ஒத்திசைவாலும் காண்போர் மனதை சுவீகரிக்கும் தன்மை கொண்டவை.

அசல் ஓவியங்கள் தீட்டுவோர் அலட்சியப்படுத்தப்பட்டு ஓரங்கட்டப்பட்ட நிலையில் வாட்டர் கலர், ஒயில் பெயின்டின் ஊடாக அசல் ஓவியங்களை வரைந்து தன் நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டவர் இளையராஜா. தத்துரூபமாக மொடல்களை வைத்து வரையும் ரெம்ப்ராண்ட், ரஃபேல், கரவாஜியோ போன்றோரின் ஓவியங்களைக் கண்டு அவர்களின் ஓவியங்களால் கவரப்பட்ட இவர், திராவிடப் பெண்களின் தோற்ற மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு மெய்மைத்தன்மைமிக்க ஓவியங்களை வரைந்தார். இவருடைய ஓவியங்கள் நிஜ மாந்தரை அப்படியே பிரதிபலிக்கும் பிரதிமைகள். இவருடைய பெரும் பாலான ஓவியங்கள் கிராமத்துப் பெண்களை அச்சு அசலாகக் கொண்டு வரையப்பட்டவை. ஐந்து அக்காள்கள், ஐந்து அண்ணிகள், அவர்களின் குழந்தைகள் எனப் பெண்கள் புடைசூழ வாழ்ந்தமையால் இவரின் ஓவியங்களில் கிராமத்துப் பெண்களுக்குரிய அழகு, நளினம், பொறுமை முதலானவை அப்படியே அமைந் திருக்கும். பெண்ணின் உணர்வை அவளின் கனவு, கற்பனைகளை, பெண்களின் ஆழ்மனதில் ஓடும் எண்ணத்தை, பெண்ணின் முக பாவம் வெளிப்படுத்தும் சந்தோஷம் மற்றும் துக்கத்தை எல்லாம் கடந்த அவர்களின் ஆழ் மௌனத்தை தத்துரூபமாகத் தன் சித்திரங்களில் தீட்டியவர். அக்காவையும் அக்காவின் தோழிகளையும் தன் மனைவியையும் மொடலாகக் கொண்டு ஓவியங்கள் பலவற்றை வரைந்தவர். வரையும் மாந்தர்களின் உடலமைப்பு, முகபாவங்கள் என்பவற்றைப் பிரதி பலிப்பதாக இருந்தாலும் மாந்தர் அணியும் ஆபரணங்கள், ஆடைகள், ஓவியத்தில் கையாளப்





படும்நிறம் முதலா னவைகளில் கற்பனை இருக்கும். கோயிலுக்குச் சென்று கடவுளைப் பார்க்கும்போது என்ன உணர்வு வருகிறதோ அதே உணர்வு தம் ஓவியங்களிலும் பிரதிபலிக்க வேண்டும் என நினைத்து ஓவியங்களை வரைந்தவர் இளையராஜா.

கும்பகோணத்தருகில் செம்பியவரம்பு கிராமத்தில் பிறந்தவர். ஐந்து அக்காமாருக்கும் ஐந்து அண்ணன்மார்களுக்கும் இளையவராகையால் அண்ணிமார்களால் ‘குட்டி அப்பா’ என்று அழைக்கப்பட்டவர். கும்பகோணம் நகர மேல்நிலைப்பள்ளியில் படித்தபோது ஓவிய ஆசிரியர் துரை என்பவரால் வளர்த்தெடுக்கப்பட்டார். ஓவியங்கள் மீதான ஆர்வம் காரணமாக வீட்டில் பிரச்சினை ஏற்படவே, ஒரு கட்டத்தில் தனது ஆசான் துரையின் வீட்டுக்கே சென்று தங்கியிருந்து கற்றார். பள்ளி நாட்களில் அவரின் வழிகாட்டுதலில் ஓவிய ஆர்வத்தை வளர்த்துக் கொண்டார். பின்னாட்களில் கும்பகோணம் கவின் கலைக் கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெற்றார். அப் போதைய வண்ணக்கலை ஆசிரியர் சிவபாலன் அனுமதிக்காக இவரை ஓவியங்களை வரையச் சொன்ன போது, இளையராஜா வரைந்த ஓவியங்களைப் பார்த்து அசந்துபோனார். தம் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவர்களின் ஓவியத்தைவிட இளையராஜா வரைந்த ஓவியம் சிறப்பாக இருந்ததெனச் சிவபாலன் ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரியில் இளையராஜாவின் ஓவிய ஆசிரியராக இருந்தவர்களில் ஒருவர் மனோகரன். இளையராஜாவுக்கு ரியலிச ஓவியங்களில் இருந்த ஈர்ப்பைக் கண்டு அதனை வளர்த்து விட்டவர். சுயாதீனமாகக் கையால் வரையப்படும் பிரதிமை ஓவியங்களின் தனித்தன்மைகளை, அதன் வெளிப்பாட்டை வர்ணக்கலவைகளின் பிரயோகத்தை இளையராஜாவுக்குக் கற்றுக் கொடுத்து அவரை வழிப்படுத்தி அவருக்கு தம்மாலான முழுப் பயிற்சியையும் அளித்து ஓவியத்தில் முதுகலைமாணிப் பட் டத்தை பெற்றுக் கொள்ளத் துணை செய்தவர்.

விநாயகரை ஒரு பெண் பூஜை செய்வதாக ஓவியம் ஒன்றை வரைய முனையும்போது பெண்ணின் உணர்வு வெளிப்பாட்டை மட்டும் ஓவியத்தில் தீட்ட முனையாது அவ்விநாயகர் சிலை தினசரி எண்ணெய் அபிஷேகத்தாலும் சந்தனம், விபூதியாலும் நிறம் மாறியிருப்பதையும் வரைந்தார். இதனாலே இவருடைய ஓவியங்கள் அதிகம் பிரசித்தம் பெற்றன. ஓவியங்களை வரைய இவர் எடுக்கும் எல்லாப் புகைப்படங்களிலும் லைட்டிங் இருக்கும். ஆனால் அந்த லைட்டிங் இவர் வரையும் ஓவியத்தில் தேவையான இடத்தில் மட்டுமே இருக்கும். சமையலறையில் இருக்கும் அடுப்பைப் பற்றவைக்கும் ஒரு கிராமத்துப் பெண்ணை இவர் வரைகிறார் என்றால் அதில் தீப்பெட்டி, விறகு, தீ, பாத்திரம் என எல்லாவற்றையும் இயல்பாகவே கொண்டு வருவார். பார்வையாளனுக்கும் படைப்பிற்கும் இடையே ஒரு பரிமாற்றம் நடக்க வேண்டும் என்பதை அவர் பொதுவாக விரும்புபவராகையால் அவருடைய ஓவியங்கள் மக்களிடம் உடனேயே போய்ச்சேர்ந்தன. பாத்திரங்களை இயல்பான முகபாவனைகளோடு காட்சிப்படுத்தும் இவரது ஓவியங்கள், அவ்வோவியத்துக்கான பிற்புலக் காட்சிகளான கிராமங்கள், தெருக்கள், வீடுகள், வயல்கள், கோயில்கள், சமையலறைகள் யாவற்றையும் இயற்பியல் பண்புடனேயே சித்திரித்தன.

இளையராஜாவுக்குப் பெரிய பெயரையும் புகழையும் வாங்கிக் கொடுத்த நிகழ்வாக 2009ஆம் ஆண்டு பெங்களூரில், யாசின் அவர்களின் அப்ஸ்ட்ராக்ட் ஆர்ட் காலரியில் நடைபெற்ற “திராவிடப் பெண்கள் கண்காட்சி” யைக் கூறலாம். இக்கண்காட்சிக்குப் பின் இளையராஜா மிகுந்த கவனிப்பை பெற்றார். ஓவியக்கலைகள் மேல் நாட்டங்கொண்ட முதியவரும் இலங்கையைச் சேர்ந்த வருமான தனலட்சுமி ஃபோர்டிஸ் என்பவர் தன் கேரிப்புக் காக வாங்கி இருந்த இளையராஜாவின் ஓவியங்களை அக்கண்காட்சியில் காட்சிப்படுத்தினார். இக்கண்காட்சியை தனலட்சுமிஃ போர்டிஸ், ஒரு தனிநபர் கண்காட்சியாகவே நடாத்தி முடித்தார். கண்காட்சியில் வைக்கப்பட்ட இவரின் திராவிடப் பெண்கள் ஓவியங்கள் பிரபலமானவை. குழந்தைகளையும் பெண்களையும் கடவுள்களையும் முதியவர்களையும் நீர்நிலைகளையும் தத்துரூபமாக அதில் காட்சிப்படிமமாக்கி ஓவியமாக்கியிருந்தார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)





“சாப்பாட்டுக்கு கஷ்ரப்படாத நடுத்தர வர்க்கக் குடும்பத் திலிருந்த அவளை அவன் காதலித்தது தவறல்லவே? அவளது காலியான வயிற்றை நினைக்க, நினைக்க அவனது கால்கள் வீட்டை விட்டு வெளி யேறத் துருதுருத்தன.”

தாட்சாயிணி



# தாழக்கம்

“பீப்,பீப்” என்று தூரத்தில் மீன்காரனின் சமிக்ஞை ஒலித்தது. வாசல் குந்தில் உட்கார்ந்திருந்த மதிவாணனின் கால்கள் சட்டென்று எழுந்து விட உன்னின. மீன் சாப்பிட்டு எவ்வளவு நாள் என மனம் ஏங்கிற்று. அவள் இரண்டு நாள் முன்னம் தான் “இறால்” சாப்பிட ஆசையாய் இருக்குதென்று சொல்லியிருந்தாள். இவனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. இறால் என்ன, அரிசி வாங்கு வதற்குக் கூட இப்போது கையில் காசில்லை.

கடந்த இரண்டு வாரங்களாக எதைத் தின்று சீவித்தோம் என்பது கூட நினைவிலில்லை. இப்படியே பொழுது விடிவதும், சாய்வ துமாக நாட்கள் நகர்ந்து கொண்டேயிருந்தன. அவள் இன்னும் எழும்பவில்லை. அவளது வழக்கம் இதுவல்ல. நேற்றிரவு எதுவும் சாப்பிட வில்லை. வெறும் தேநீரைத் தான் குடித்து விட்டுப்ப டுத்தார்கள்.

சில நாட்களாக தேநீரின் இனிமை குறைந்திருக்கிறது.

போத்தலில் இருக்கிற சீனி குறைந்து கொண்டே போவது மனதை உறுத்திக் கொண்டிருக்க அவளும் தான் என்ன செய்வாள்?

இவனுக்கு வயிறு விறாண்டத் தொடங்கிவிட்டது. இப்படியே இன்னும் எத்தனை நாள்?

இரண்டு கிழமையாய்த் தொழில் இல்லை. அரசாங் கம் தருவதாய்ச் சொன்ன ஐயாயிரம் ரூபாயும் இன்னும் வருவதாய்க் காணோம்.

இவன் எழும்பிப் போய் அவளது நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்.

லேசான கணகணப்புத் தவிர வேறெதுவுமில்லை.

“ஒரே பஞ்சியாக் கிடக்கப்பா, எழும்பி என்னத்தைச் செய்யிறது?” அவள் சொல்லியவாறே எழுந்து உட் கார்ந்தாள்.

இவனும் அவள் பக்கத்தில் அமர்ந்தான். சாணி மெழுகிய தரை குளிர்ச்சியாக இருந்தது.

“கையக் காலைக் கட்டிப் போட்டு விட்டது போலை கிடக்கு. வீட்டை விட்டு வெளிக்கிடாதை எண்டால் மனுசர் சீவியத்துக்கு என்ன செய்யிறது?”

அவன் எழுந்து மூலையில் கிடந்த ரேடியோவைப் போட்டான்.

“ராஜா என்பார் மந்திரி என்பார். ராஜ்ஜியம் இல்லை ஆள,” என எஸ்.பி.பி பாடத் தொடங்கினார்.

இன்னும் பற்றி தீர்ந்து விடாதது பெரிய ஆசுவாசத் தைக் கொடுத்தது.

அவளோடு வாழத் தொடங்கிய பிறகு வந்த அவனது பிறந்த நாளுக்கு அதை அவள் தான் அவனுக்கு வாங்கிக் கொடுத்திருந்தாள்.

“எனக்கு கோயிலுக்குப் போகோணும் போலை கிடக்கப்பா” அவள் சோர்வாக முணுமுணுத்தாள்.

இன்றைக்கு வெள்ளிக்கிழமை என்பது அவனுக்கு இப்போது தான் உறைத்தது. முந்தைய வெள்ளிக்கிழமை கள் எல்லாம் கண்ணுக்கு முன்னால் நினைவுகளைக் குழைத்து ஊற்றத் தொடங்கின.

“ம்ம். இப்ப எந்தக் கோயில் தான் திறந்து கிடக்கும்? ஐயர்மார் தனிய அவசர, அவசரமாப் பூசையை முடிச்சுப் போட்டுப் போக வேண்டியது தான்.”

“ஏனப்பா, ஊர் ஒழுங்கையளுக்காலை நான் மெல்லப் போய் பூந்தோட்டத்துக்கை பூ ஆஞ்சு மாலை கட்டிக் குடுத்திட்டு வரட்டோ?”

அவன் அவளை ஏக்கத்தோடு பார்த்தான்.

“அதெல்லாம் ஒரு காலமப்பா, இப்ப எங்கை திரிஞ்சாலும், போலீஸ் ஒரு பக்கம், பி.எச். ஐ ஒரு பக்கம் எண்டு அள்ளிக் கொண்டு போடுவாங்கள்.”

“ஒவ்வொரு வெள்ளியும் அம்மனுக்கு மாலை கட்டிக் குடுத்த நான் உங்களைக் கட்டினதோடே அதை விட் டிட்டன். அது தான் இப்பிடி சாப்பாட்டுக்கும் வழியில்லாமப் போச்சுதோவென்று நினைச்சன்.”

அவள் கண்களில் கண்ணீர் எட்டிப் பார்க்க முகத்தை மறுபுறம் திருப்பினாள். இவன் நெஞ்சுக்குள் ஈட்டி செருகினாற்போல் உணர்ந்தான்.

தன்னுடைய நிலை அப்படியானது குறித்துத் தன் மீதே அவனுக்கு ஆத்திரம் வந்தது.

கொஞ்சம் பொருளாதாரத்தைச் சீர் செய்த பிறகு திருமணம் செய்திருக்கலாமோ?

சாப்பாட்டுக்கு கஷ்ரப்படாத நடுத்தர வர்க்கக் குடும்பத்திலிருந்த அவளை அவன் காதலித்தது தவறல்லவே? அவளது காலியான வயிற்றை நினைக்க, நினைக்க அவனது கால்கள் வீட்டை விட்டு வெளி யேறத் துருதுருத்தன.

வெள்ளிக் கிழமைகள் எப்போதுமே அவளுக்குப் பக்தி பூர்வமானவை. விடியற்காலையில் அவள் கோவில் நந்தவனத்தில் மாலை கட்டிக் கொண்டிருக்கின்ற வேளைகளில் அவன் கோவில் தேர் முட்டி வேலை செய்வதற்காக வந்திருப்பான். கட்டுமான வேலைகளின் கடினம் மறக்க அவன் அலைபேசியில் சினிமாப் பாட் டுக்களைப் போட்டு விட்டு வேலை செய்து கொண் டிருப்பான்.

நந்தியாவட்டை, பொன்னுச்சிப் பூக்களை மரங் களிலிருந்து பிடுங்கிப் பிடுங்கி நாரில் பிணைத்து மாலையாக்கிக் கொண்டிருக்கும் அவளுக்கு, வாயில் முணுமுணுத்துக் கொண்டிருக்கும் பக்திப் பாசுரங்க ளுக்கு இடையூறாக, எஸ்.பி.பியின் குரலும், உன்னி கிருஷ்ணனின் உருகலும் வந்து விழ ஆரம்பித்தி ருக்கின்றன.

ஒருநாள், இருநாள் போக அவள் மாலை கட்டும் வேகம் குறைய ஆரம்பிக்க, மாலையைக் கட்டி முடித்து உள்ளே போக பூசை முடிந்து கோயில் கதவு சாத்தத் தயாராக இருந்தது. பொறுக்க முடியாமல் போய் இவ னுக்கு முன்னால் வந்து நின்றாள்.

“கோயிலுக்கு கும்பிட வாற சனத்துக்கு இடைஞ்சலா இப்பிடிப் பாட்டுப் போடுறது சரியோ.?”

கோபத்தை அடக்கிக் கொஞ்சம் நிதானமாய்த் தான் கேட்டாள்.

“கோயில் அங்கையெல்லோ கிடக்கு. கும்பிடுற சனம் அங்கை தான் நிக்குது. நாங்கள் கோயிலுக்கு வெளிலை தானே பாட்டுப் போடுறம்.”

“கோயில் நந்தவனமும் கோயில் மாதிரித் தானே. பூப் பிடுங்குற ஆட்களுக்கு இடைஞ்சல்”

“பூப் பிடுங்கி மாலை கட்டுற ஆட்கள் கன பேரில்லைத் தானே.”

“ஒரு ஆளோ... பல பேரோ...? கடவுளை நினைக்க வேண்டிய இடத்தில சினிமாப் பாட்டுத் தேவை இல்லைத்தானே?”

“கடவுள் சிந்தனை இருந்தா வேறை எந்தச் சத்தமும் புலனிலை உணராதாம்.”

அதற்கு மேல் அவள் அவனுடன் தர்க்கிக்கவில்லை.

அவளுக்கு நிறைய வேலை இருந்தது. முதல் தடவை உயர்தரம் எடுத்து பல்கலைக்கழகம் கிடைக்காததால், இரண்டாம் தடவை முயன்று கொண்டிருந்தாள். அதற்கு வேண்டுதல் தான் இந்த மாலை. இடையூறோ பார்த்துப் பார்த்து வந்து கொண்டிருக்கிறது.

அவளோடு தர்க்கித்தாலும் அவன் மறுபடி பாட்டைப் போட முயலவில்லை.

அவள் நந்தவனத்தில் பூப் பிடுங்கி மாலை கட்டி அம்மனுக்குச் சாத்தி சந்தண, குங்கும வாசனையுடன் வெளியேறும் வரை அவனது அலைபேசி மௌனித் திருக்கும். ஆனால், அவள் காதிற்குள் தான் அவன் ஏற்கனவே போட்டிருந்த பாடல்கள் ஒலிக்கத் தொடங்கியிருக்கும்.

பிறகு, அந்தப் பாடல்கள் இல்லாமல் பூப் பிடுங்க முடியாதென்று தோன்றிய ஒரு கணத்தில் அவள் இவனிடம் வந்தாள்.

“எனக்காக ஒருத்தரும் பாட்டை நிப்பாட்ட வேண் டாம். மெள்ளப் போடலாம். பிரச்சினை இல்லை.”

அதன் பின் பரிமாறிக் கொண்ட புன்னகைகள், பார்வைகளின் பின்பு அவள் இரண்டாம் தடவைப் பரீட்சையிலும் பல்கலை அனுமதிக்குத் தகுதி பெறா விட்டாலும், அதற்காகக் கவலைப்பட வேண்டுமென்று அவளுக்குத் தோன்றவில்லை. அவனை விட வேறொரு வெகுமதி தனக்குத் தேவையில்லையென்பது போல அவள் எண்ணத் தொடங்கி விட்டாள். அதன் பிறகு வீட்டை எதிர்த்துக் கொண்டு இவனோடு வந்து விட்டாலும், அந்த வாழ்வை இனிமையாய்க் கொண்டாடுவதற்கு இடையூறாக இந்த லொக்டவுன்.

அவனோடு கூட வேலை செய்தவர்களில் ஒருவன் மரக்கறிகளை வாங்கி விற்பதற்கு “பெர்மிட்” எடுத்து வைத்திருக்கிறான். ஊர், ஊராய் மரக்கறி விற்றுப் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறான். சமயங்களில் அவன் தன்னிடம் எஞ்சுகின்ற கழிவு மரக்கறிகளை இவனுக்குக் காசில்லாமல் தந்து கொண்டிருக்கிறான். அதை ஏதோ ஒரு விதமாக வெட்டிக் கழித்துச் சமைத்து ராகினி அமுதமாக்கித் தருகிறாள்.

இப்போது அரிசி இல்லை.

அவள் எழும்பிச் சுள்ளிகளை எரித்துத் தண்ணீரைச் சுடவைத்தாள். இடைச் சுவராயிருந்த ஓலைத் தட்டியில் செருகியிருந்த சீப்பை எடுத்துத் தலை வாரத் தொடங்கினாள். தலைமுடி எண்ணெய் காணாமல் பரட்டை பற்றத் தொடங்கியிருந்ததை அவன் ஒரு வித கையாலாகாத்தனத்தோடு பார்த்தான்.

தலை வாரி முடித்தவள், அடுப்பங்கரையில் குவிந் திருந்த சாம்பலைக் கிள்ளி உள்ளங்கையில் போட்டுக் கொண்டு வெளியே போய் முற்றத்துப் பூவரசின் கீழ் வைக்கப்பட்டிருந்த வாளியை நோக்கிப் போனாள்.

சாம்பலைத் தேய்த்துப் பல் விலக்கிக் கொண்டிருந்த அவளைப் பார்க்க அவனுக்கு நெஞ்சு எரிந்தது.

அவளது வீட்டில் அவள் ஒரு நாளும் பற்பசை இல்லாமல் பல் துலக்கியிருக்க மாட்டாள். அவளை இங்கு கூட்டி வந்த போது எந்தக் குறையுமில்லாமல் ஒரு ராணி போல் அவளை வைத்திருக்க வேண்டும் என்று தான் அவன் நினைத்திருந்தான். அந்த நினைப்புத் தான், நண்பர்களோடு மம்மல் பொழுதில் போய் வந்த கள்ளுக் கொட்டிலைக் கூட இவனை மறக்கச் செய்தது.

(16 ஆம் பக்கம் பார்க்க)




# என்ன உலகமடா பரமானந்தா?

தமிழ்க்கவி

"போனாப் போன இடம் வந்தா வந்த இடம், திரும்பவும் உரிய இடத்துக்குப் போக நினைவே வராது. என்ர சீதேவி மணாளனைப்பற்றித்தான் புலம்புறன். என்ன மனிசனப்பா அவனாரோ சொன்ன மாதிரி பொங்கிக் கழிச்ச கழிவுகள் எனக்கெண்டு வாய்ச்சிருக்கு." நவமணியக்காதான் ஊரெடுபடக் கத்துறா அதுக்குப் பேர் புலம்பலாம். அதைப்போய் மனிசியிட்ட விளக்கங் கேக்கப் போனியளோ... மனிசி தூஷணத்தாலதான் தரும். எனக்கேன் வம்பு. நான் மெதுவா அந்தப்பக்கம் திரும்பாம என்ர மாட்டைக் கலைச்சுக் கொண்டு போறன்.

" என்னடியாத்தை கண்ணும் தெரியேல்லயே பாராமப் போறாய்." எண்டாவோ. 'போச்சடா...மனிசியிட்ட நல்லா மாட்டியிட்டன்'

"இல்லையக்கா பால்கறக்க நேரமாச்சு. பொழுது பட்டா நுளம்பு விடாது மாடு கால உதைக்கும்" நா... ஒரு இழுவையோட நிப்பாட்டியிட்டா. அவாட மனிசன் எங்கட மாலுக்குப் பிறகால பிலாமரத்தடியிலதான் காத்தாலகூட கேரம் போட்டில விழுந்து கிடக்கிறார். அதைச் சொன்னனோ... துலைஞ்ச குடிநாசம்.

அந்தாளுந்தான் என்ன செய்யிறது. வயசு வந்த மனிசருக்கெண்டு ஏதும் ஒன்லைன் கிளாசுகள் இருக்கே. நாள் முத்தா வீட்டுக்க அடைஞ்சு கிடக்க என்ன அடைக்கோழியே. இனி அந்தாளின்ர ரசனையளுக்கு நவமணியக்காட கதையள் சரிவராது. அவா கிணத்துத் தவளைதான். அந்தாள் அரசியலாகட்டும் சமூகவியலாகட்டும் கதைக்க வெளிக்கிட்டா... சமனா, என்ர மூத்தவனும் அப்பரும் கூடினா இருந்து கேக்கலாம். பட்டிமன்றங்கள் தோத்துப்போம் நடுவரில்லாமயே தூள்பறக்கும். " நீ என்னடி வாய்பாக்கிறாய் போய் சமையன்" எண்டு என்னைக் கலைக்கிறதிலயே அப்பர் குறியா நிப்பார். அவருக்கு அவற்ற தொந்தி குறையாம இருக்கோணும். எட இந்தா அந்தா எண்டு இப்ப ஒரு மாசத்தை நெருங்குது தனி அடைப்பு. ஹஹ தனி அடைப்பு எண்டா ரோட்டுக்குப் போகாம வேலியளுக்கால ஒண்டு கூடல்தான் நடக்குது.

ஹேஹே கொரோனாவோ என்ன நினைச்சிது எங்கட சனத்தைப்பத்தி. ஒரு சாமானும் தட்டுப்பாடில்ல என்ன... சாராயக்கடை பூட்டாம். வெத்திலபாக்கு இல்லையாம். வீடி, சிக்ரெட்டு, பான் பராக்கு, பியர் பேணியள் ஒண்டுமில்ல. அப்ப என்னண்டு சீவிக்கிறது. பேந்தென்ன அத்தியாவசியப் பொருளுகள் விக்கிறாங்கள். எடேய் ஒருதன் சோறில்லாம ரெண்டு நாளைக்கு இருப்பான். வீடி, சுருட்டில்லாம என்னெண்டு இருக்கிறது. அதை விடு, எட குடிச்சவன் குடிக்காம எப்பிடி இருக்கிறது. தம்பீ வெத்திலை பாக்கில்லாம எங்கட சனம் எப்படா இருந்தது. எந்தச் சந்தையில, எந்த ரோட்டில. எந்த செத்தவீடு கலியாண வீட்டில, எங்க வெத்திலத் துப்பல் இல்லாத இடம் எங்க கிடந்தது.

எங்கட சின்னையாக்கிழவன் வெத்திலையச்சப்பிக் கொதகொதண்டு வாய்க்க வச்சுக்கொண்டு உதட்டுக்குமேல ஆக்காட்டி விரலையும் மோதிர விரலையும் வெச்சு அழுத்திப் புறீச் செண்டு துப்பினா பங்க ரெண்டு மீட்டருக் கங்கால போய் சின்னன் முதல் பெரிசுவரை கொரோனாக்கிருமியள் அணி வகுத்த மாதிரிப் போய் விழும். (சிலவேளை கொவிட் - 19 னின்ர வடிவம் முன்னமே இந்த வெத்திலத் துப்பல்லதான் கண்டு பிடிச்சாங்களோ ஒரு சந்தேகந்தான்) தொழில் செய்து அண்டாடம் சாப்பிட்டவைதான் காஞ்சு போகினம். அதுகும் பங்க சும்மா வேலி விராய் அடைக்க, முத்தஞ் செதுக்க வெண்டு சின்னச்சின்ன வேலையளுக்குப் போறவன் நேற்று வந்து மூக்கால அழுகிறான். " இப்ப எங்கக்கா கடைகண்ணியள மூடிப்போட்டு வீட்டோட ஆம்பிளையள் நிக்கிறதால அவையளே சின்ன வேலையளச் செய்யினம். எங்கள ஆர் கூப்பிடுறது.

> **எங்கட சின்னையாக் கிழவன் வெத்திலையச் சப்பிக் கொதகொதண்டு வாய்க்க வச்சுக் கொண்டு உதட்டுக்குமேல ஆக்காட்டி விரலையும் மோதிர விரலையும் வெச்சு அழுத்திப் புறீச் செண்டு துப்பினா பங்க ரெண்டு மீட்டருக்கங்கால போய் சின்னன் முதல் பெரிசு வரை கொரோனாக்கிருமியள் அணி வகுத்த மாதிரிப்போய் விழும்.**

இன்னுமொரு சின்னக் கதை 'காஷ்லெஸ்' உலகத்தை உருவாக்கப் போகினமாம் டிஜிட்டல்ல வங்கியப் போடட்டாம். கூகுள்ளப் 'பே'பண்ணட்டாம். ஆலோசனையள் தாறுமாறா விழுகுது. அதுசரி மீன்காரனிட்ட மீனை வாங்கிப்போட்டு கூகுள் போட ஏலுமோ. அவனுமெல்லோ கூகுள் கணக்கை வச்சிருக்க வேணும். எட எங்கட ஊரில கனசனம் போனுக்குள்ள கிண்டுதுகள் எண்டா என்ன? பெரிய்ய்ய விசியமே...வாட்ஸ்அப்பும் பேஸ்புக்கும் யூரியூப்பும்தான். கூகுள்ள கணக்கு வச்சாக் களவு குடுத்திருவம்.. இந்த முசுப்பாத்திக்கு இப்ப நேரமில்லை. வாசலுக்க மரக்கறி கொண்டாற வான்காறனிட்ட டிஜிட்டல்ல தாறனோ எண்ண, அவன் அப்பிடியே மரக்கறியளயும் டிஜிட்டல்ல வாங்கிச் சமையுங்கோவன் எண்டான். என்ன சொல்லுங்கோ நாங்கள் இன்னும் போர் ஓஞ்சாலும் போர்க்கால நெருக்கடியளுக் கால மீளயில்லை.

இண்டைக்கும் நவமணியக்காவைப்போல ஆக்கள் தான் அதிகம். பின்ன ஒன்லைனில சாப்பாடு எடுத்துச் சாப்பிடுற ஒரு விளம்பரம் ரீவியில போகுது. அம்மாக் காறி கொண்டுவந்த பெடியனுக்குக் காசு குடுத்துக் கொண்டு நிக்க, பிள்ளை போய் பெட்டியில என்ன இருக்குது எண்டு திறந்து பாக்குது. அம்மா சொல்லுறா "போய்க் குளி"எண்டு பிள்ளை ஏனெண்டு கேக்க "இந்தப் பெட்டி எங்கயெங்கயெல்லாம் போய் வருதெண்டு உனக்கு தெரியுமா" எண்டு சொல்லுறா. எனக்கெண்டா சிரிப்புத்தான் பின்ன என்னங்கோ அந்தச் சாப்பாட்டயும் கழுவிப் போட்டே தின்னப்போகினம். நா...யாவாரமும் நடக்கோணும் பழுதில்லாம எங்கட சோம்பலும் வளரவேணும்.

போனவரியம் கொரோனா துவங்கயுக்க என்ர பாடு நெருக்குவாரமாத்தான் போச்சுது. இந்தவரியம் அது அவ்வளவு பெரீசா தெரியேல்ல. என்ன பொழுது போக்கில்லாம சில பேர் கஸ்டப்படுகினம். நான் போக்கிறதுக்குப் பொழுதில்லாமக் கஸ்டப்படுறன். புத்தகமுங்கோ வாசிக்காட்டி நித்திரை வராத மனிசி, இப்ப புத்தகம் திறந்து நாலைஞ்சு நாளாகுது. அதுகும் போனுக்குள்ள தானே வாசிக்கிறன். எண்டா காசுங்கோ காசு. டிஜிட்டல்ல தட்டத்தட்ட ஜீபீ பறந்திடும் உந்தக் கணக்கை விடுங்கோ. நவமணியக்கா மனிசனத் தேடி வெளிக்கிட்டிட்டா. நான் தட்டிக்கால எட்டி அதை அவரிட்டச் சொல்லிப்போட்டன். அந்தாள் அடிச்சு விழுந்து ரோட்டுக்குப் பாஞ்சிட்டுது.

நவமணியக்கா முந்தானைத்தலைப்பை உதறிச் சொருகிக் கொண்டு நிமிர இவர்போய் கேற்றுக்க நிண்டிட்டார். "என்னப்பா எங்கை வெளிக்கிட்டிட்டாய் பங்க ஆமி நிக்கிறானப்பா போக விடான்" எண்டார். அதாவது அவா கேக்காமலே அப்ருவரா மாறிட்டார். நாங்கள் வீட்டுக்க பம்மிட்டம். ■

# தூரிகை நிழந்திச் சென்ற ஓவியம்

(13ம் பக்கத்தொடர்ச்சி)

பூக்கட்டும் பெண், சமைத்துக் கொண்டிருக்கும் பெண், வீட்டினுள் இருந்து ஜன்னல் வழியாக வேடிக்கை பார்க்கும் பெண், குழந்தையைத் தோளில் வைத்திருக்கும் பெண் என்று கிராமத்துப் பெண்களின் வாழ்க்கையை, அவர்களது வாழ்வின் சிறுசிறு கணங்களை அதன் சலனங்களை அதில் பதிவுகளாக்கினார். கிட்டத்தட்ட முப்பதுக்கும் மேற்பட்ட இவருடைய ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. இவரது ஓவியங்கள் சாதரண மனிதர்களின் முகபாவங்களை மாத்திரம் காட்சிப்படுத்தாமல் அம்மனிதர்கள் அமைந்திருக்கும் சூழலையும் இயல்பாகவே காட்சிப்படுத்தியது. அக்கண்காட்சிக்குப் பின் ஆனந்தவிகடன் அவரின் ஓவியங்களைத் தனக்குள் உள்வாங்கிக் கொண்டது.

2010முதல் இவரது ஓவியங்கள் ஆனந்தவிகடனில் இடம்பெறத் தொடங்கின. வெளிநாடுகள் முதல் தமிழகத்தின் குக்கிராமங்கள் வரை அவரை அறிமுகம் செய்து வைத்த பெருமை ஆனந்தவிகடனையே சாரும். இலங்கையிலும் பரவலாக அவர் அறியப்பட்டமைக்கு ஆனந்தவிகடனே காரணம் எனலாம். இணையத்தளத்தில் வெளியான இவரின் பெரும்பாலான ஓவியங்கள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட தமிழ் இலக்கிய நயம் தரம் 10, 11 நூலில் இடம்பெற்றுள்ளது. வாய் மொழிப்பாடல், இனிது என, விவேக சிந்தாமணி (கண்டது கெண்டையோ) முதலான பாடங்களில் இடம்பெறும் இவர் ஓவியங்கள் படைப்புக்களுக்கு உயிர் கொடுத்ததோடு அல்லாமல் தமிழ் இலக்கிய நய நூலுக்கும் புதுப்பொலிவையும் தந்தன.

தூணில் சாய்ந்தபடி இருக்கும் பெண், மண்பானையில் சமையல் செய்யும் பெண், அடுப்பூதும் பெண், பூத்தொடுக்கும் இளம்பெண், ஆடுகளை மேய்க்கும் சிறுமி, குளத்தின் படியில் அமர்ந்திருக்கும் பெண், கோவில் குளத்தில் காலை நனைக்கும் பெண், பூக்கட்டும் பெண், கையில் குழந்தையை ஏந்தியபடி சிரிக்கும் தாய், பூக்கூடையுடன் இறைவனை வணங்கியபடி இருக்கும் பெண் என இவர் வரைந்த ஓவியங்கள் ஆனந்தவிகடனுக்குப் புதுப்பொலிவைத் தந்தன. இவர் வரைந்த ஓவியங்கள் புகைப்படமா என எண்ணும் வகையில் அவை தத்துருபமாகக் காட்சியளித்தன. சாகித்திய அகடமியால் வெளியிடப்பட்ட ஜெயகாந்தனின் சிறுகதைத் தொகுப்புக்கான ஓவியங்களையும் வரைந்து புகழ் பெற்றவர்.

ஓவியம் வரைவதற்கப்பால் உலக அளவில் பல கண்காட்சிகளை நடத்தியிருக்கும் இளையராஜா, பல இடங்களில் ஓவியம் குறித்த பயிற்சிகளை வழங்கி ஓவியக் கலையில் இளைஞர்கள் முன்னேற ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர். இயக்குநர் பார்த்திபனுடான அறிமுகமும் இயக்குநர் சிம்புதேவனின் நட்பும் இவரை சினிமாவை நோக்கி நகர்த்தியது. இவர் பார்த்திபன் இயக்கிய 'இவன்' திரைப்படத்தில் உதவி இயக்குனராகப் பணியாற்றியதோடு அத்திரைப்படத்தில் சிறுவயது பார்த்திபனாகவும் நடித்துள்ளார்.

கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தின் முன்னணி இதழ்களில் தொடர்ந்து வரைந்து கொண்டிருந்த இளையராஜா, தனது ஓவியங்களுக்காகப் பல்வேறு விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறார். மத்திய கலாசார அமைச்சகத்தின் ஃபெல்லோஷிப் விருதினைப் பெற்றுக்கொண்ட இவர், அகில இந்திய ஓவியக்கண்காட்சி கர்நாடகா மாநிலத்திலும் நடந்தபோது சிறந்த ஓவியருக்கான விருதினையும் பெற்றுக் கொண்டார். சிறந்த ஓவியருக்கான தமிழ்நாடு அரசு விருது, புதிய தலைமுறை ஓவியருக்கான விருது, லலித்கலா அகாதமி விருது, 2013 அன்று விஜய் டி.வி வழங்கிய சிறந்த பத்திரிகை ஓவியர் விருது என இளையராஜாவுக்குக் கிடைத்த அங்கீகாரங்கள் மிக நீளமானவை.

இளையராஜா ஓவியங்களில் இழையோடும் உண்மைத்தன்மை, தமிழக ஓவியச் சூழலில் ரியாலிசம் ஓவியங்களுக்கான புதிய களத்தை திறந்த நிலையில் அவன் வாழ்வுக்கான முடிவுரையைக் காலன் எழுதிச்சென்றான். பெரிய ஃப்ரேமில் ஓவியங்களை வரையவேண்டும் என நினைத்த இவன் எண்ணங்கள் ஈடேறாத நிலையில் சின்ன ஃப்ரேமுக்குள் தமிழக மக்களின் வாழ்வியல் சார்ந்த வரலாற்றைக் காட்சிப்படுத்தியவன். இவனுடைய ஓவியங்கள் காலத்தால் அழியாத காயகல்பமாய் துலங்கிய நிலையில் அவன் வாழ்வு முடிவுக்கு வந்தது. வாழ்க்கையின் மையத்தை அண்மிக்க முன் அவன் மனிதவாழ்வு முடிவுற்றாலும் அவன் விட்டுச் சென்ற சாதனைகள் வரலாறாக நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ■

யாழ் சத்யா

அத்தியாயம் - 08



# அவள் அம்மாவாகிறாள்...

ஆனந்தரூபன், தாரணி தம்பதியினரின் மகன் இந்தப் பூமியில் காலடி எடுத்து வைத்து அறுபது நாட்கள் ஆகியிருந்தன. ஆனந்தரூபன் இரண்டு மாதங்கள் சம்பளமற்ற விடுப்பு எடுத்திருந்தான். "என்ன மச்சான்.. மனுசி பிள்ளை பெத்ததுக்கு நீ ஏன் லீவு எடுக்கிறாய்? என்ன நீதான் பம்பர்ஸ் மாத்துறதோ..? ஊரில உலகத்தில ஒருத்தனும் செய்யாத வேலை எல்லாம் செய்யிறாய்.. பெத்தது நீயோ.. மனுசியோ.." நண்பர்களின் நக்கல் கதைகளைக் கேட்கத் தயாரில்லை அவன். இவர்களின் நையாண்டிக்குப் பயந்து தனது குடும்பத்தின் நிம்மதியை இழக்க அவன் விரும்பவில்லை. தாரணியின் தாயாருக்கு வயோதிகம், உடல் உபாதைகள் காரணமாகப் பெரிதாக உதவ முடியவில்லை. அதனால்தான் ஆனந்தன் விடுமுறை எடுக்க முடிவெடுத்ததே. தாரணிக்கே இது பெரும் ஆச்சரியம்.

ஆனந்தரூபன் வீட்டிலேயே நிற்பதால் அக்கம்பக்கத்துப் பொம்பிளைகள் வம்பளக்க இவர்கள் வீட்டுப்படி ஏறுவதில்லை. அதுவே மிகப் பெரும் பாரம் இறங்கியது போலிருந்தது தாரணிக்கு. அவர்களின் ஆளாளுக்கொரு குழப்பமான அறிவுரைகளின்றி இவள் தாய் சொல் மட்டும் கேட்டுத் தானே இப்போது அனைத்தும் செய்யப் பழகியிருந்தாள். இப்போதெல்லாம் இரவு ஏழு மணிக்கு இவர்கள் வீட்டில் "கண்ணான கண்ணே" பாடல் கேட்கிறது என்றால் ஆனந் பிள்ளையைப் பாட்டுப் பாடித் தூங்க வைக்கிறான் என்று அர்த்தம். கடைக்குப் போய் வருவது, சமையலுக்கு உதவுவது, முற்றம் கூட்டுவது என்று அனைத்து வேலைகளிலும் உதவ ஆரம்பித்தான். தாரணியோடு அமர்ந்து அடிக்கடி பிள்ளையைப் பற்றிப் பேச ஆரம்பித்தான். கைப்பேசியிலும் சீரியலிலும் மூழ்குவதைக் குறைத்துப் பிள்ளையோடு கதை பேசி விளையாட்டுக் காட்ட ஆரம்பித்தான்.

மாறுவது என்பது அத்தனை ஒன்றும் இலகுவானதாக இருக்கவில்லை ஆனந்தரூபனுக்கு. ஆனால் மனைவியின தும் மகனதும் முகங்களைப் பார்க்கும் போது நான் வாழ் வது இவர்களுக்காகத்தானே என்ற எண்ணம் தோன்றவும் கொஞ்சம் கொஞ்சமாக கோபப்பட்டுக் கத்துவதைக் குறைத்தான். முக்கியமாகத் தாரணி எரிந்து விழுந்தாலும் தன்னைக் கட்டுப்படுத்திப் பொறுமையாக பதில் சொன்னான். ஆனந்தரூபனின் மாற்றத்தை ஆரம்பத்தில் தாரணி கவனிக்கவில்லை. ஆனால் அவன் அமைதியானதுஹம் இவள் கோபப்படுவதும் குறைந்தது. அமைதியாகப் பதில் சொல்லும்போது எப்படித் தொடர்ந்து ஆத்திரப்படுவது? பிள்ளையோடே அதிக நேரம் செலவிடும் அவன் மாற்றம் இவளைப் பெரிதும் ஆச்சரியப்படுத்தினாலும் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டாள்.

"தாரு.. இண்டைக்கு பேஸ்புக் பாத்தியா?"

"இல்லையப்பா.. ஏன்?" "ஒரு அம்மா ஆறு மாதப் பிள்ளையைப் போட்டு அடிக்கிற வீடியோ ஒண்டை எல்லாரும் செயார் பண்ணி அந்த அம்மாவைத் திட்டி ஸ்டேட்டஸ் போட்டுக் கொண்டிருக்கிறாங்கள்.. பிள்ளைக்கு நீதி கிடைக்க வேணுமாம்.. உதெல்லாம் ஒரு பொம்பிளையோ.. ராட்சசி என்று.." தாரணி பதில் கூறாது அமைதியாக மகனின் உடைகளை மடித்து வைத்துக் கொண்டிருந்தாள்.

"அந்தத் தாய் என்ன விதமான மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளாரோ தெரியவில்லை.. அவரையும் பிள்ளையையும் உரிய மனநல மருத்துவரிடம் காட்டி அந் தத் தாயின் பிரச்சினையைத் தீர்க்க முயல்வோம்.. உண்மை என்ன ஏது என்று அறியாது நாம் பேஸ்புக் போராளிகளாக போர்க்கொடி பிடித்து ஒரு தனிநபர் மீது தேவையற்ற பட்டங்கள் சுமத்துவது ஏனோ?"

"தாரு நான் இப்பிடி ஸ்டேட்டஸ் போட்டிருக்கிறன். ஒகேவா பாரு.." கணவன் சொன்னதைக் கேட்டுக் கண்கள் கலங்கின தாரணிக்கு. "நீங்கள் பேஸ்புக்ல ஒரே மினக்கெடுறது முந்தி எனக்கு அவ்வளவு கோபம் வருமப்பா. ஆனா இப்ப எல்லாம் ஒரு நாளைக்கு ஒரு தரம் போய் கொஞ்ச நேரம் பார்த்திட்டு எல் லாரும் செயார் பண்ணிறாங்கள் என்று பண்ணிட்டுப் போகா மல் இப்பிடி யோசிச்சுப் போடுறதே எனக்குப் ரொம்ப சந்தோசமாக இருக்குப்பா.

பொதுவா அம்மாக்கு என்ன கோபம், ஆதங்கம் என்றாலும் அதைத் தன்ர இரத்த உறவான பிள்ளை மேல தான் காட்ட வருது.. அது பச்சிளங்குழந்தை எண்டுறது உணர்ற நிலையில சில அம்மாமார் இல் லாம போறதுக்கு காரணம் என்ன என்று கண்டு பிடிக்க வேணும்? அதுக்குக் காரணம் என்ன என்றிட்டதை விட்டிட்டு எல்லாத்துக்கும் பொம்பிளையளையே குறை சொல்லுற சமூகம் எப்ப மாறுமோ..?"

"மாற்றம் எப்பவும் நம்மில் இருந்தே தொடங்கட்டும். ஒவ் வொருத்தனும் தானாக நினைச்சு மாறினால் தான் உண்டு. இதுகளையெல்லாம் பாத்தா வெறும் கவலை மட்டும் தான் மிஞ்சும். அதை விடு. அது சரி தாரு இண்டைக்கு மகன் பிறந்த ரெண்டாம் மாத அனிவசரியெல்லே.. மகனுக்குப் பக்கத்தில ரெண்டு என்று நம்பர் வைச்சுப் போட்டோ எடுத்து வைப்பமே.."

"ஓமப்பா.. நல்ல ஐடியா.. பொறுங்கோ அண்டைக்கு நீங்கள் வாங்கிட்டு வந்த அந்த சிவப்பு ரீசேர்ட் டைப் போடுவம்.. நான் சிவப்புத் துணி எதாவயும் ரெண்டுபோல வளைச்சு வைக்கிறன். மெத்தைக்கு அந்த மெல்லிய நீல உறையைப் போடுங்கோ.. அப்பதான் வடிவா இருக்கும்.." கணவனும் மனைவியும் மகிழ்ச்சியாக மகனது இரண்டா வது மாத பிறந்த தினத்தைக் கொண்டாடத் தயாராகினார்கள். "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே

அது நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பினிலே"

அந்த அன்னை நல்ல மனநிலையில் இருந்தால்தான் நல்லபடியாக தனது குழந்தையை வளர்த்து ஆளாக்க முடியும். அந்த அன்னையின் மனநிலையை நல்ல வகையில் வைத்திருப்பது ஒவ்வொரு குடும்பத்தினதும், சமூகத்தினதும் கடமையே. ஆனந்தரூபன் போல எல்லோரும் கொஞ்சமாவது கர்ப்ப காலங்களிலும் பிள்ளை பிறக்கும் நேரங்களிலும் மனைவிமாருக்கு உதவுவார்கள் என்றால் பெண்களுக்கு பிரசவ காலங்களில் ஏற்படும் மன அழுத்தங்களிலிருந்து விடுதலை கொடுத்து ஆரோக்கியமான ஒரு சமுதாயத்தை உருவாக்கலாம்.

**முற்றும்**

# தாழமுக்கம்

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செத்தையில் செருகியிருந்த அந்தச் சிறிய பற்பசைக் குழாயைப் பார்த்தான். எப்படிப் பிதுக்கினாலும், பசை வரவே வராது என்பது போல அது பிதுக்கப் பட்டிருந்தது.

நெற்றியில் திருநீறும், குங்குமமும் பளீரிட அவள் கேத்தலை ஆவி பறக்க இறக்கித் தேநீர் போடத் தொடங்கினாள்.

வாசலில் சைக்கிள் மணி கிலுகிலுத்தது.

இவன் எட்டிப் பார்த்தான். காய்கறிச்சுமையோடு சண்முகன் நின்றான்.

"எனக்கு அரைக் கிலோ மரவள்ளிக் கிழங்கு கொண்டந்து தர மாட்டியோ"

விடிகாலையில் இவன் போன் பண்ணியிருந்தான்.

"நேற்றே சொல்லியிருக்கலாம் தானே." அவன் குறைப்பட்டபடி இரண்டு பெரிய கிழங்குகளையும், ஒரு தேங்காயையும் இவனிடம் கொடுத்து விட்டு "ஏதும் தேவையெண்டால் சொல்லு. அவளைப் பட்டினி போடாதை" என்று கூறிக் கொண்டு நகர்ந்தான்.

இவனுக்குக் கேட்க மனமில்லை. ஒரு காலமும் இப்படி அடுத்தவரிடம் இரந்த நிலை இவனுக்கு வந்ததில்லை. பட்டினி கிடந்ததுண்டு. ஆனால் "பசிக்குது" என்று மற்றவர்களிடம் கை நீட்டியதில்லை.

உள்ளே ராகினியிடம் மரவள்ளிக் கிழங்குகளையும், தேங்காயையும் கொடுத்த போது சட்டென்று அவள் முகம் விகசித்தது. அவற்றை ஒரு பக்கத்தில் வைத்து விட்டுத் தேநீர்க் குவளைகளோடு வாசலுக்கு வந்தாள்

அது அவர்களுக்கு ஒரு வழக்கம். அந்த வாசல் குந்தில் அமர்ந்து தேநீர் அருந்துவது, எப்போதும் விடியற்காலையை உற்சாகமாக ஆரம்பிக்கும்.

"இண்டையைப் பாட்டை ஒரு மாதிரி சமாளிச்சுப் போடலாம்" என்றவாறே அவனிடம் தேநீரை நீட்டி விட்டுத் தன் குவளையோடு அவளும் அவன் அருகே அமர்ந்தாள். அவன் அவளது நெற்றியை வருடி விட்டான். இந்தச் சில மாதங்களாக அவள் நெற்றியில் இட்டுக் கொள்கிற குங்குமம் அவளுக்குப் புது சோபையைத் தருவது போலிருந்தது. சற்றே மெலிந்திருக்கிறாள்.

கல்யாணம் முடித்த புதிதில் உடலில் ஏற்பட்ட பூரிப்பு இந்தச் சில நாள்களில் வற்றிக் கொண்டு வருகிறது.

லேசாய் காற்று வீசத் தொடங்கியது.

"மழை வரும் போலை கிடக்கு" அவள் அவனை நெருங்கி உட்கார்ந்தாள்.

திடீரென்று தாழமுக்கம் ஒன்று ஏற்பட்டிருப்பதாகவும் நாட்டில் பரவலாக மழை பெய்யக்கூடும் என்றும், வடகிழக்குக் கரையோரங்களில் பலத்த காற்று வீசக் கூடுமென்றும் நேற்றிரவு செய்தியில் கேட்டது இவனுக்கு நினைவில் தெறித்தது.

மழை வந்தால், இந்த முற்றத்தில் வெள்ளம் தேங்கக் கூடும். அது அவளுக்கு இன்னும் அசௌகரியத்தை ஏற்படுத்தும் எனும் பயம் அவனுக்கு வந்தது. காற்றடித்தால் வீட்டுக் கூரை சில வேளை நிற்காமல் பறந்து விடக் கூடும். அவன் மனம் பதறிக் கொண்டிருந்த வேளையில் சில்லென்ற தூறல் முற்றத்தில் விழுந்தது.

அவள் மேலும் அவனை நெருங்கி உட்கார்ந்து ஒவ்வொரு மிடறாகத் தேநீரை உறிஞ்சிக் கொண்டு மழையை வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள்.

சடசடவென்று தூறல்கள் வேகமாக, மண் வாசமுறத் தொடங்கியது.

அவனுக்கோ தேநீரின் ருசியையும், அவளின் நெருக்கத்தையும் அனுபவிக்க முடியாமல் மனம் தடுமாறிக் கொண்டிருந்தது.

சற்று நேரத்திற்குள் மழையின் சிரிப்பான நீர்த் துளிகள் முகத்தில் தெறிக்க காற்றில் குளிர் கூடத் தொடங்கியது. அவள் அவனது தோள்களைக் கட்டிக் கொண்டாள். அலைகள் எழுவது போல் பெருஞ்சத்தம். தூரத்தே முழங்கியிருக்க வேண்டும்.

"எங்கையோ நல்ல மழை கொட்டுது." அவன் முணுமுணுத்தான்.

இரவு குளிர் கூடினால், ஆன போர்வை இல்லாமல் அவள் குளிரில் கொடுகப் போகிறாளே, எனத் தோன்றியது.

தூரத்தே எங்கோ மரங்கள் பொறியும் சத்தம் கேட்டது.

"எங்கையோ மரங்கள் முறியுது. எழும்பி உள்ளுக்கு வாங்கோ" அவள் சொல்லிக் கொண்டே உள்ளே போய் மரவள்ளிக் கிழங்குகளைத் துண்டுகளாக்கித் தோலுரிக்கத் தொடங்கினாள்.

இவன் எழும்பவில்லை. அப்படியே உட்கார்ந்திருந்தான்.

வேலையற்று வீட்டுக்குள்ளேயே முடக்கப்பட்டிருப்பது ஒரு பக்கமிருக்க இப்படி இயற்கையும் கூடச் சேர்ந்து வஞ்சிப்பதை அவனால் தாங்க முடியவில்லை.

முற்றத்தில் நீர் சேர்ந்து வெள்ளமாகுவதற்கு முன் அதனைத் தடுப்பவன் போல வாசல் குந்திலேயே அமர்ந்திருந்தான்.

"உப்பிடியே எவ்வளவு நேரம் தான் உதிலை இருப்பீங்கள். வந்து சாப்பிடுங்கோ" ராகினியின் குரல் கேட்ட போதும் எழும்ப மனமிருக்கவில்லை. இவன் போகா விட்டால், அவள் சாப்பிட மாட்டாள் என்பதற்காக எழுந்தான்.

அவள் மாவாய்க் கரைந்து அவிந்த மரவள்ளிக் கிழங்குகளோடு, தேங்காய்த் துண்டுகளையும் கொண்டு வந்தாள். பசித்த வயிற்றுக்கு அமிர்தம் போல் உணவு. சாப்பிடும் போது நினைத்துக் கொண்டான்,"லொக்டவுன் முடிய அவளுக்கு ஒரு மண்ணெண்ணெய் குக்கராவது வாங்கிக் குடுக்க வேணும்."

அவள் இன்னுமொரு துண்டு மரவள்ளிக் கிழங்கை அவன் தட்டில் எடுத்து வைத்த போது, ஒழுங்கையால் சேந்தன் கத்திக் கொண்டு வந்தான்.

"பனை தறிக்கிறதுக்கு ஆக்கள் வேணும், ஆரும் வருவீங்களோ எண்டு தேவேந்திரம் அண்ணை கேட்டு வரச் சொன்னவர்"

இவன் கையை உதறிக் கொண்டு வெளியே வந்தான்.

"என்ன தம்பி...?"

"தேவேந்திரம் அண்ணை வீட்டை நாலைஞ்சு பனை, பேயாட்டம் ஆடுது. விதானையார் அதை உடனை வெட்டச் சொல்லிப் போட்டார். தேவேந்திரம் அண்ணை அதுக்குத் தான் ஆள் தேடுறார்."

"நான் வாறன்..." இவன் பூவரச மரத்தடி வாளியில் நீர் மொண்டு கைகளைக் கழுவினான்.

"சாப்பிட்டிட்டுப் போங்கோவனப்பா" ராகினியின் குரல் அவனை இழுக்கத் திரும்பிப் பார்த்தான்.

"நீர் சாப்பிடும். நான் வரேக்கை அரிசி வாங்கி வாறன். நாளைக்கு இறாலோடை தான் சாப்பாடு."

அதற்கு மேல் அவன் அங்கு நிற்கவில்லை.

எந்தத் தாழமுக்கம் வந்தாலென்ன என்பது போல அவன் உறுதியோடு நடக்க ஆரம்பித்தான். ■

# ஸ்டாலினின் அரசியல் எத்தனை காலம்?

கம்சனா

தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் நீண்டகாலப் போராட்டங்களைத் தொடர்ந்து இம்முறை திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றுள்ளது. மறைந்த முன்னாள் தமிழ் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இருந்த காலத்தில் அவரது செல்வாக்கு தமிழ் நாட்டில் நிலைத்திருந்தது. அத்தகைய செல்வாக்கினை மீறி 2016 ஆம் ஆண்டுக்கு பின் தி.மு.க வினால் அரசியல் நகர்வினை மேற்கொள்ள முடியாமல் இருந்தது மட்டும் அல்ல, அப்படி ஒரு கட்சி தமிழ் நாட்டில் இருந்ததற்கான அடையாளம் இல்லாமல் போய்விடக் கூடிய சூழலும் நிலவி வந்திருந்தமை வெளிப்படையான விடயம். இதற்குக் காரணம் தி.மு.க தங்களுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டு மக்கள் தொடர்பிலும் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பிலும் கையாண்டு வந்த தவறான அணுகுமுறையே ஆகும். இந்த அணுகுமுறையே தமிழ் நாட்டின் ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்துவற்கு அடிப்படையாக அமைந்தது என்பதனைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக ஆட்சியைக் கைப்பற்றியதனைத் தொடர்ந்து தமது கடந்த காலத்து அரசியல் அனுபவத்தின் வழியாக ஜெயலலிதா அவர்கள் பெற்ற படிப்பினைகளை அவதானமாக ஆராய்ந்து ஆட்சியினை நடத்திச் சென்றதோடு பல நலத் திட்டங்களையும் உருவாக்கி செயற்படுத்தி வந்தார். இதன் பலனாக அவர் தமிழ் நாட்டு மக்களின் மனதில் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடியவராக மாறினார். ஆனால் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின் அ.தி.முகவும் பொருத்தமான தலைமை இல்லாமல் திண்டாடத் தொடங்கியது. இவ் இடைவெளிகளைப் பயன்படுத்தி தமிழ் நாட்டில் புதிய கட்சிகள் தோற்றம் பெறத் தொடங்கின. குறிப்பாக சீமானின் நாம் தமிழர் கட்சி, கமல்ஹாசனின் மக்கள் நீதிமய்யக் கட்சி போன்றவற்றினைக் குறிப்பிடலாம். இத்தகைய இக்கட்டான சூழல் மு.க.ஸ்டாலினை புடம் போட்டது மட்டுல்லாது தங்களினது கடந்த காலத் தவறுகளையும் மீள் பரிசீலனை செய்து இயங்கவேண்டிய சூழலுக்கு இட்டுச் சென்றது. இது அவரை அவதானமாகச் செயற்படுத்த வைத்தது மட்டுமல்லாமல் தன்னை ஒரு ஆளுமை மிக்கவராக வளர்த்தெடுக்க வேண்டிய தேவையினையும் ஏற்படுத்தியிருந்தது. அதன் தொடர்ச்சியான செயற்பாடுகள் தமிழக ஆட்சியினைக் கைப்பற்றக்கூடிய சாத்தியத்தினையும் வழங்கியிருக்கிறது.

முதலமைச்சராகப் பதவி ஏற்றதிலிருந்து தொடர்ந்து அவரின் செயற்பாடுகள் அனைத்தும் தமிழகத்தில் வேறுபட்ட அரசியல் தலைமை தோன்றியிருப்பதான தோரணையினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தத் தொடங்கியிருக்கிறது. அவருடைய தற்கால அரசியல் முன்னகர்வு உண்மையில் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டதா?, ஆரம்பத்தில் வரும் தலைவர்களின் வழமையான செயற்பாடு தானா? அல்லது வெறும் கபடநாடகம் தானா என்பதைக் காலம்தான் கூற வேண்டும்.





எனினும் ஸ்டாலினுடைய அரசியல் தற்போதைய அரசியல் நகர்வு ஆரோக்கியமாக இருப்பதாக பொதுவான அபிப்பிராயம் இருந்தாலும் அண்மையில் டாஸ்மார்க் கடைகள் திறக்கப்பட்டதன் பின்னணி சற்று விமர்சனத்தினை ஏற்படுத்துவதாக இருக்கிறது. இதன் எதிர்வினைகள் தோன்ற சற்றுக் கால தாமதம் எடுக்கும் என்றாலும் தமிழ் நாட்டினை முன்னேற்றக் கூடிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதோடு ஏனைய காட்சியினரையும் இணைத்துக் கொண்டு மக்கள் தொடர்பில் சிந்திப்பது ஆரோக்கியமான போக்காகவே அமைகின்றது. அறிஞர் அண்ணாவுக்குப்பின் இதுவரையிலும் எவரும் முன்னெடுக்காத இப்போக்கானது எதிர்காலத்தில் தமிழகத்தின் முன்னேற்றத்திற்கும் மக்களின் வாழ்வுக்கும் உறுதுணையாக இருக்கும் என நம்பலாம் போலவே தெரிகிறது.

ஸ்டாலினுடைய அரசியல் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களில் முக்கியமானவையாக, இதுவரை காலமும் புதிதாக பொறுப்பேற்கும் எந்தவொரு அரசும் தனக்கு முன் ஆட்சியிலிருந்தவர்கள் கொண்டு வரும் திட்டங்களைப் புறக்கணிப்பது / திட்டங்களின் பெயர்களை மாற்றுவதை நோக்காகக் கொண்டே செயற்பட்டு வந்திருக்கின்றது. ஆனால் ஸ்டாலின் அரசாங்கத்தில் அ.தி.மு.கவின் அம்மா உணவகம், கல்வித் தொலைக் காட்சி போன்ற எந்தத் திட்டத்தையும் முடக்கவும் இல்லை பெயர் மாற்றவும் இல்லை.

எதிர்க்கட்சியாக தி.மு.க இருந்தபோது சட்டசபையில் அதிகம் பேசியதை விட ஊடகங்களிடம் பேசியதே அதிகம் எனலாம். அதிகளவான சந்தர்ப்பங்களில் வெளிநட்பையே மேற்கொண்டவர்கள்,ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் போக்கு காணப்படுகின்றது. முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி, ஸ்டாலின் முதல்வரானதற்கு வாழ்த்துத் தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலளித்த ஸ்டாலின் 'தமிழகத்தை உருவாக்க உங்கள் ஆலோசனை, ஒத்துழைப்பு தேவை' என்றார். தனது பதவி விழாவின் போது ஓ.பன்னீர்ச்செல்வத்தை முதல் வரிசையில் அமர்த்தியிருந்தார். ஆனால் பன்னீர்ச்செல்வத்தின் பதவி விழாவில் ஸ்டாலின் இறுதியில் அமர்த்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. அதேபோல தேர்தல் பிரச்சாரங்களின் போது தன்னைக் கடுமையாக விமர்சித்து வந்த நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமானின் தந்தையார் இறந்தபோது உங்களுடன் நான் இருக்கின்றேன் என்று சொன்னமை, பேரறிவாளனுக்கு ஒரு மாதகால பிணைவழங்கி, நீங்கள் என்ன உணர்வுடன் இருக்கின்றீர்களோ அதே உணர்வுடன்தான் நானும் இருக்கின் றேன் என அற்புதம்மாளுக்குச் சொன்னமை போன்றவை பெருந்தன்மை, போற்றுதற்குரியது.

இவை தவிர, நெருக்கடிக் காலப்பகுதியான கொவிட்-19 பொதுமுடக்கத்தின் போது தடுப்பு முயற்சிகள் மற்றும் பொதுவிநியோகத் திட்டம் மூலம் நிவாரணம் விநியோகித்தமை, தனியார் மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை பெற்றவர்களுக்கான காப்பீட்டுத்திட்டம் வழங்க அனுபவம் வாய்ந்த மற்றும் புதுமுக இளம் அமைச்சர்களைத் தேர்வு செய்து பணியில் ஈடுபடுத்தி வருகின்றமை, இடர்கால நிலையினைக் கருத்தில் கொண்டு தானே களத்தில் இறங்கிச் செயற்பட்டு வருகின்றமை, தனது கட்சி சார்ந்தவர்களை ஏனைய கட்சிகளுடன் நாகரிகமாக நடந்துகொள்வதன் அவசியத்தை வலியுறுத்திவருகின்றமை, நாகரிகம் அற்று நடந்தவர்களை கட்சியிலிருந்து நீக்கியமை, பேரறிவாளனுக்கு ஒருமாதகால பிணைவழங்கியமை போன்ற துணிச்சலான செயற்பாடுகளைக் கூறிக் கொண்டே போகலாம்.

இவ்வாறான இவரின் மாறுபட்டபோக்கு மக்களின் நலன் சார்ந்ததா?, தனது இருப்பைத் தக்கவைப்பதற்கான திட்டமிட்ட செயற்பாடா?, தொடர்ந்து வாரிசு அரசியலை முன்னெடுப்பதற்குரிய சுயநலம் சார்ந்த செயற்பாடா?, இல்லாது போனால் வழமையாக கிராமத்தில் சொல்லப்படுவது போல புது விளக்குமாறு நன்றாகக் கூட்டும் என்பதற்கு ஒப்பானதா? என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். என்ன இருந்தாலும் தமிழகத்தில் மாற்று அரசியலின் தேவை உணரப்பட்டுள்ளது என்பதே பெரியதொரு விடயம்தான். ■

# எழுதாத விதி

-ந.குகபரன்-

"மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்று முழங்கிய பாரதி மறைந்து நூற்றாண்டுகள் உருண்டோடிவிட்டன. காலங்காலமாக பெண்கள் எதிர்கொண்டுவரும் அடக்குமுறைகளுக்கு எதிரான குரல் சமூகக் களத்தில் ஏதோ ஒரு மூலையில் ஒலித்தபடிதானுள்ளது. வரலாற்றுப் பாதையில் குறிப்பிடத்தக்க ஆரோக்கியமான மாற்றங்கள் பல நிகழ்ந்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. ஆயினும் குடும்பத்தில், பொதுவெளியில் பெண்களுக்கெதிரான சுரண்டல் பல்வேறு வழிகளில் தொடர்ந்தபடியே உள்ளதென்பதுதான் வெளிப்படை.

பெண்ணின் பெருமையும் அடையாளமும் ஆண்களை மையப்படுத்தியே கட்டமைக்கப்பட்டுள்ள சமூகக் களத்தில், பிறந்ததில் இருந்து இந்த வேறுபாடும் சேர்த்தே வளர்க்கப்படுகிறது. இதில் பெண்களுக்கும் பங்கு உண்டு. பெண்கள் தொடர்பான ஒடுக்குமுறையின் கூர்மையான முகம் கணவனை இழந்த பெண்ணை அணுகும் பாங்கில் அதிகம் வெளிப்படுகிறது. கணவனை இழந்த துன்பம் ஒருபுறம் தொடர பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஒடுக்கப்பட்டும் ஒடுங்கியும் வாழ நிர்ப்பந்திக்கப்படும் நிலை எழுதாத விதியாக நீள்கிறது.

தமிழ்ச்சமூகம் ஒரு பெரும்போரைக் கடந்துவந்துள்ள நிலையில் விதவைகள் எதிர்கொள்ளும் துயரங்கள் சொற்களுள் அடக்கிவிடமுடியாதவை. இந்த அவலத்தின் உச்சத்தை ஈராயிரம் வருடங்களுக்கு முன்னர் எழுந்த புறநானூற்றில் வரும் பெருங்கோப் பெண்டின் குரலில் கேட்கமுடியும். பாண்டியன் இறந்த சூழலில் மனைவி பெருங்கோப்பெண்டுக்கு முன்னிருந்த தெரிவுகள் இரண்டுதான். ஒன்று தீயில் பாய்ந்து உயிரை மாய்ப்பது, மற்றையது தன்னை வருத்தி கைம்மைநோன்பு நோற்பது.


அவள் மனம் சாவை அவாவுகிறது. தீயில் புகுவதைத் தவிர்க்குமாறு சான்றோர் பலர் வேண்டுகின்றனர். அவர்களுக்கு அவள் பதிலிறுக்கிறாள். எத்தகைய தெளிவான மொழி. சமூகத்தில் புரையோடிப் போயிருந்த புன்மைகளை வெளிச்சமிடும் வார்த்தைகள். முகத்துக்கு நேரே உண்மையை அறைகிறாள். "பல்சான்றீரே பல்சான்றீரே" என விளித்துரைக்கும் பாடல் ,இதுதான்.

"பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் செல்லாது ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடை இடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்எள் சாந்தொடு புளிப்பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி ஆகப்
பரல்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவல் பெண்டிரேம் அல்லேம் மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கு அரிது ஆகுக தில்ல எமக்குஎம்
பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்புஅற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயும்ஓ ரற்றே."

மாற்றத்தை ஏற்படுத்தும் ஆற்றல்மிக்கவர்களில் சான்றோர் முக்கியமானவர். சமூகப் பொறுப்போடு செயற்படவேண்டியவர்கள். தீயில் புகவேண்டாம் என்று பெண்ணை மறிக்கும் அவர்கள் அந்த சமூகத்தில் விதவைப் பெண்கள் எதிர்கொள்ளும் அவலங்கள், நெருக்கீடுகள் பற்றி கருத்திற்கொள்ளவில்லை. அந்த ஆதங்கமே அப்பெண்ணை இவ்வாறு பேசவைத்துள்ளது. "பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே" என்கிறாள். சாக விடாது தடுப்பது சூழ்ச்சியான செயலென அவள் உணர்கிறாள். கணவனின் பெரும் பிரிவு ஒருபுறம் வருத்த அதைக்காட்டிலும் கைம்மைக்கொடுமைகளே அவளை அச்சுறுத்தியுள்ளன. சாகத்தூண்டியுள்ளன.

விதவைப்பெண் உண்பதற்கு உரிய உணவு எது என அவள் உரைக்கிறாள். அது எத்தகையது? அணிலின் உடல்வரியாய் வளைந்த வெள்ளரிக்காயின் விதை போன்ற நெய்யற்ற சோறும் எள் அரைத்த துவையலும் புளியும் சேர்ந்த உணவு அது. உணர்ச்சிகளை மரக்கச் செய்து உயிரோடு இருப்பதற்கான உணவு. வயிற்றின் கொதிப்பை அடக்குவதற்கு அவர்கள் கண்ட வழி. ஆனால் மனதின் கொதிப்பை என்ன செய்துவிட முடியும்.

கணவனை இழந்தவள் நிம்மதியாக படுப்பதற்குக் கூட அனுமதிக்கப்படவில்லை. பெருங்கோப்பெண்டு அதை இவ்வாறு விளக்குகிறாள். பருக்கைக் கற்கள் பரப்பிய படுக்கை. ஒவ்வொரு நிமிடமும் நரகமாகக் கழிக்கும் தண்டனை. இதையே அன்றைய சமூகம் விதவைக்கு பரிசளித்தது. இப்படி வாழ்வதை விட தீயில் புகுந்து மாய்வது சிறந்தது என அவள் எண்ணியதில் என்ன பிழையிருக்கமுடியும்.



ஈமம் உங்களுக்கு அச்சந்தருவதாக இருக்கலாம். ஆனால் கணவனை இழந்த எமக்கு "வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை நள்ளிரும் பொய்கையும் தீயும்ஓ ரற்றே." என்கிறாள். மொட்டலர்ந்த தாமரை நிறைந்த குளிர்ச்சியான பொய்கையும் தீயும் அவளுக்கு ஒன்றாகவே தெரிகிறது. சமூகம் கொடுக்கும் வாழ்க்கைக் கொடுமைகளை ஏற்கத் தயாரற்றவளாக சாவை அணைக்கத் துணிவுகொள்கிறாள்.

கணவனின் மறைவோடு பெண்ணின் வாழ்வு முடிவெய்துவதாகக் கருதிய ஆதிக்க மனநிலையின் வெளிப்பாடே பெண்ணைத் தீயுள் புகுந்து சாவதைத் தூண்டியுள்ளது. துயருற்ற பெண்களுக்கு நம்பிக்கை ஊட்டி அவர்தம் வாழ்வை வலுப்படுத்தத் துணைநிற்க வேண்டிய சமூகம் அவர்களுக்கு வசைகளையும் வாதைகளையும் கொடுத்து விலங்கிட்ட அவலம் அன்றிலிருந்து இன்று வரை ஏதோ ஒருவழியில் தொடர்ந்தபடியே உள்ளது.

புறநானூற்றில் இன்னொரு காட்சி. இரவலரை உபசரித்து மகிழ்ந்திருந்த வீடு தலைவன் மறைந்த பிறகு பொலிவிழந்து இருக்கிறது. விதவையான அப்பெண்ணின் கோலம் புலவரை வாட்டியுள்ளது. "கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி" அல்லி அரிசி உணவை உண்ணும் அப்பெண்ணை கண்முன்நிறுத்துகிறார்.

இவ்வாறு விரியும் காட்சிகள் கடந்து வந்த பாதையில் பெண்கள் எதிர்கொண்ட வலிநிறைந்த பக்கங்களைக் கூறியவண்ணமே உள்ளன. சிந்திப்பதற்கும் செயற்படுவதற்குமான ஆயிரம் விடயங்களைப் பகிர்கின்றன. வலிகளுக்கு மருந்தாகின்றன. ஆயிரம் வழிகளைத் திறந்துவிடுகின்றன. ■

# சதுரங்க ஆட்டப் புனைவு அனுபவம்

## “Cold eyes”

அபூர்வன்

அகலித்த அனுபவங்களைச் சுவறச் செய்கின்ற தரமான திரைப்படங்கள் பலவற்றைக் கொரிய சினிமாவானது உலகிற்கு வழங்கியுள்ளது. அதேவேளை மர்ம முடிச்சிய நகரும் படிமங்களாலும் பெருந்திரளான பார்வையாளர்களை ஈர்த்து வருகின்றது. இயக்குநர் Jo- ui - Seok அவர்களின் உருவாக்கத்தில் வெளியான அதிரடி மர்மத் திரைப்படமான “ Cold eyes” விறுவிறுப்புக் குறையாத காட்சிக்கோவைகளால் பின்னப்பட்டுள்ளது. சினிமா மொழியை உணர்ந்து காட்சிகளை வடிவமைத்த பண்பால், வணிக சினிமாவாக அமைந்தாலும் கொண்டாட்டத்திற்குரிய படைப்பாக மாறியுள்ளது. மேதைமை மிகுந்த திருட்டுக் குழுமத்திற்கும் சமாந்திர மேதைமை மிகுந்த புலனாய்வுக் குழுமத்திற்கும் இடையே நிகழும் சதுரங்க ஆட்டம் போலத் திரைக்கதை வடிவமைக்கப்பட்டுள்ளது. வங்கியில் கொள்ளையடித்தல், கோப்புக்களைக் கைப்பற்றுதல் போன்றவற்றினை மிக நுட்பமாகச் செய்து முடிக்கும் எதிர்மறை நாயகனைப் புலனாய்வுக் குழுமத்தினர் எவ்வாறு வெற்றி கொள்கின்றனர் என்பதை விறுவிறுப்போடு திரைப்படம் வெளிப்படுத்துகின்றது. படம் ஆரம்பித்து 20 நிமிடங்களுக்குப் பின்னரே தலைப்பு திரையிலே தோன்றுகிறது. அது வரையான நிகழ்வுகள் திரைச் சுவையினை ஈர்க்கும் வகையிலே வெளிப்படுத்தப்பட்டுள்ளன.



Shin - Min - Kyung அவர்களின் படத்தொகுப்பு விதந்து குறிப்பிடத்தக்கது. திரைக்கதையின் துரிதத்திற்கும், புதுமையான அனுபவத் தொற்றலுக்கும் படத் தொகுப்புத் துணை செய்கின்றது. ஒளிப்பதிவும் பின்னணி இசையும் அதிரடி மர்மத் திரைப்படத்திற்கு ஏற்ற வகையிலே அமைந்துள்ளன. பறவைக் கோணம் (Bird view) உட்பட பன்முக நோக்கிலான காட்சிகள் அற்புதமாக அதிர்வினை ஏற்படுத்துகின்றன. ஒவ்வொரு கதாபாத்திரத்தின் அளிக்கையும் மிகச் சிறப்பாக உள்ளது. நாயகியும் எதிர்மறை நாயகனும் நடிப்பிலே அதிகம் ஈர்க்கின்றனர். மொத்தத்திலே தரமான மர்ம அதிரடித் திரைப்படமொன்றினைப் பார்த்த திருப்தியினைத் தருகின்றது. ■




---


வெ.அருட்குமரன்

# அதிர்புனைவாக்க அகில சினிமா

இந்தவார அதிர்புனைவாக்க அகில சினிமாவில் வித்தியாசமான கதைக்களம் கொண்ட “The Da Vinci Code” என்ற ஆங்கிலத் திரைப்படம் பற்றி நோக்குவோம். “The Da Vinci Code” என்ற ஆங்கிலத் திரைப்படம் 2006-ஆம் ஆண்டு வெளியானது, இது 2003-ஆம் ஆண்டில் டான் பிரவுன் என்பவர் எழுதி வெளியிட்ட “The Da Vinci Code” என்ற புதினத்தைத் தழுவி எடுக்கப்பட்டது. “தனது புதினத்தின் கதை புனையப்பட்டது தான், ஆனால் புதினத்தில் கூறப்பட்ட அனைத்துக் கருத்துகளும் பிரபல ஓவியர் லியோனார்டோ டா வின்சியின் ஓவியங்களின் மறைகுறிப்புகளைக் கொண்டு நிருபணம் செய்கிறேன், அவை உண்மை தான்” எனவும் கூறுகிறார். அந்த இரகசியங்களை ஓவியங்களில் மறைகுறியாக வெளிப்படுத்தியதற்கான காரணம், அக்கால ஆட்சியாளர்களிடம் இருந்து தப்பிப்பதற்காகத் தான் என்பது நமக்கு வெளிப்படுகிறது.

**நம்பிக்கையும் புனையப்பட்டவையும்:**

இயேசு என்பவர் மனித உருவத்தில் பிறந்த கடவுள், அவர் பல அற்புதங்களை நிகழ்த்தினார், மக்களுக்கு பல நன்மைகளைச் செய்தார். அவரால் தங்களின் ஆட்சிக்கு ஆபத்து நிகழ்ந்து விடக் கூடாது என எண்ணி, அவரை வெறுத்த ரோமானியர்கள் அவரைச் சிலுவையில் அறைந்தனர், இறந்த அவர் மூன்றாம் நாளில் உயிர்த் தெழுந்தார் என புனித பைபிளில் கூறப்பட்டிருந்தன. அதைத்தான் மக்களும் பின்பற்றி இயேசுவை, இவ்வளவு காலமாகக் கடவுளாக வணங்குகின்றனர். ஆனால், இத் திரைப்படத்தில் அந்த இரகசியமாக உவமைப் படுத்துகின்றார், டாவின்சி, அதை “v” வடிவத்துடன் ஒப்பிடுகிறார். அக்காலத்தில், ஆண்களை உணர்த்த “^” என்னும் குறியீடும், பெண்களை உணர்த்த “v” என்னும் குறியீடும் பயன்படுத்தப்பட்டன, இது பெண்ணின் கருப்பை போன்ற வடிவத்தில் இருக்கிறது. இவ்வோவியத்தில், நம் பார்வையில், இயேசுவின் இடப்புறத்தில் இருப்பவர் ஆணல்ல, அவர் ஒரு பெண் எனவும், கழுத்தில் நகை அணிந்த அவர் தான் மேரி மேக்தலின் எனவும் வெளிப்படுத்துகிறார். மேலும், இயேசு மற்றும் மேரி மேக்தலின் அணிந்திருக்கும் உடைகள் ஒரே மாதிரியான வண்ணத்தில் இருக்கின்றன. இருவருக்கும் இடையே, “v” என்னும் வடிவத்தில் இடைவெளி இருக்கும். மேரி மேக்தலினை இயேசுவின் வலப்புறமாக வைத்துப் பார்த்தால் இயேசுவின் தோளில் சாய்ந்திருப்பது போல இருக்கும். எனவே, இருவரும் கணவன் மனைவி தான், என்பதையும் மற்ற பிற இரகசியங்களை மறைகுறியாக லியோனார்டோ டாவின்சி வரைந்திருக்கிறார்.




இத்திரைப்படத்தின் தலைப்பில் கூட “^” மற்றும் “v” என்ற குறியீடுகள் இருக்கும்.

ராபர்ட் லேங்டன் மற்றும் சோபி, தாங்கள் கண்டு பிடித்த குறியீடுகள் மூலமாக ஒவ்வொரு இடத்தை அடைகின்றனர். இறுதியாக, ஒரு தேவாலயத்தை அடைகின்றனர். அங்குதான், அவர்கள் தேடி வந்த இரகசியம் இருப்பதாக அவர்கள் அறிகின்றனர், ஆனால் அவர்கள் அதைப் பார்க்கவில்லை. இவ்வேளையில் அவர்களின் பேச்சினை ஒட்டுக் கேட்ட ஒருவர், மற்றவர்களை அழைக்கிறார். அவர்கள் “The Priory of Sion”-ஐ சேர்ந்தவர்கள். அனைவரும் வந்ததும் தான், முழு உண்மையும் அவர்களுக்குப் புலப்படுகிறது. சோபி தான் இயேசு மற்றும் மேரி மேக்தலினின் வம்சாவளி எனக் கூறுகின்றனர். சானியர் இவரை தனது பேர்த்தி போல பார்த்துக்(பாதுகாத்துக்) கொண்டார் என்பது வெளிப்பட்டது.

அவர்கள் பார்க்காத மேரி மேக்தலினும் கல்லறையும் அங்குதான் மறைத்து வைக்கப் பட்டிருக்கிறது.

அனைவரும் உண்மையை உணர்ந்ததாய் மகிழ்ந்ததும், மேலும் சில ரகசியங்கள் தொடர்கிறது. சானியர் நிர்வகித்து வந்த அந்த அருங்காட்சியகத்தில் கூட அந்தக் குறியீடுகள் இருந்தன.

“The Da Vinci Code” என்னும் புதினம் மற்றும் திரைப்படத்தில் கூறப் பட்டவை அனைத்தும் லியோனார்டோ டா வின்சி ஓவியங்களில் இருந்த மறைகுறிப்புகளைத்தான் ஆதாரமாகக் காட்டுகின்றார். மேலும் அவை இரண்டாயிரம் கால நம்பிக்கையை பொய்யாக்குகிறது என்ற காரணத்தால் பயங்கரமான எதிர்ப்பு கிளம்பியது. இவற்றை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு, மேரி மேக்தலின் கதையை உண்மையென நம்புவது சற்றுக் கடினம் தான்.

இவை உண்மையாக இருக்கும் பட்சத்தில், அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ள முடிந்ததாக இருக்க வேண்டும். ■

இயேசுவின் 12 சீடர்களில் ஒருவர் பெண் என்றும், அவரின் பெயர் “மேரி மேக்தலின்” எனவும் கூறுகின்றனர். மேலும், இயேசு சாதாரண மனிதர்தான், இயேசுவைச் சிலுவையில் அறைந்த பொழுது, மேரி மேக்தலின் இயேசுவின் வாரிசைத் தன் கருப்பையில் சுமந்து கொண்டிருந்தார் எனவும் கூறுகின்றனர். மேரி மேக்தலினையும், அவரின் குழந்தையையும் பற்றிய இரகசியம் தான் இத்திரைப்படத்தின் மூலக்கரு.

**திரைக்கதை:**

"Opus Dei" என்னும் கத்தோலிக்க அமைப்பு, இயேசுவின் இறப்பிற்கு பின், ரோம் நகரில் நிகழ்ந்த மதக் கலவரத்தினால், இனி நாம் பேகன் மதத்தை விடுத்து கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுவதாக அறிவித்தனர். மதத்தின் கருத்துகளை உலகிற்குப் பரப்ப Opus Dei நிறுவப்பட்டதாகத் தோன்றியது. ஆனால், அவர்கள் மேரி மேக்தலின் பற்றிய இரகசியங் களை அழிப்பதற்காகவும் போராடுகின்றனர். இவ்வேளை யில், “The Priory of Sion” என்னும் இரகசிய அமைப்பு, மேரி மேக்தலின் பற்றிய இரகசியத்தையும், அவரின் வம்சாவளியைப் பாதுகாக்கவும் போராடுகின்றனர்.

சானியர் என்பவர் “The Priory of Sion” என்னும் இரகசிய அமைப்பில் இருக்கிறார், ஒரு அருங்காட்சியகத்தை நிர்வகிக்கிறார், அவரின் பேர்த்தி சோபி என அழைக்கப்படுகிறார், இவர் ஒரு மறைகுறியாக்க நிபுணர் (Cryptologist). Opus Dei-ஐ சேர்ந்த ஒருவர் சானியரிடம் அந்த ரகசியத்தைப் பற்றிக் கேட்கிறார், அவர் கூறாததால் அவரைக் கொன்றுவிடுகிறார். சானியர் இறப்பதற்கு முன், சில குறியீடுகளை விட்டுச் செல்கிறார். அவற்றில், ராபர்ட் லேங்டன் என்பவரின் பெயரைக் குறிப்பிட்டிருந்தார். ராபர்ட் லேங்டன் ஒரு குறியீட்டு நிபுணர் (Symbologist). எனவே, அவரை பொலீசார் அருங்காட்சியகத்துக்கு வரவழைத்தனர். பொலீசார், லேங்டன் தான் குற்றவாளி என சித்திரிக்க முயற்சிக்கும் வேளையில், அங்கு சோபி வந்து அவரைக் காப்பாற்றுகிறார். சானியர் விட்டுச் சென்ற குறியீடுகளை வைத்து, ராபர்ட் லேங்டனும் சோபியும், “Holy Grail” என்னும் இரகசியத்தைக் கண்டுபிடிக்க முயல்கின்றனர். இவர்களை பொலிஸாரும், Opus Dei-ஐ சேர்ந்தவர்களும் துரத்த, இவர்களும் ஓடுகின்றனர். இவர்களின் முயற்சி பல திருப்பங்களையும், பல மறைக்கப்பட்ட தகவல்களையும் வெளிக்கொண்டு வருகின்றன.

இது தான் லியோனார்டோ டா வின்சியின் “The Last Supper” என்னும் பிரபல ஓவியம். இவற்றில் இருக்கும் “Holy Grail” என்னும் மதுக்குடுவையைத்தான்

# எழுத்தின் இயங்கியல்

## உடலைப் பயன்படுத்தல்–01

ந.மயூரரூபன்



ஒரு சமூக வெளியில் உடல் எவ்வாறு வெளிப்படுகிறது அல்லது அது எவ்வாறு உணரப்படுகிறது என்பது மிக முக்கியமானது. ஒரு மனிதனின் சிந்தனை அல்லது அவனது சமூகக் குழுமத்தின் சிந்தனை என்பது இதனூடாக வெளிப்படுவதற்கு சாத்தியமா
கிறது. ஒரு தனிமனிதனின் அல்லது சமூக குழுமத்தின் தொன்மம், சடங்கு, வரலாறு, பண்பாடு உளவியல் அமைப்பு, நம்பிக்கைகள் என அனைத்தும் இங்கு தங்களை இனங்காட்டிக் கொள்கின்றன.

குறிப்பாக உடல் வெளிப்படுதல் என்பது இரண்டு அடிப்படைப் புரிதல்களால் ஆனது.

1. உடல் பயன்படுதல்
2. உடலைப் பயன்படுத்தல்

இங்கு உடல் பயன்படுதல் என்பது ஒரு தனிமனிதனுக்கு அல்லது அவன் சார் குழுமத்திற்கு அவர்களது ஒவ்வொரு இருப்பின் அடையாளங்களை வெளிக்காட்டுவதற்கான இயல்பான வெளிப்பாடாக நாம் புரிந்து கொள்ளலாம்.

எடுத்துக்காட்டாக வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்படுகின்ற சடங்குகளில் உடல் எவ்வாறு பயன்படுகிறது என்பதைப் பார்க்கமுடியும். குறிப்பாக காதுகுத்தல் சடங்கு, மரணச் சடங்கு, காவடி, கரகம், என்கிற வெளிப்பாட்டு வடிவங்கள், கும்மி, கபடி, கோலாட்டம் போன்ற கிராமியக் கூறுகள், காற்பந்து, கரப்பந்து, போன்ற சமகால பிரபல விளையாட்டுக்கள், குத்துச் சண்டை, றெஸ்லிங், கராத்தே போன்ற உடலை மூலதனமாகக் கொண்ட பாதுகாப்புக் கலைகளோடு இணைந்த விளையாட்டுக்கள் எனப் பலவற்றைப் பார்க்க முடியும்.

அதே போல் உடலைப் பயன்படுத்தல் என்பது எமக்கு தெரியாத வகையில் அல்லது நாம் அவற்றைப் கவனப்படுத்தாத வகையில் உடல் பயன்படுத்தப்படுவதைக் காணமுடியும்.

குறிப்பாக நாம் மேற்காட்டிய சடங்குகள்கூட எமது புரிதலில் எமது உடல் காலந்தோறும் பயன்படுத்தப்படுவதாக நாம் உணர்ந்து கொள்ளலாம்.

வியாபார நிறுவனங்கள், தொலைக்காட்சி நிறுவனங்கள், திரைப்படங்கள் என வியாபார நோக்கில் உடலைக் காட்சிப்படுத்துகின்ற விடயங்களையும் நாம் கண்டு கொள்கிறோம்.

இவ்வாறான உடலைப் பயன்படுத்தல் மற்றும் உடல் பயன்படுதல் என்கிற இரண்டு வடிவங்களும் இரண்டு அடிப்படைகளால் புரிந்து கொள்ளக் கூடியது.

1. தானே தன் உடலை பயன்படுத்தல்
2. இன்னொருவரது உடலைப் பயன்படுத்தல்

இங்கு தானே தன் உடலைப் பயன்படுத்தல் என்பது, ஏதோவொரு நோக்கத்திற்காக அது சமயம் சார்ந்ததாக, சடங்கு சார்ந்ததாக, வியாபாரம் சார்ந்ததாக என எதுவாக இருந்தாலும் ஒருவர் தன்னுடைய உடலைத் தானே அதற்காக பயன்படுத்தல் என்பதாகும். அதாவது ஒரு விளையாட்டில் ஈடுபடுகின்ற ஒரு விளையாட்டு வீரனை நாம் இதற்கு உதாரணமாகச் சொல்லமுடியும்.

இன்னொருவர் உடலைப் பயன்படுத்தல் என்பது, மிக முக்கியமானது ஒரு சமூகம், ஒரு குழு தனது அதிகாரத்திற்காக, அடையாளத்திற்காக வியாபாரத்திற்காக, கௌரவத்திற்காக இன்னொருவரது உடலைப் பயன்படுத்துவதாக அமைகிறது. குறிப்பாக பேயோட்டுதல் சடங்கு, உடன் கட்டை ஏறுதல் (குறித்த காலப்பகுதியில் இந்து மத வாழ்க்கையில் இருந்த ஒரு பிற்போக்குத்தனமான செயன்முறை. கணவன் இறந்த அதே சிதையில் மனைவியும் உடன் எரிதல்), ஃபோர்னோ கிராப் படங்கள் (பாலியல் உணர்வைத் தூண்டுவதற்காகஃ சுரண்டுவதற்காக தயாரிக்கப்படுகின்ற பாலியல் திரைப்படங்கள் மற்றும் வன்முறைகள்)

'இத்தகைய ஒரு முற்புரிதல் என்பது உடலைக் குறியாக்குதல் என்பதாக நாம் விளங்கிக் கொள்ளமுடியும். சமூக உளவியல் உடல் எவ்வாறு ஒரு குறியீடாகப் பயன்படுத்தப்படுகிறது' என்று விளக்குகிறது. ஒரு சமூகத்தினது, இனக்குழுவினது, மதக்குழுவினது, குறித்த கொள்கை கொண்ட குழுவினது, போராட்டக் குழுவினது, சித்தாந்தக் குழுவினது என பல்வேறு குழுக்கள் தங்களது அடையாளப்படுத்தலை உடலுக்கூடாக வெளிப்படுத்துகிறார்கள் இங்கு உடல் குறியாகிறது.

குறிப்பாக உடலை அலங்கரித்தல், உடலில் ஊசிகள், வளையங்கள், பச்சை குத்துதல், உடை, வர்ணங்கள் பயன்படுத்தல், மேடைகளில் - பொது அரங்குகளில் உடலை வெளிப்படுத்துதல், நிர்வாணம் என உடலைக் குறியாக வெளிப்படுத்திக் குறித்த குழுவினது அடையாளத்தைச் செய்தியைப் பகிருகின்ற தன்மைகளை நாம் அனைத்து சமூகங்களிலும் இனங்கண்டு கொள்கிறோம்.

உடலை நாம் பின்வரும் வகைகளில் குறிகளாகப் பயன்படுத்த முடிகிறது என அடையாளப்படுத்த முடியும். எனினும் அதைவிட எமது சமூகத்தில் பல்வேறு குறிகளை இனங்கண்டுகொள்வதற்கான வாய்ப்புகளுண்டு.

1.இறைத்தன்மையை வெளிப்படுத்தல், 2.சடங்கு, 3. கலை, 4.அரசியல், 5.விடுதலைஃபோராட்டம், 6.பொருளாதாரம் / சுரண்டல், 7. பழிவாங்கல், 8.மூடநம்பிக்கை

இவை உடல்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கான தெரிந்தெடுக்கப்பட்ட சில குறிகாட்டிகள்.

இங்கு இறைத்தன்மையை வெளிப்படுத்தலில் உடல் எவ்வாறு இருக்கிறது என்பது கவனத்திற்குரியது. மதங்களின் கடவுளர் உருவாக்கத்தை நாம் கவனித்தாலே இதனை நாம் புரிந்து கொள்ளமுடியும்.

இந்து கடவுளரான சிவன், பிள்ளையார், முருகன், விஷ்ணு என்கிற ஆண் கடவுளர்களின் தோற்றமும் பார்வதி, லஷ்மி, சரஸ்வதி, காளி போன்ற பெண் தெய்வங்களின் தோற்றங்களும் கவனத்திற்குரியது. குறித்த கடவுளரின் தோற்ற (அதாவது கடவுளர்கள் உருவாக்கப்பட்ட) காலத்தில் இயல்பு நிலைக்கேற்ற வகையில் ஆண் கடவுளர்கள் மேற்சட்டையின்றி அரையில் உடையும், தார்பாச்சிக்கட்டிய உடை (இந்தியாவின் இந்துத்துவ ஆரிய தோற்ற வகைமையுடன் ஒப்பு நோக்கத்தக்கது) தலையில் கிரீடம், தோலின் நிறம், ஆபரணங்கள் என்பன சமூக வாழ்க்கையின் ஒரு வகை பிரதிபலிப்பு.

அதேபோல் பெண் கடவுளர்கள் அனைவரும் சேலை அணிந்திருப்பர், உடல் நிறைய நகை அணிந்திருப்பர், இங்கு கடவுளர்களின் தோற்றத்தில் அதிகார மனமும், விருப்பு மனமும் செயற்பட்டிருப்பதை நாம் கண்டுகொள்கிறோம்.

குறிப்பாக இயேசு கிறிஸ்துவினுடைய உருவாக்கம் தோற்றப் படிமம் என்பதும் குறித்த செய்தியை மக்களிடத்தில் சரியாகக் கடத்துவதற்கான உடல் வெளிப்பாடாக அமைகிறது. "மக்களுக்காக பாடுகள் சுமந்தவர்" என்கிற செய்திக்கு சிலுவையில் அறையப்பட்ட இயேசு மிகப் பொருத்தமான வெளிப்பாட்டு வடிவமாக அமைகிறார்.

சடங்கு என்பது ஒரு சமூகத்தின், சமயத்தின் தொடர்ச்சியான இயக்கத்திற்கு மிக முக்கியமான பணியாற்றும் கூறாக அமைகிறது. சடங்குகளில் சில உடலை துன்புறுத்தும் வகையில் அமையப் பெற்றதாகக் காணப்படுகிறது. உடல் என்பது வலியைத் தரக்கூடியது. வலியைக் காணிக்கையாக்குகின்ற ஒரு விடயத்தினையும் அதனூடாக கடவுளுடன், ஆவியுலகத்துடன் தொடர்பு கொள்ளுகின்ற தன்மையினையும் நாம் புரிந்து கொள்ளமுடிகிறது.

குறிப்பாக எம்மத்தியில் காணப்படுகின்ற காவடி, தீ மிதித்தல், தலையில் தேங்காய் உடைத்தல், பேயோட்டுகின்ற சடங்கு முறைகள் இவ்வகையில் கவனத்திற்குரியவை. குறிப்பாக, மிகப்பெரும் மக்கள் கூட்டத்தின் முன்பாக மாயன் அரசன் ஒரு சடங்கு மேடையில் தன் தன் ஆண்குறியைக் குத்தித் துளைத்து ஒரு மெல்லிய நாணலை மூன்று முறை அதற்குள் செலுத்தி வெளியே எடுத்துக்காட்டும் போது அவன் சாகாத உலகத்தவரோடு (டுயனெ ழக வாந ரனெநயன) தொடர்பு கொள்ளும் தன் ஆவியுலகத் திறமையை வெளிப்படுத்துகிறான் என்கிற பதிவு ஒன்றுண்டு இது ஒரு வகை.

பொதுவாக பூர்விக சமூகங்களில் (Primitive Society) இவ்வாறான சடங்குகளை இனங்காணலாம். மூர்க்கமான, இரத்தத்துடனான, துன்புறுத்தல் மற்றும் சுயசித்திரவதை சார்ந்த வெளிப்பாடுகளாக இவை அமைகின்றன.

அரசியலில் அதற்கான தோற்றப் பொலிவில் தன்னை வெளிப்படுத்துதல், வெள்ளை உடை அணிதல், நிறத் துண்டு அணிதல் என்கிற அடையாளங்கள் மிகக் கவனத்துக்குரியவை.

அதேபோல் விடுதலை / போராட்ட குழுக்கள் ஆயுதங்களைக் கையாளுதல், சயனைட் குப்பி அணிதல், குண்டுடன் தானும் வெடித்துச் சிதறல் (கரும்புலி வகைமை ) என உடலைப் பயன்படுத்துகின்ற தன்மையை இனங்கண்டு கொள்ளலாம்.

பொருளாதாரம் மற்றும் பழிவாங்கலுக்காக உடலைப் பயன்படுத்தகின்ற போக்குகள் சம காலத்தில் அதிகம் காணமுடிகின்றது. குறிப்பாக தற்போது ஃபமிலி மான்-2 (Family man- 2) என்கிற வெப்சீரிஸ் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் இலங்கைத்தமிழ் விடுதலைப் போராளியாகக் காட்டப்படுகின்ற 'ராஜி' என்கிற (நடிகை சமந்தா) பெண்ணினுடைய உடல் மொழி, பாத்திரப் படைப்பு அந்த சீரிஸ் தயாரித்தவர்களின் வியாபார நோக்கத்திற்கு அல்லது பழிவாங்கல் நோக்கத்திற்கு துணைநிற்கின்றதா? என்கிற சர்ச்சை உண்டு. அதேபோல் அந்த சீரிஸில் சமீர் என்கிற பாகிஸ்தான் மேஜர், முஸ்லிம்கள் தொடர்பான பார்வை என்பது இந்துத்துவ உடல் இஸ்லாமிய உடலை எவ்வாறு பார்க்கிறது என்பதற்கான குறிகாட்டி.

உடலைப் பயன்படுத்துதல் என்பது பிரதிகளில் எவ்வாறு நிகழ்கிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கு மேற்காட்டிய சிறு புரிதல் துணை செய்யக்கூடும்.

## நினைவுப் பறவை



இறக்கைகளை
வெட்டி வீழ்த்தி
உயர உயரப்
பறக்கச் சொல்லி
துயரப் புன்னகையை
வீசுகிறது காற்று.

மனது,
நினைவுள்
அமிழ்ந்து அமிழ்ந்து
மீளமுடியா வலிகளுடன்
உயரப் பறக்கையில்

பூமியில் இருந்து
அழுகின்றன
வெட்டி எறியப்பட்ட
இறக்கைகள்.

தனித்திருக்கும்
இறக்கையற்ற பறவை
நினைவுகளை மீட்டியபடி
பறக்க எத்தனித்தபடியே
இருக்கிறது.

யாத்ரிகன் -



# வடக்குக் கிழக்கை இணைத்த அரசியல் செயற்பாடே இன்றைய தேவை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜ தந்திர சந்திப்புக்களையோ மேற்கொள்ளும் போது கிழக்கு மக்களையும் கிழக்குத் தலைவர்களையும் கருத்திற் கொள்ளாத போக்கே நிலவி வந்திருக்கிறது. இத்தகைய போக்கு தமிழ் அரசியலில் பிரதானமாக நான்கு நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது.

1.தமிழ் முஸ்லிம் முரண்பாடு
2.வடக்கின் அதிகாரத்தைக் கிழக்கில் திணிக்கின்றமை
3.பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பு
4.சர்வதேச வல்லரசுகளின் ஆக்கிரமிப்பு

முதலாவது,வடக்குக்குரிய அரசியல் பார்வையினைக் கிழக்கிற்குப் பயன்படுத்த முடியாது. வடக்கிற்குப் பயன்படுத்திய தந்திரோபாயங்களைக் கிழக்கிற்குப் பயன்படுத்த முடியாது. கிழக்கிற்கென வேறுபட்ட தந்திரோபாய முன்னெடுப்புக்களைக் கைக்கொள்ள வேண்டியுள்ளது. திருகோணமலை மாவட்டத்தைத் தவிர அம்பாறை, மட்டக்களப்புத் தமிழ் மக்கள் பெரும்தேசியத்துடன் எதிர்கொள்ளும் முரண்பாட்டை விட முஸ்லிம்களுடனான முரண்பாடு வலுவானது. இத்தகைய முரண்பாட்டினை நீக்கி முஸ்லிம்களுடன் ஐக்கியத்திற்குப் போகவேண்டிய தேவை தமிழ்த் தேசியத்துக்கு இருக்கிறது. ஆனால் இன்றைய கள யதார்த்தம் அதற்குச் சாதகமானதாக இல்லாமல் இருப்பது கவலையளிக்கிறது.





தந்தை செல்வா தனது காலத்தில் வடக்கினையும் கிழக்கினையும் மிகக் கவனமாகக் கையாண்டு வந்துள்ளார். இவர் முஸ்லிம்களையும் கருத்தில் கொண்டே தமிழ்த் தேசியக் கோட்பாட்டினை முன்வைத்திருந்தார். முஸ்லிம்கள் அதற்குப் பெருமளவில் ஆதரவளிக்கவில்லை. முஸ்லிம் மக்களைப் பொறுத்த வரையில் தங்களை ஒரு தனியான தேசிய இனமாகத்தான் அடையாளப்படுத்த விரும்புகின்றனர். தமிழர்களுடன் தங்களை இணைத்துக் கொள்வதில் அவர்கள் நாட்டம் காட்டவில்லை. முஸ்லிம் தேசியவாதம் எழுச்சி அடைந்தது கூட பெருந்தேசிய வாதத்திற்கு எதிரானதாக அல்ல தமிழ்த் தேசிய வாதத்திற்கு எதிராகத்தான். முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் தமிழர்களோடு இணைந்து செயற்படுவதை விடவும் சிங்களத் தரப்போடு இணைந்து செயற்படவே விரும்பினர். அதற்குப் பல காரணங்களும் இருந்தன.

முதலாவது, முஸ்லிம் தரப்பினர் தமது அரசியல் நலன்களை வடக்குக்கிழக்காக கையாள விரும்பவில்லை. முழு இலங்கைக்குமான அரசியல் நகர்வினையே அவர்கள் சிந்தித்து இருந்தார்கள். வடக்குக் கிழக்கிற்கான தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்தால் தென் இலங்கையில் வாழுகின்ற முஸ்லிம்கள் பாதிக்கப்படுவார்கள் என்பது அவர்களது எண்ணமாக இருந்தது. முஸ்லிம் தரப்பினர் எப்போதும் ஒரு சமூகமாக தமிழர்களோடு சேர்ந்து இயங்குவது கிடையாது. தமிழரசுக் காலத்திலும் சரி ஆயுதப் போராட்டம் வலுப் பெற்ற காலத்திலும் சரி தனி நபர்களாகவே தமது பங்கிளிப்பினைச் செய்து இருந்தார்கள். இதில் மலையகத் தலைவர்கள் தெளிவான பார்வை உடையவர்களாக இருந்தார்கள். வடக்குக்கிழக்குக்கான அரசியல் வேறு, மலையகத்துக்கான அரசியல் வேறு என்பதே அவர்களின் தெரிவாக இருந்தது. இத்தகைய அரசியல் போக்கினைக் கிழக்கு முஸ்லிம் எடுத்திருக்கலாம். ஏனெனில் கிழக்கு முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் தமிழர்களோடு சேர்ந்து வாழுகின்ற சூழல் இருப்பதால் அவர்கள் தமிழர் தரப்போடு இணைந்த வகையில் அரசியல் முன்னெடுப்பை மேற்கொள்வது பொருத்தமானது. ஆனால் அவர்கள் சிங்கள அரசோடு இணைந்து செயற்படுவதன் மூலமே தமக்கான நலனைப் பெறமுடியும் என நம்புகின்றனர். இதனால் இவர்கள் தமிழ்த் தரப்போடு இணைய விருப்பம் கொள்ளவில்லை.

இரண்டாவது, முஸ்லிம் தரப்பினர் எதிர்ப்பு அரசியலுக்குத் தயாராகி இருக்கவில்லை. இணங்கிப்போகும் அரசியலுக்குத்தான் தங்களையும் தங்களது மக்களையும் பழக்கப்படுத்தியிருக்கிறார்கள். அது அவர்களுக்குப் பல நலன்களையும் ஏற்படுத்தியிருந்தது. போராட்ட அரசியலுக்கு வரவேண்டும் என்றால் முதலில் எதிர்ப்பரசியல் நடத்தியிருக்க வேண்டும்.

மூன்றாவது, தமிழ்த் தரப்பினருடனான நீண்டகாலத்துப் போர் காரணமாக சிங்கள அரசு முஸ்லிம்களைத் தங்களுடன் இணைத்துச் செயற்பட்டது. அதற்கு அவர்கள் முஸ்லிம்களுக்குப் பல சலுகைகளையும் வழங்கி கிழக்கில் அவர்கள் மேலாதிக்கம் செலுத்தக்கூடிய வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தனர். இவற்றினை முஸ்லிம்கள் இழக்கவிரும்பவில்லை.

நான்காவது, வடக்குக்கிழக்குத் தமிழ் மக்களுடன் இணைந்து கொண்டால் தங்களுடைய விகிதாசாரம் குறைந்துவிடும் என்று எண்ணினார்கள். இதனால் தங்களுடைய நலன்கள் பாதிக்கப்படும் என்பது அவர்களின் அச்சமாக இருந்து.

ஐந்தாவது, தமிழர் தரப்பிடம் எழுச்சி பெற்ற ஆயுத ரீதியான அணுகுமுறை. இதனால் பெரிதும் முஸ்லிம் மக்கள் பாதிப்புக்குள்ளாகியிருந்ததனால் அவர்கள் தமிழருடனான ஐக்கியத்தினைக் கடைப்பிடிப்பதில் விருப்பற்று இருந்தார்கள்.

இத்தகைய நிலைமைகள் முஸ்லிம்களைத் தமிழர் தரப்போடு இணைந்து செயற்படுவதனை இல்லாமல் செய்து வந்திருக்கிறது எனலாம். இதற்கு எமது தமிழ்த் தேசியத்தரப்பும் சரியான வழிமுறைகளைக் கையாண்டு செயற்படவில்லை. தந்தை செல்வா தனது காலத்தில் முஸ்லிம் மக்களைத் தனித்த ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டு தனது அரசியல் செயற்பாட்டினை முன்னெடுத்தமை இங்கு குறிப்பிடத்தக்க விடயம். அவர் முஸ்லிம்கள் சுயமாக இயங்குவதற்கும் தீர்மானங்களை எடுப்பதற்கும் உரித்துடையவர்கள் என்பதனை ஏற்றுக்கொண்டாலும் அவர்கள் தமிழ் பேசுபவர்கள் என்பதனால் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களோடு இணைந்து செயற்பட வேண்டும் என்றும் விரும்பியதோடு அவர்களை உள்ளடக்கி தமிழ்த் தேசியக் கோட்பாட்டினை முன்வைத்தமையும் முக்கியமானது. இதனை எமது தற்போதைய தமிழ்க் கட்சிகள் முன்னெடுக்கத் தவறியிருக்கின்றனர். முஸ்லிம்களின் நலனை, அவர்களின் தனித்துவத்தினை எழுத்தில் கொண்டு வருவதனை விடவும் வாழ்வுமுறையாகக் கொண்டு வரவேண்டும். முஸ்லிம் மக்களோடு ஐக்கியத்துக்குப் போகாமல் கிழக்கை வடக்கோடு இணைத்து வைத்திருக்க முடியாது. அவர்களுடன் ஐக்கியத்துக்குப் போவதற்கு கோட்பாட்டு ரீதியான வழிமுறைகளைக் கையாள வேண்டும் அதில் இரண்டு விடயங்கள் முக்கியமானது.

ஒன்று, வடக்கு,கிழக்கு முஸ்லிம் மக்களுக்கும் தாயகம் என்பதனை ஏற்றுக் கொள்ளவேண்டும். இரண்டாவது, அவர்கள் ஒரு தேசிய இனம் என்பதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இத்தகைய புரிதலோடு செயற்பட்டால்தான் வடக்குக் கிழக்கை இணைத்து செயற்பட முடியும். இங்கு எழுகின்ற முக்கியமான உடனடிப்பிரச்சினைகளாக, ஒன்று அதிகாரத்தினைப் பகிர்ந்து கொள்ளுதல், இரண்டாவது வளங்களைப் பகிர்ந்து கொள்ளுதல். இதற்குச் சரியான அணுகுமுறைகளைக் கையாளுவதன் மூலம் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம். அதற்கான முயற்சிகளை மேற்கொள்வது பொருத்தமானது.

இரண்டாவது, வடக்கின் அதிகாரத்தினைக் கிழக்கில் திணிக்க முற்படுகின்றமை. இது நீண்டகாலமாக நிலவி வருகின்றதொரு போக்கு. இதற்குக் காரணம் காலணித்துவ ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த சமமற்ற தன்மை. வடக்குப் பகுதியினர் தமக்குக் கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்தி கல்வியில், வேலை வாய்ப்பில் முன்னிலை வகித்தனர். இத்தகைய வாய்ப்பு கிழக்கிற்குக் கிடைக்கவில்லை. வடக்கு மக்களின் வளர்ச்சியானது அவர்களை மட்டக்களப்புப் பகுதியை கணக்கில் எடுக்காது செயற்படும் போக்கிற்கு இட்டுச் சென்றது. இது அவர்களை பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியிருந்தது. இதுதான் யாழ் எதிர்ப்புச் சங்கம் மட்டக்களப்பில் தோன்றவும் காரணமாகியது. ஆனால் தந்தை செல்வாவின் அரசியல் வரவுக்குப்பின் ஓரளவு மாற்றம் அடைந்திருந்தது. இவர் முக்கியமான மூன்று வகையான அரசியல் செயற்பாட்டினை முன்வைத்திருந்தார். ஒன்று, இனஅரசியலைத் தேசிய அரசியலாக மாற்றியமை, இரண்டாவது, அதற்கென்றான சமஷ்டிக் கோரிக்கையினை முன்வைத்தமை, மூன்றாவது மக்களை இணைத்த போராட்டங்களை முன்னெடுத்தமை போன்றனவாகும். இத்தகைய அரசியல் போக்கும் வளரும் போதுதான் கிழக்கையும் இணைத்த அரசியல் நடவடிக்கையினை முன்னெடுக்கக் கூடியதாக அமையும். பிரதேசவாத அணுகுமுறையினை இல்லாமல் செய்வதற்குத் தந்தை செல்வா இரண்டு அணுகுமுறைகளைக் கையாண்டார்.

1. பொதுத்தேர்தலில் வடக்கைச் சேர்ந்தவர் கிழக்கில் போட்டியிடாமல், கிழக்கில் இருப்பவரே போட்டியிடுவதற்கான சாத்தியத்தினை ஏற்படுத்தியிருந்தார்.

2. தமிழரசுக்கட்சியின் முக்கியமான பதவிகளில் ஒன்றினைக் கிழக்கிற்குக் கொடுத்தார்.

இத்தகைய நிலைமையினைத் தொடர்ந்து வந்த அரசியல் தலைமைகள் முன்னெடுக்கத் தவறி விட்டதாகவே தோன்றுகிறது. கிழக்கு அரசியல் பிரதிநிதி கள் சுயமாக இயங்கக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தி அங்குள்ள பிரச்சினைகளை அவர்கள் கையாளக்கூடிய நிலைமையினை ஏற்படுத்தியிருக்கவேண்டும். அதிகாரம் முழுவதனையும் ஒருசாரார் வைத்திருந்ததன் காரணத்தினால் கிழக்கில் அடைந்துகொள்ள வேண்டிய முக்கியமான விடயங்கள் தவறிப்போயிருக்கின்றன. இத்தகைய நிலைமையினை மாற்றியமைப்பதற்குரிய செயற்றிட்டத்தினை முன்னெடுக்க வேண்டிய அவசியத் தேவை தற்போது எழுந்துள்ளது என்பதனை தமிழ் அரசியல் தலைமைகள் புரிந்துகொள்ள வேண்டும்.

மூன்றாவது, பேரினவாதிகளின் நில ஆக்கிரமிப்பு, அம்பாறை மாவட்டத்தில் தொடங்கி திருகோணமலை வரை மேற்கொள்ளப்பட்டு வந்த சிங்களக் குடியேற்றத்தின் மூலம் தங்களது பலத்தினை அதிகரித்து வந்தார்கள். இத்தகைய நில ஆக்கிரமிப்பின் மூலமும் சிங்களக் குடியேற்றத்தின் மூலமும் கிழக்கில் வாழும் தமிழர் தரப்பு அரசியல் ரீதியாக பலமற்றுப் போயிருக்கிறது. இத்தகைய காலப் பகுதியில் தமிழரசுக் கட்சி போராட்டங்களை முன்னெடுத்து அவ்வாக்கிரமிப்புச் செயற்பாட்டினை வலுவிழக்கச் செய்திருக்க வேண்டும் ஆனால் அவர்கள் அதனைச் செய்யவில்லை. கிழக்கு மக்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் அவ்வாறான போராட்டங்களைச் செய்வதற்குரிய பலத்தினைக் கொண்டிருக்கவில்லை. அதேபோல வடக்கினையும் கிழக்கினையும் திட்டமிட்டுப் பிரித்ததன் மூலம் கிழக்கு மக்களின் அரசியல் பலத்தினை அரசு சிதறடித்துள்ளது. இதனை இப்படியே விடமுடியாது. வடக்குக்கிழக்கினை இணைத்துப் பலப்படுத்தும் வேலைத்திட்டங்களைச் சரியான புரிதலுடன் முன்னெடுக்க வேண்டும்.

நான்காவது, சர்வதேச வல்லரசுகளின் ஆக்கிரமிப்பு, இது குறிப்பாக திருகோணமலையினை மையப்படுத்தியதாகவே அமைந்திருக்கின்றது. திருகோணமலை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் அங்கு துறைமுகத்தினை அண்மித்த பகுதிகளில் தொழிற்சாலைகளை நிறுவுதல், பொருளாதார மேம்பாட்டினை மேற்கொள்ளக்கூடிய செயற்றிட்டங்கள் முன்வைக்கப்பட்டமை போன்ற செயற்பாடுகள் வலுவாகக் காணப்படுகின்றது. இதனையும் தமிழர் தரப்பு கவனத்தில் எடுத்து அவர்களுடன் சமரசமான உடன்பாட்டுக்குச் சென்று தமிழர்களின் நிலம் பறிபோகாமல் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான ஒழுங்கமைப்பினைச் செய்யலாம்.

இத்தகைய அடிப்படையில் நோக்கும் போது வடக்கும் கிழக்கும் புரிதலின் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்படாமல் தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்க முடியாது. தனித்திருந்து எதனையும் சாதிக்க முடியாது. அவ்வாறு சாதிப்பதாகக் கூறிச்சென்ற கருணாவும் பிள்ளையானும் பெரிதாக எதனையும் சாதித்து விடவும் இல்லை. இத்தகைய போக்கு தமிழ்த் தேசிய அரசியலைப் பெருந்தேசிய அரசியலோடு கரைப்பதான ஆபத்தினை ஏற்படுத்திவிடும். இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்த் தேசியவாதிகள் முஸ்லிம்களுடனான சரியான புரிதலை ஏற்படுத்தி இரண்டு தரப்பும் இணைந்து மாகாணசபையினைக் கைப்பற்றி செயற்பாட்டினை முன்னெடுப்பதன் மூலம் சில மாற்றங்களைக் கிழக்கில் ஏற்படுத்த முடியும். இதனால் அவர்களை இணைத்து செயற்படக்கூடிய வழிமுறைகளை யோசிக்கவேண்டும். இதற்கு நீண்ட உரையாடல் அவசியமானது. இதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் கவனம் செலுத்தவேண்டும் ■





# மொழித்தேசியத்தைப் பிரதியிட முடியுமா, மதத்தேசியம்?

ஆதித்த கரிகாலன்

**(சம்பவம் 01)** சங்குப்பிட்டிப் பாலத்தின் அருகில் வீதியோரத்தில் வைக்கப்பட்ட பிள்ளையார் சிலையொன்றை - அனுமதி பெறாத சிலையெனக் கூறி வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அகற்றியதால் அவ்விடயம் காவற்துறை மூலம் நீதிமன்றுக்குப் போனது. அப்பிரதேசத்திற்குப் பொறுப்பான கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளரின் மதத்தினை குறிவைத்து - சிலையை அகற்றுவதற்கான பின்னணி விவகாரம், மாவட்டச் செயலாளர் மற்றும் வடக்கு மாகாண பிரதம செயலாளர் வரை இணைத்து இழுக்கப்பட்டது. பிறகொரு நல்ல நாளில் சங்குப்பிட்டியில் பிள்ளையார் சிலை மீள வும் வந்தமர்ந்தது.

**(சம்பவம் 02)** வலிகாமம் வடக்கில் புகழ்பூத்த உயர்தரப் பாடசாலையொன்றில் மாணவர்கள் சைக்கிள் தரிக்கப் பயன்படுத்தும், பழைய அதிபர் விடுதியிருந்த காணியொன்று தமக்குரித்தானதென்று அத்துமீறி உள்நுழைந்தனர், மிஷனரியொன்றினை சேர்ந்த மதக் குருக்களும் அவர்களின் ஆதரவாளர்களும். எதிர்த்துக் கேள்வி கேட்கப் போன பாடசாலை மாணவர்கள் மீது மரந்தடிகளாலும் - கற்களாலும் குறித்த மதக்கும்பல் கொலை வெறித் தாக்குதல் நடாத்த முனையும் காணொளிகள் வெளியாகின. மூன்று மாணவர்கள் காயப்பட்டு - வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள். விடயம் - நீதிமன்றுக்கு போனது. காணிக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் படி பராமரிப்புரிமை பாடசாலைக்குரியதென தீர்ப்பிடப்பட்டது.

வடக்கில் கடந்த மூன்று மாதங்களுக்குள் நிகழ்ந்த இச் சம்பவங்கள் வெறுமனே, ஒரு சோற்றுப்பதம் தான். மதங்களினைப் பெயர் சுட்டிக் குற்றஞ்சாட்டும் சம்பவங்களும் - வெறுப்பூட்டும் பேச்சுக்களும் - மதங்களின் பெயரோடு இனங்காட்டும் குழுக்களுமாகி, இடம்பெற்றிருக்கும் இந்தத் திடீர் மதவேகத்தின் பின்னால் பெயரிடப்பட முடியாத ஆனால் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான செல்நெறியொன்று திட்டமிடப்பட்டு வழிப்படுத்தப்படுகின்றதா? என்ற சந்தேகம் எழுகின்றது.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டமும், அதற்கு முன்னைய தமிழ்த் தேசியக் கருத்துருவாக்கமும், ஒரு மொழியினை முன் வைத்த தேசியவாதக் கருத்தினால் பின்னப்பட்டு வலுப்படுத்தப்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கருத்துருவாக்கத்தினை



பலவீனப்படுத்துவதற்கான எந்த முயற்சியிலும் 2009 வரை மதத் தேசிய வாதம் பேசுவோரின் முனைப்புக்கள் தாக்கம் செலுத்தியிருக்கவில்லை. அதற்கான அனுமதியும் கிடைப்பதில்லை. ஆயுத மௌனிப்பிற்குப் பிறகான அடுத்த தசாப்தத்தில் தமிழ்த் தேசிய பரப்பினுள் கிடைத்த வெற்றிடம் - மொழித்தேசியமொன்றுக்குப் பதிலாகி மதத் தேசியங்களினால் பிரதியிடப்படுவதற்கான முயற்சியை, பெரிதும் வரவேற்பவர்களாக இத்தீவின் ஆட்சியளர்களான சிங்கள - பௌத்த பேரினவாதிகளே இருக்கப்போகின்றனர்.

1969 இல் இருந்து திட்டமிடப்பட்ட ரீதியில் பௌத்த சிங்களப் பேரினவாதிகள், தமிழ்த் தேசிய இனத்தின் மீது வன்மத்துடன் கட்டவிழ்த்து விட்ட இன வன்முறைகள், நான்கு தசாப்த காலங்களாக மேலும் தூண்டப்பட்டு 'இன - அழிப்பு' என்ற மனித குலத்திற்கு எதிரான குற்றமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. 'போரும் - போரின் விளைவுகளும், குறிப்பிடப்படுகின்ற ஒரு இனக் குழுமத்தின் மீது இன்னொரு இனக்குழுமத்தினால் கட்டமைக்கப்பட்டு, மக்களுக்கு அழிவினை ஏற்படுத்துவதாக இருப்பதனால்', அதனை இன அழிப்பு / இனப்படுகொலை என்ற பதத்தினால் வரைவிலக்கணப்படுத்துகின்றன, சர்வதேசச் சட்டங்கள். இலங்கை எனும் அமைதியிழந்த தீவு - தற்போது சர்வதேசங்களிடம் பிடிபட்டுள்ள கடிவாளக் கயிறு - இந்த இனப்படுகொலைக் குற்றங்கள் என்பதை பௌத்த - சிங்களப் பேரினவாதிகளும் அவர்களின் நேச நாடுகளும் நன்கறிவர். சர்வதேசச் சட்டங்கள் காலங்கடந்தும் இனப்படுகொலைகளுக்கான கடுமையான தண்டனைகளை வழங்கிய கடந்த வரலாறுகளையும் சிங்களம், இலகுவில் மறந்துவிடுவதில்லை.

சிங்களவர்கள் - தமிழர்கள் என்ற இரு இனக்குழுக்களுக்கும் இடையிலான பிரச்சினை, இத்தீவில் சிங்களம் - தமிழ் என்ற இரு மொழித் தேசியங்களுக்கு இடையிலான நூற்றாண்டுப் பிணக்கு இன்றளவும் எழுதப்பட்டும் - ஆவணப்படுத்தப்பட்டுமிருக்கிறது. தனியொரு இனத்தின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தவதற்கும், சிறுபான்மையின மக்கள் மீதான இன அடக்குமுறைகளுக்கும் காவலாக இருக்கும் பௌத்தமும் - சிங்களமும், இலங்கையின் ஆட்சியாளர்களால் தேவைக்குப் பயன்படுத்தும் குருதிக்கறை படிந்த இரு வாள்களாகவே பயன்படுத்தப்பட்டன - பயன்படுத்தப்பட்டும் வருகின்றன.

இரு பெரும் மொழித் தேசியங்களுக்கிடையிலான பிணக்கின் / இனப்பிரச்சினையின் வேரைத் தேடிப் புறப்பட்டால், மொழியின் வயதால் சிங்கள மொழியின் தாய்மொழிக்கெல்லாம் தாயாகி நிமிர்ந்து நிற்கிறது செம்மொழிப் பெருமையுடைய தமிழ் மொழி. இப்பெருமையால் தமது இருப்பையும் - தமது ஆதிக்கத்தையும் மேன்நிலைக்குக் கொண்டுவர இயலாதென்பதையும் பௌத்த சிங்களவர்கள் அறயாமலில்லை! வரலாறு தமக்கு அந்நியமாகும் போது, இந்த வரலாற்றின் ஆவணமாக்கலை தமக்கு நெருக்கமாக நிகழ்த்தும். இதன் அடிப்படைதான் மகாவம்சப் புரளிக்கதைகளும், இலங்கை முழுதும் சிங்கள பௌத்தம் வேரூன்றியிருந்ததாகக் காட்டும் தொல்பொருள் ஆய்வுகளும் ஆகும். இத்தகைய பொய்களையும் புரளிகளையும் பரப்புவதில் வல்லவர்களாக இருக்கும் சிங்களத் தேசிய இனம் - தமிழ்த்தேசிய இனத்தின் மீது கொண்டு வரப்படுகின்ற மதங்களை முன்னிலைப்படுத்தி

தமிழ்த் தேசிய மக்கள் மத்தியில் மதவாதமும் மதவெறியும் பேசும் எவரும் செய்யும் சிறு செயலும், சிங்கள பௌத்த பேரினவாதினகளுக்கு செய்யும் பேருபகாரமாகும். ரேினவாதத்தின் ஆதிக்கத்தால் இழப்புக்களையும் அழிவுகளையும் துயரங்களையும் சந்தித்த வந்த மக்கள் கூட்டம் தமிழ் தேசியத்தின்பால் ஒன்றிணைத்து பேரினவாத சக்திக்கு எதிராகப் போராடிவரும் நிலையில், இவர்கள் இவ்வொற்றுமையினையும் போராட்டத்தினையும் அச்சத்துடன் எதிர்நோக்கும் காலத்தில் மதம் அடிப்படைவாத்தினால் கூறுகளாகப்பிரிந்து சிதறும் நிலைக்கு உள்ளாகும் போது எதிரி அதனைக் கொண்டாடவும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவும் முனைப்புக் கொள்வார்கள் என்பது வெளிப்படை. இது அவர்களுக்கு இனிப்பான ஒரு செய்தியாகவும் அமையும்.

எழுகின்ற பிளவுகளையும் முரண்பாடுகளையும் பெருங்கரகோஷத்துடன் வரவேற்கப் பின்னிற்காது என்பது தெளிவானதொன்று. இத்தகைய பிளவுகள், முரண்பாடுகள் ஆட்சியாளர்கள் தம்மைப் புனிதப்படுத்தவும் நியாயப்படுத்தவும் மேற்கொள்ளும் புனைவுகளுக்கு பின்வரும் இரு வழிமுறைகளில் உதவும் என்பதனை அவர்கள் புரிந்து வைத்துள்ளமையும் வெளிப்படையானது.

01. இனக்குழுமங்களுக்கு இடையில் நிகழ்த்தப்பட்டது, இனப்படுகொலை இல்லை. மதம் சார்ந்த முரண்பாட்டின் பிரதிபலிப்பு. காரணம் இலங்கையில் நிகழ்ந்துவரும் வன்முறைகள் மதக் குழுமங்களுக்கு இடையில் எழுகின்ற சிறு மோதல் என்பதனை நிறுவுதல்

02. வரலாற்றினால், மோதியுடைக்க முடியாத மாவலுவுடன் தம்மெதிரே நின்ற தமிழ்த் தேசியம் கூறுகளாகி சிதைக்கப்படுவதும் - இனியெப்போதும் நிமிர முடியாத நிலையை அடைவதும்.

தமிழ்த் தேசிய மக்கள் மத்தியில் மதவாதமும் மதவெறியும் பேசும் எவரும் செய்யும் சிறு செயலும், சிங்கள பௌத்த பேரினவாதினகளுக்கு செய்யும் பேருபகாரமாகும். ரேினவாதத்தின் ஆதிக்கத்தால் இழப்புக்களையும் அழிவுகளையும் துயரங்களையும் சந்தித்து வந்த மக்கள் கூட்டம் தமிழ் தேசியத்தின்பால் ஒன்றிணைத்து பேரினவாத சக்திக்கு எதிராகப் போராடிவரும் நிலையில், இவர்கள் இவ்வொற்றுமையினையும் போராட்டத்தினையும் அச்சத்துடன் எதிர்நோக்கும் காலத்தில் மதம் அடிப்படைவாதத்தினால் கூறுகளாகப் பிரிந்து சிதறும் நிலைக்கு உள்ளாகும் போது எதிரி அதனைக் கொண்டாடவும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவும் முனைப்புக்கொள்வார்கள் என்பது வெளிப்படை. இது அவர்களுக்கு இனிப்பான ஒரு செய்தியாகவும் அமையும்.

இது தமிழ்த் தேசியத்திற்கு ஆபத்தான நிலை, தொடர்ந்தும் நீடித்தால் தமிழ்த்தேசியம் கேள்விக்குறியாகிவிடும். இதனைச் சரியாகக் கணக்கிட்டு தமிழ்த் தேசிய வாழ்ப்பரப்பில், மதவாதப் பின்னணியோடு இயங்குகின்ற - மதவாத வெறுப்பூட்டும் பேச்சுக்களோடு (Hate Speech) அரங்கத்திற்கு வருகின்ற - மதங்களின் சாயங்களை முகமூடியாகக் கொண்டு மக்கள் அரசியலுக்குள் தம்மை முன்னிலைப்படுத்துகின்ற எல்லாத் தனிநபர்களும் / குழுக்களும் / அமைப்புக்களும், பாரபட்சமின்றி தமிழ்த் தேசிய அரசியல் ஏந்து பரப்பிலிருந்து விலக்கி வைக்கப்பட வேண்டும்!

இனவிடுதலையொன்றே, இலட்சியக் கனவென உயிர்நீத்த எண்ணற்ற தமிழ்த் தேசிய ஆன்மாக்களுக்கு நாம் இயற்றும் பெருங்கைமாறு அஃதே!! ■




# மீண்டும் விமர்சனம்

சி.விமலன்

நாடுகளுக்கிடையிலான ஐக்கியத்தினையும் புரிந்துணர்வினையும் கட்டி எழுப்புவதற்கு விளையாட்டுக்கள் ஒரு பாலமாக இருந்து வருகின்றன. அவ்வப்போது இனவெறி போன்ற பாகுபாடுகளினால் சில விரும்பத் தகாத சம்பவங்கள் நடைபெற்றாலும் அக்குற்றங்களை நிகழ்த்துவோர் மீது சம்பந்தப்பட்ட விளையாட்டுத்துறை சார் உயர் அமைப்புகள் தண்டனைகளை வழங்கி விளையாட்டினால் ஏற்படும் நல்லெண்ணத்திற்கு ஊறு ஏற்படாத வகையில் செயற்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் தான் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னதாக இங்கிலாந்து அணியினர் இனவெறி, மத சகிப்பின்மை, பாலினப் பாகுபாடு உட்பட கிரிக்கெட்டில் நிலவும் பிற பாகுபாடுகளுக்கு எதிரான தமது நிலைப்பாட்டை ஒற்றுமையின் தருணமாக வெளிப்படுத்தி இருந்தனர். குறிப்பாக பாகுபாடுகளுக்கு எதிரான வாசகங்கள் பொறித்த கறுப்பு நிற ரீ-சேர்ட் அணிந்து அவர்கள் அதனைச் செய்திருந்தனர்.

கறுப்பின மக்களுக்கெதிரான பொலிஸாரின் வன்முறை மற்றும் இனரீதியான ஏனைய வன்முறைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் அரசியல் மற்றும் சமூக இயக்கமே பிளைக் லைவ்ஸ் மேற்றர் (Black Lives Matter) என அழைக்கப்படுகின்றது. அமெரிக்காவில் 2012 பெப்ரவரியில் 17 வயது ஆபிரிக்க - அமெரிக்கரான ட்ரைவோன் மார்ட்டின் என்ற சிறுவனை படுகொலை செய்த வெள்ளையினத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் சிம்மர்மன் அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் 2013 ஜூலை விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சமூக வலைத்தளங்களில் தொடங்கப்பட்ட ஹஸ்ராக்கான பிளைக் லைவ்ஸ் மேற்றரே இதன் தோற்றுவாயாகும்.



2020 ஆம் ஆண்டு அமெரிக்காவில், ஆபிரிக்க - அமெரிக்கரான ஜோர்ஜ் பிளாயிட், பொலிஸ் ஒருவரால் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்ட பொழுது உலகெங்கிலும் பிளைக் லைவ்ஸ் மேற்றர் மீண்டும் தீவிரம் பெற்றது. அந்த வகையில் விளையாட்டுத் துறையில் உள்ளவர்களிலும் பிளைக் லைவ்ஸ் மேற்றர் இயக்கத்தோடு உடன்பாடானவர்கள் போட்டி ஆரம்பமாகும் பொழுது முழந்தாளிட்டு உறுதி எடுத்து வருகின்றனர்.

அதற்கமைய இங்கிலாந்து அணியினரும் கடந்த வருடம் மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான டெஸ்ட் தொடரின் பொழுது அவ்வாறு செய்திருந்தனர். ஆனாலும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பாகிஸ்தான் மற்றும் அவுஸ்ரேலிய அணிகளுடனான தொடரின் பொழுது அதனை இங்கிலாந்து அணியினர் செய்யவில்லை. இது குறித்து கடந்த வருடமே மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளரான மைக்கல் ஹோல்டிங் 'மேற்கிந்தியத் தீவுகள் அணி தற்போது நாட்டுக்குத் திரும்பி விட்டது. எனவே இனி அந்த விடயத்திற்கு மதிப்புக் கொடுக்கக்கூடாது என்பதல்ல' என்று விமர்சித்திருந்தார்.

அதனால் தான் இங்கிலாந்து கிரிக்கெட் சபை, நியூசிலாந்து உடனான தொடரில் பாகுபாடுகளுக்கு எதிரான எதிர்ப்பினை ஒற்றுமையின் தருணமாக வெளிப்படுத்துவதற்கு அனுமதி வழங்கியதாகக் கருதப்பட்டது. அந்தவகையில் பாகுபாடுகளுக்கு எதிரான நிலைப்பாட்டை இங்கிலாந்து அணியினர் வெளிப்படுத்தி இருந்தனரே தவிர முழந்தாளிட்டு உறுதி எடுக்காததால் மீண்டும் சர்ச்சையைக் கிளப்பி இருக்கின்றார் மைக்கல் ஹோல்டிங்.

இது குறித்து அவர், இப்போது இங்கிலாந்து அணி என்ன செய்கிறதென்றால் பிளைக் லைவ்ஸ் மேற்றர் இயக்கத்திற்கு ஆதரவளிக்காமல் பாகுபாடுகளுக்கு எதிராக ஒற்றுமையின் தருணத்தை வெளிப்படுத்தியமையானது எல்லா உயிர்களும் முக்கியமானவையே என்றதொரு அர்த்தத்தை அளிப்பதாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.




அதேவேளை இங்கிலாந்து உதைபந்தாட்ட வீரர்கள் யூரோ கிண்ணத் தொடருக்கான பயிற்சி ஆட்டங்களில் முழந்தாளிட்டு உறுதி எடுத்ததைப் பார்த்த ரசிகர்கள் சிலர் அதனால் வெறுப்படைந்து கீழ்த்தரமான செயல்களைச் செய்தனர். ஆனாலும் இங்கிலாந்து அணியினரோ யூரோ கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளிலும் அதனைச் செய்வதற்கு உறுதி அளித்துள்ளனர். அவர்கள் சொல்கிறார்கள் 'நாங்கள் என்ன செய்கிறோம் என்று எங்களுக்குத் தெரியும். ஏனென்றால் இது அரசியல் இயக்கத்திற்காக அல்ல, மனிதாபிமானக் காரணங்களுக்காக இதனைச் செய்கிறோம்' என்று தெரிவித்துள்ளதைச் சுட்டிக்காட்டிய மைக்கல் ஹோல்டிங் அவர்களைப் பாராட்டியுள்ளார்.



# நீக்க உத்தரவு






சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்த நாடுகளில் உக்ரைனும் ஒன்று. இங்குள்ள தன்னாட்சி உரிமை பெற்ற கிரீமியா, ரஷ்யாவை ஒட்டியுள்ளது. இங்கு வாழ்பவர்களில் பெரும்பாலானவர்கள் ரஷ்யர்கள். 2014 இல் உக்ரைனில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் கிரீமியா பகுதியை ரஷ்ய ராணுவம் ஆக்கிரமித்தது. அதற்கு கிரீமியா பகுதியைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் ஆதரவு தெரிவித்தனர். அத்தோடு உக்ரைனிடம் இருந்து விடுதலை பெற்று ரஷ்யாவுடன் இணையவும் கிரீமியா விருப்பம் தெரிவித்தது. அதற்கான தீர்மானம் கிரீமியா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதையடுத்து கிரீமியா சட்டப்படி ரஷ்யாவுடன் இணைந்தது. இதற்கான ஒப்பந்தத்தில் ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின் கையெழுத்திட்டார். ஆனால் இன்றுவரை உக்ரைனும் கிரீமியாவுக்கு உரிமை கோரி வருகின்றது.

இதை ஏன் நினைவு படுத்துகிறேன் என்றால் தற்போது நடைபெற்று வரும் யூரோ கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் உக்ரைனும் விளையாடி வருகின்றது. இந்தத் தொடருக்காக அவர்கள் அணிந்து கொள்ள இருந்த சீருடையில் பொறிக்கப்பட்ட கிரீமியாவை உள்ளடக்கிய வரைபடமும் இராணுவம் தொடர்பான வசனமும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து ரஷ்யா, ஐரோப்பிய உதைபந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்திடம் (UEFA) புகார் அளித்தது. இதைத் தொடர்ந்து சீருடையில் உள்ள வரைபடம் ஒரு பிரச்சினை இல்லை. அது போல Glory to Ukraine என்ற சொற் தொடரும் பிரச்சினை இல்லை. ஆனால் இரண்டு கோஷங்களின் கலவையானது வரலாறு மற்றும் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் இயல்புடையதாகக் காணப்படுகிறது. எனவே அவை சீருடையில் இருந்து அகற்றப்பட வேண்டும் என UEFA உக்ரைனுக்கு உத்தரவிட்டது. இதனால் நெதர்லாந்துடனான முதல் போட்டியில் வேறு புதிய சீருடையுடனேயே உக்ரைன் களமிறங்கியமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக உக்ரைன் ஜனாதிபதி புதிய சீருடையுடன் செல்பி ஒன்றை எடுத்து இன்ஸ்ரகிராமில் இது ஒற்றுமையின் சின்னம் என வெளியிட்டிருந்தார். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ரஷ்ய வெளியுறவு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் விளையாட்டை அரசியலுடன் கலக்கக் கூடாது. விளையாட்டு ஒரு போர்க்களம் அல்ல. அது போட்டிக்கான களம். இது அரசியல் அரங்கம் அல்ல. விளையாட்டு வீரர்களாக மாறுங்கள். உங்கள் புகழ் உங்களுக்கு கிடைக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள நீடா குழுமத்தினரால் 19.06.2021 அன்று வெளியிடப்பட்டது,